ஏப்ரல் 03 – 09, 2005
April 03 - 09, 2005

16.00 24 பக்கங்கள்


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## பீதி ஏற்படுத்திய அந்த ஒருசில மணி நேரங்கள்



## சங்கடத்தில் சந்திரிகா



## தீர்வுக்கு வழி பிளவுதானா?



## திசைமாறப்போகும் கொழும்பு அரசியல்

## புடைவைக்கு இனி குட்பாய்

# சங்கடத்தில் சந்திரிகா

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பொன்றை விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தனது கூடுதல்பட்ச முயற்சிகளை எடுத்து வருகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் இவ்வாறான கட்டமைப்பொன்றின் மூலம் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கி, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற யோசனைக்கு அப்பால் இதனை எவ்வாறு எதிர்த்து தடுத்து நிறுத்திவிடலாம் என்ற சிந்தனையே சிங்கள இனவாதிகளிடையே மேலோங்கி இருக்கிறது.

இவற்றுக்கு மேலாக ஒருபடி மேலே போய் சிங்கள இனவாதிகளின் கூட்டாளிகளான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சிங்கள பௌத்த அடிப்படைவாத அரசியல் குழுவான ஜாதிக ஹெல உறுமய என்பன பொதுக் கட்டமைப்பை பகிரங்கமாகவே எதிர்க்க ஆரம்பித்துள்ளன.

வழமையாக சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பைச் சமாளிக்க குறைந்தபட்சம் அறிக்கை ஒன்றையாவது விடுக்கும் அரசாங்கம் இம்முறை ஏன் மௌனமாக இருக்கிறது? வழமையாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்துக்களை சர்வதேசத்துக்கு பரப்பிவரும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் இப்போதெல்லாம் தனது தொனியைத் தணித்திருப்பது ஏன்? ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதான பங்காளியும் கூட்டுப் பொறுப்பை வகிக்கின்ற கட்சியுமான ஜே.வி.பி.இதனை எதிர்ப்பது ஏன்?

இவற்றிற்கெல்லாம் ஒரே விடையே இருக்கின்றது. அதுதான் ஜனாதிபதியின் இராஜதந்திர திட்டங்கள். ஜனாதிபதி தனது அரசியல்வாழ்வின் தீர்க்கமானதொரு சந்தர்ப்பத்தில் இருந்து கொண்டு மேற்கொள்ளும் ராஜதந்திர திட்டங்களே இவை. சமாதான முயற்சிகளுக்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கம் கூடுதலான ஆர்வம் காட்டுவதுதன் காரணம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சிரத்தையென்று எவரும் கருதினால் அது அவர்களின் அறிவின்மையைக் காட்டுவதாகவே அமையும்.

ஜனாதிபதி பதவியை ஏற்ற பின்னர் தனது ஆட்சிக்காலத்தில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கிருந்த பல சந்தர்ப்பங்களை ஜனாதிபதி சந்திரிகா நழுவவிட்டுள்ளார். அதேவேளை அமைதி முயற்சிகள் தமது பதவிக் காலத்தில் சீர்குலைந்து போயின என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகவும் சந்திரிகா விரும்பவில்லை. எனவேதான் பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்தினூடாக காய்நகர்த்துகிறார் அவர்.

ஜனாதிபதி சந்திரிகா முன் இப்போது இரண்டு பிரதான விடயங்கள் இருக்கின்றன. ஒன்று சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்பை திருத்தி பிரதமர் ஆட்சியொன்றுக்கு வழிவகை செய்தல், இரண்டாவது நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலொன்றுக்குச் செல்லுதல். இதில் எதைச் செய்தாலும் சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுபட்டுப் போவதென்பது தவிர்க்க முடியாதது.

ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்தி அதன் மூலம் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு சந்திரிகா ஒருபோதும் விரும்பமாட்டார். ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் பதவிகளை பறித்து எடுத்ததுபோல் ஜனாதிபதி வேட்பாளர் பதவியையும் மகிந்த வலுக்கட்டாயமாக எடுப்பாராயின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு சாரார் அவருக்கு எதிராகவே பிரசாரங்களை செய்வரென்பது திண்ணம்.

சிலவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட பிரமுகரும் தனது குடும்ப விசுவாசியான ரட்னசிறி விக்கிரமநாயக்கவை ஜனாதிபதியாக்கி, பிரதமர் பதவியை தாம் ஏற்று நாடாளுமன்றத்திற்கு வந்து அரசியலமைப்பைத் திருத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக தொடர்ந்து பதவியில் இருக்கவும் ஜனாதிபதி தீர்மானிக்கலாமென்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேசமயம் ஜனாதிபதித் தேர்தலொன்று வருமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவுஏற்படும் வாய்ப்புக்களே அதிகம். வேட்பாளராக ரட்னசிறியை நியமித்தால் தனக்கு ஏற்பட்ட அநீதியை மகிந்த ராஜபக்ஷ மக்களிடையே கூறுவதற்கு முற்படுவார். மகிந்த, ரட்னசிறி இவர்களில் யார் போட்டியிட்டாலும் தமிழர்களின் வாக்கு வங்கிகள்தான் இவர்களைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். இந்த ஆழிப்பேரலை நிவாரணத்திற்கான அடிப்படைக் காரணம் இதுதான். தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு அரசு பயன்படுத்தும் யுத்தியே இது.

## கூட்டுச் சேர்வது யார்?

ஜனாதிபதி சந்திரிகா இனி நகர்த்தும் அரசியல் காய்கள் முக்கியமானவை. ஆனால், அவருக்குத் தேவையான பக்கபலம் இல்லை. அரசியலமைப்பை திருத்துவதற்கு அவர் யோசனை செய்தாலும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் போன்ற நிபுணர்கள் அவர் அருகில் இல்லை. சரிதான் சிங்கள மக்களின் மனங்களை வெல்லலாம் என்று சிந்தித்தாலும் எஸ்.பி.திஸநாயக்க போன்ற திட்டவகுப்பாளர்கள் இல்லை. அமைச்சர்களான கதிர்காமர், மங்கள, அனுரா, ரட்னசிறி போன்றவர்கள் சந்திரிகாவிற்கு அருகில் இருந்தாலும் அவர்களால் ஆவது ஒன்றுமில்லை என்பதை சந்திரிகா உணர்ந்திருக்கிறார் என்பதுபோல் தெரிகிறது. இதனால்தான் தனக்கு மிகவும் நெருக்கமானவர்களை அடிக்கடி எஸ்.பியிடம் அனுப்பி சில விடயங்களை பேசும் முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுவருகிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் நகர்வுகளுக்கு ஒத்துழைப்பவர்களின் வீதம் வெகுவாக குறைந்து வருகிறதென்பது அரசியல் விமர்சகர்களின் பொதுவான கருத்தாக இருந்து வருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இதில் முதலாவது தான் ஜே.வி.பியினருக்கு இன்று நடந்திருக்கும் கதி! 'சந்திரிகாவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பப் போகிறோம், நாட்டை வளப்படுத்துவோம்' என்று கூறியவர்கள் இன்று அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கான நாட்களை எண்ணிக்கொண்டு ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு ஆளாகியிருக்கின்றனர். ஜே.வி.பியின் சில உறுப்பினர்கள் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கும் கருத்துக்களைப் பார்க்கும் போது சந்திரிகாவின் அரசியல் நகர்வுகளுக்கு எவரும் துணைபோகமாட்டார்களென்பது உறுதி.

இரண்டாவது, சந்திரிகாவை நம்பி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு வந்தவர்களுக்கு நடந்த கதி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஆளுங்கட்சிக்கு மாறிய உறுப்பினர்கள் பலருக்கு ஏற்கனவே பேரம் பேசப்பட்ட தொகை இதுவரை முழுமையாகக் கிடைக்கவில்லையென்று அந்த உறுப்பினர்கள் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கும் கருத்துக்களைப் பார்க்கும் போது சந்திரிகாவின் அரசியல் நகர்வுகளுக்கு துணைபோகப் போவது யார்?

சந்திரிகா உறுதியான ஒரு அரசியல் கொள்கை இல்லாதவர். அடிக்கடி தனது அரசியல் வேலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பார் என்றதொரு எண்ணம் அரசியலில் பரவியிருப்பதானது, சந்திரிகாவின் நல்ல பல திட்டங்களுக்கும் தடையையே ஏற்படுத்துகிறதென்பது தான் வேடிக்கை. ஐக்கிய தேசியக் கட்சி இதை நன்கு புரிந்து கொண்டுள்ளதென்பது அக்கட்சியின் அரசியல் நகர்வுகள் மூலம் புலப்படுகிறது.



எவர்பக்கம் இப்போ காற்று?

## ஜே.வி.பி என்ன செய்யும்?

பொதுக்கட்டமைப்பு, சமாதான முயற்சிகள், சர்வஜன வாக்கெடுப்பு, அரசியலமைப்புதிருத்தம், ஜனாதிபதி தேர்தல் என்றவாறு அரசியல் நகர்வுகளை சந்திரிகா மேற்கொண்டிருக்கும் நிலையில் ஜே.வி.பி தனது அரசியல் நகர்வுகளை எப்படி மேற்கொள்ளப் போகின்றது?

என்னதான் பிரச்சினை இருந்தாலும் அரசாங்கத்திலிருந்து வெளியேறாமல் ஆட்சியின் பங்காளிகளாக இருந்து கொண்டு தமது பலத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் ஜே.வி.பியின் திட்டமாக இருக்கிறது. 1956 ஆம் ஆண்டில் இடதுசாரிகளான பிலிப் குணவர்த்தன போன்றோருக்கு 1970 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா போன்றவர்களுக்கும், 1977 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் என்ன நடந்ததென்பதை ஜே.வி.பியினர் நன்கு அறிந்தே வைத்திருந்தனர்.

ஜே.வி.பி. என்ன செய்கிறது என்பதை மக்கள் கூர்ந்து பார்க்கின்றனர் என்பதும் ஜே.வி.பியினருக்குத் தெரியும். எனவே என்னதான் சண்டையிட்டுக் கொண்டாலும் ஜே.வி.பி. அரசுடன் ஒட்டிக்கொண்டுதானிருக்கும். அடுத்த தேர்தலொன்றில் தனது வாக்குவங்கிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு முன்னர் தமது கீழ்மட்ட தொண்டர்களை அரசியலில் அதிருப்தியடையாமல் வைத்திருப்பதே ஜே.வி.பியின் இப்போதைய முக்கிய பணி. அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போகிறோம் என்று ஜே.வி.பி கூறலாம். ஆனாலும், ஜே.வி.பி அரசை விட்டு வெளியேறாது.

— சிவன் —

# திசைமாறப்போகும் கொழும்பு அரசியல்




## தொழிச்சங்கவாதி துரை பங்களாவில்

''இது என்னசார் பெரிய அதிசயமாக இருக்கு நாங்க சந்தா கட்டுகிறோம், சங்கத்துக்கு காசு கட்டுகிறோம். எங்களோட பிரச்சினைகளைப் பேச வேண்டியவர்கள் தோட்டத்தில் பங்களாவில் உல்லாசமாக திரிகின்றனர்''

இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகின்றார் ஹாலி எல பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு தோட்டத்தலைவர்.

''என்ன ஐயா, தலைவரே இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுகின்றீர்கள் கொஞ்சம் விவரமா சொல்லுங்க'' என்றோம்.

''நான் ஒன்றும் பொய் சொல்ல வில்லைங்க. அத்தனையும் சத்தியம். எங்க தலைவர்மாரை மந்திரிமாராக மாற்றி அமைத்தவர்கள் நாங்கள்.

எங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம், வறுமையைப் போக்கிறோம் என்று மேடைகளில் முழங்கினார்கள். நாங்களும் இவர்களை நம்பி ஓட்டு போட்டோம்.

ஆனால் நாங்கள் இன்னும் ஓட்டைலயத்தில் தான் வசிக்கின்றோம். எங்க மந்திரி மட்டும் தோட்டத்து துரை பங்களாவில் சுதியாக குடியேறிவிட்டார் என்று வேதனையுடன் கூறுகின்றார் உணுகவ தோட்டத் தலைவர். இது எப்படி இருக்கு?

## தும்புக்கட்டைக்கு பட்டுக் குஞ்சமா?

''என்னதான் இருந்தாலும் இந்த மனிசன் இப்படி தலைகால் புரியாமல் தடுமாறக் கூடாது. தும்புக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியதுபோல இப்படி தட்டைத் தலையை தடவித்தடவிக் கொண்டு மற்றவர்களின் வயிற்றெரிச்சலை வாங்கிக்கட்டிக் கொள்ளக் கூடாது.''

இப்படி பொரிந்து தள்ளிக் கொண்டே கண்டீனில் இருந்து வெளியே வந்தார் அந்த கிழக்குச் சீமையார்.

''என்ன ஹாஜி வயிறார சாப்பிட்டுவிட்டு வரும்போது யாரை வாழ்த்திக் கொண்டு வருகின்றீர்கள்?'' என மெதுவாகப் பேச்சை கொடுத்தார் நண்பர்.

''அடடா வாங்க சார். நீங்கள் வந்ததைப் பார்க்கவில்லை கண்டிருந்தால் வாயை திறந்திருக்க மாட்டேன்'' என்றார் கிழக்கு சீமையார்.

''என்ன ஐயா பாதியைக் கக்கிவிட்டீர்கள்; மீதியை சொன்னால் என்ன தலையா மூழ்கிவிடப்போகிறது?'' என சீண்டினார் நண்பர்.

அதுவும் சரிதான் சொல்லாவிட்டால் கன்னா பின்னாவென்று எழுதித் தள்ளி விடுவீர்கள் நானே சொல்லி விடுகின்றேன்'' என ஆரம்பித்தார்.

''இங்கபாருங்க சார்! இப்ப அடிக்கடி அந்த டி.வி. பெட்டியில முகத்தைக் காட்டி பேப்பர் பற்றி விமர்சனம் செய்யிராரே அவரைப் பற்றித்தான் சொல்ல வந்தேன்.

இந்த ஆள் முந்தி ஏரிக்கரை ஏட்டிலே கொப்பிரைட்டரா அதாவது மொழி பெயர்ப்பாளரா வந்தவராம். அங்கேயும் செக்கு செல்லவில்லையாம். நிர்வாகத்தை மதிப்பதில்லையாம். தான் பெரிய ஆள் என்ற நினைப்பாம்.

இதனால் நிர்வாகம் இவரை ஒரே உதையாக உதைத்துத் தள்ளியதாம். கடைசியில் சென்றல் நியூஸ் பூலில் போய்விழுந்தாராம். பாவம் பிள்ளை குட்டிக்காரன் பிழைத்துப் போகட்டும் என்று அக்கேயே விட்டு வைத்தனராம்.

பாவம் இந்த ரூபவாஹினிக்கு வந்த கெட்ட நேரம். எங்கட கிழக்கில கடைசியில் சர்புர் கைர் எனப்பெயர் கொண்ட ஒரு நபரின் காலை, கையைப் புடிச்சி அரச ஊடகத்திற்குள் புகுந்து விட்டாராம்.

அங்கேயும் சும்மா இருக்க வானாமா, எல்லாமே நான் தான் எனக்கு தெரியாதது எதுவுமே இல்லை என்று துள்ளிக் குதிக்கின்றாராம். தனக்கு வேண்டிய ஆளுகலோட சேதிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆரவாரமா புகழ் பாடுகின்றாராம். எங்கட நியூஸ்களுக்கு இருட்டடிப்பு செய்கிறார்.

அதுமட்டும் இல்லீங்க பேப்பர் வாசிக்கும் போது கூட அதில ஓட்டை இதில் ஓட்டை என்று மேதாவித்தனத்தைக் காட்டுகின்றாராம். வடை தின்ன வந்தால் வடை தின்னுப் போட்டு போகாம எத்தனை ஓட்டை, அந்த ஓட்டை பெரிசு-இந்த ஓட்டை சிறிசு என்று குதர்க்கம் பேசுகின்றாராம்.

இவருடைய மேதாவித்தனம் இப்போது எல்லாருக்கும் எரிச்சலை ஏற்படுத்தி உள்ளதாம். எங்கட எம்.பி.மார் பத்துப் பேர் ஒப்பம் வைத்து ஒரு ரிப்போட் ஒன்றும் கொடுத்துள்ளோம்.

இவரோட வேலையைப் பார்த்தால் பழைய தும்புக்கட்டைக்கு பட்டுக் குஞ்சம் கட்டினமாதிரி எண்டு கதைக்கினம் என்று அலுத்துக் கொண்டார் கிழக்குச் சீமை சின்னத்தம்பி.

# சூடு பிடித்து வரும் புலனாய்வுப் போர்

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், நேரடியாக நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப் பட்டது. எனினும் மறைமுகமான தாக்குதல்களும் புலனாய்வு யுத்தமும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இரு தரப்புக்களுக்குமிடையே நடைபெற்று வந்த நிழல் யுத்தம் தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணா தரப்பினரை ஸ்ரீ லங்கா புலனாய்வுப் பிரிவினர் அரவணைத்துக் கொண்டு புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பதன் விளைவே இன்று கிழக்கில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் ஆகும். புலிகள் தமது புலனாய்வு செயற்பாட்டை தீவிரப்படுத்தி வருகின்றனர். கருணாகுழுவின் முக்கிய உறுப்பினர்கள் மீது குறிவைக்கப்பட்டுவருகிறது. அரச படைகளின் அத்து மீறிய சம்பவங்களால் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் நிலைமை உருவாகியது.

ஆனால், கடந்த வருட இறுதிப்பகுதியில் நாட்டை கோரமாக தாக்கிய சுனாமி பேரழிவினால் அரசியல், இராணுவ நகர்வுகளில் சடுதியான மாற்றம் ஏற்பட்டது. ஆழிப் பேரலை நிலமையை மாற்றிவிட்டது. ஆகவே இனிவரும் சிறு காலத்திற்கு இருளடைந்த உலகத்துக்குள்ளால் உளவாளிகளினாலேயே அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டிய தேவை இருதரப்புக்குமே ஏற்பட்டு இருக்கிறது. அரச தரப்பு கருணா குழுவை பயன்படுத்தி அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி போதிய வசதிகளை ஏற்படுத்தி புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டவேளை புலிகளின் உளவுப்படை முன் கூட்டியே புலனாய்வு தகவல்களைப் பெற்று அவற்றை முறியடித்து வருகிறது. இதனால் மட்டு நகரை விட்டு சற்று பின்நகர்ந்து மட்டு எல்லையிலுள்ள பொலனறுவையின் தீவுச்சேனை பிரதேசத்தில் முகாம் அமைத்து இராணுவ உளவுப்பிரிவும் கருணாகுழுவும் இணைந்து செயற்பட்டுவந்தன.

இதனாலேயே கடந்த மாதம் தீவுச்சேனைக்கு அண்மையில் அமைந்துள்ள வெலிகந்தப் பிரதேசத்தில் வைத்து புலிகளின் மட்டு – அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனை சுலபமாக சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் செல்லவும் முடிந்தது. கௌசல்யனின் கொலையை மேற்கொண்ட தாக்குதல்தாரிகள் கௌசல்யன் செல்லும் பயணப் பாதையையும் சம்பவ இடத்தை வந்தடையும் நேரத்தையும் முன்கூட்டியே துல்லியமான புலனாய்வுச் செயற்பாடுகள் மூலம் அறிந்திருந்தனர் என்பது புலனாகின்றது.

இக்கொலையை அரசபுலனாய்வுப் பிரிவே கருணா குழுவுடன் இணைந்து நடத்தியதாக புலிகள் குற்றம் சாட்டிய போது அப்படி ஒரு குழுவுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தெரிவித்து அரச தரப்பு நாடகமாடியது.

இக்கொலைச் சம்பவத்துடன் விழிப் படைந்த புலிகளின் புலனாய்பிரிவு தனது புலனாய்வுச் செயற்பாட்டை தீவிரப்படுத்தியிருந்ததன் விளைவே தீவுச்சேனையில் நடந்தப்பட்ட தாக்குதல் ஆகும்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டேலீடர்' பத்திரிகை படங்களின் ஆதாரத்துடன் தீவுச்சேனையில் உள்ள கருணா குழுவினரின் முகாம் பற்றிய செய்தியை வெளியிட்டது. அச்செய்தி பரபரப்பாக அனைத்து ஊடகங்களிலும் வெளிவரவே திகைப்படைந்த இராணுவப்புலனாய்வுப் பிரிவு இராணுவ பேச்சாளரின் ஊடாக அதற்கு மறுப்பு வெளியிட்டது. ஆனால் பத்திரிகைச் செய்தி வெளியாகி 24 மணி நேரத்துற்குள் முகாம் தாக்கப்பட்டமை இராணுவ புலனாய்வுப் பிரிவை திக்கு முக்காடச் செய்துள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட சிலநேரங்களிலேயே ஸ்தலத்திற்கு விரைந்த படைகள் படுகாயம் அடைந்தகருணாகுழுஉறுப்பினர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றுள்ளனர்.

தமக்கும் கருணாகுழுவினரின் முகாம் விடயத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இராணுவ பேச்சாளர் மறுத்து இருக்கும் போது தாக்குதல் நடத்தப்பட்ட சில நிமிட நேரங்களில் இராணுவம் எப்படி அங்கு செல்லமுடியும் என்ற கேள்வி எல்லோர் மனதில் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

முன்கூட்டியே இராணுவ உளவுப் பிரிவு கருணாகுழுவுடன் இணைந்து மேற்படி முகாமில் இருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை இதன் மூலம் தெளிவாக பலனாகின்றது.

தமிழ்மக்களின் போராட்டம் வலுப்பெற்று சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட அமைதிகாலங்களில் நேரடியுத்தம் ஓய்ந்த நிலையில் புலனாய்வு யுத்தம் மூலம் புலிகளை பலவீனம் அடையசெய்யும் நடவடிக்கைகளை அரச புலனாய்வு பிரிவு காலம் காலமாக மேற்கொண்டு வருகிறது.

ஆனால் புலிகளின் உளவுப் பிரிவு எந்த வேளைகளிலும் புலனாய்வு நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்படுவதால் புலிகளின் புலனாய்வு பிரிவுடன் போட்டி போட வேண்டிய சூழ்நிலை அரச புலனாய்வு பிரிவுக்கு இருக்கிறது.

-தமிழரசன்-


## பதவி வெற்றிடங்கள்

கொழும்பில் உள்ள பிரபல தமிழ்ப் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான சுறுசுறுப்பான ஆண்களிடம் இருந்து தகுந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**MAINTENANCE OFFICER**

வாகனம் / கட்டிடப் பராமரிப்புத் துறையில் குறைந்தது 3 வருட அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். (NCT / NL , அல்லது அதற்குச் சமமான தகைமை உள்ளவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**GRAPHIC DESIGNER**

Desktop Publising, Pagemaker, Coraldraw, Photo shop and scanning ஆகியவற்றில் குறைந்தது 2 வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

**CLERKS**

G.C.E O/L சித்தியடைந்தவராகவும், கணனித்துறையில் பரீட்சயமுள்ளவராகவும், இருத்தல் வேண் டும். முன் அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் (referees) விபரங்களுடன் விண்ணப்பத்தை 31.03.2005 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

THE ADVERTISER
P.O. BOX 2129
COLOMBO.


# NATIONAL CHILD PROTECTION AUTHORITY

NO. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura, Sri Lanka.
Telephone: 94-2778911-14, Fax: 94-2778915, E.mail: ncpa@childprotecrion.gov.lk
Website: http:/www.childprotection.gov.lk

unicef

## சிறுவர் புறக்கணிப்பால் ஏற்படும் விளைவுகள்

ஒரு பிள்ளைக்கு தேவையான அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பன கிடைக்காது போதல் சிறுவர் புறக்கணிப்பு எனப்படும். சிறுவர் உரிமை சம்பந்தமான சட்ட மூலத்தில் சிறுவர்களை புறக்கணித்தல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர்களை புறக்கணித்தல் அல்லது பொருட்படுத்தாது விடல் போன்ற செயற்பாடுகளினால் ஏற்படும் விளைவுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. உடல்ரீதியாக போலவே மலர் போன்ற மென்மையான இதயங்களிலும் நிறைய வலிகள் ஏற்படும் விதத்தில் சம்பவங்கள் ஏற்படுகின்றன.



சிறுவர்கள் புறக்கணிக்கப்படும் அல்லது பொருட்படுத்தப்படாது விடும் சந்தர்ப்பங்கள்.

1) சிறுவர்கள் புறக்கணிக்கப்படல்
2) தனிமைப்படுத்தப்படல் அல்லது (இருட்டறையில் போட்டு வைத்தல்)
3) சிறுவர்களை விமர்சித்தல், பயமுறுத்தல்
4) சிறுவர்களைக் கடுமையாக ஏசுதல், அவர்களின் கைகால்களை உடைத்துப் போடுவதாக பயமுறுத்தல்
5) ஒரு பிள்ளைக்கு தேவையான உணவு, பானம் என்பவற்றை வழங்காது கவனயீனமாக இருத்தல்
6) சுகாதார, ஆரோக்கிய பாதுகாப்புக்களை வழங்காது விடல் (நோய்க்கு மருந்து எடுத்து கொடுக்காமை/ சிகிச்சை வழங்காதிருத்தல்)
7) சிறுவர்களின் அன்றாட நடவடிக்கைக்கு மற்றும் சிறுவர்களின் தேவைகளுக்கு பெற்றார் பங்களிப்பு வழங்காமை, கலந்துக் கொள்ளாமை, மதிப்பளிக்காமை என்பன.

### பரிசுக்கான இவ்வாரக் கேள்வி

1. சிறுவர் புறக்கணிப்பு என்றால் என்ன?
* அனுப்பப்படும் சரியான விடைகளில் பத்து விடைகள் தெரிவுசெய்யப்பட்டு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் பரிசில்கள் வழங்கப்படும்.
* *விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*

ஊடகப்பிரிவு
தேசிய சிறுவர் பாதுகாப்பு
அதிகாரசபை
330, தலவாகொட வீதி,
மாதிவெல.

## பொருட்படுத்தாதுவிடல்

அம்மா, அன்பு அப்பா எனக்கு அழகான உடைகள், உணவுகள், பானங்கள் மட்டும் கிடைத்தால் போதாது. என்னை பொருட்படுத்தாது விடவேண்டாம். எனக்கும் மதிப்பளியுங்கள். என் திறமைக்கு மதிப்பளியுங்கள்

நீங்கள் என்னோடு அன்பாக பேசுவீர்களானால் எவ்வளவு நல்லது. ஆனாலும் நீங்கள் என்னைப்பற்றி எந்தவித அக்கறையும் இன்றி இருக்கும் போது எனக்கு கோபம் வருகிறது. அதுமட்டுமல்ல எனக்கு பெரும் கவலையாகவும் இருக்கிறது.

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,
தலைவர் - பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா
குறிப்பு : குதுமாலி மத்துமகே

தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தினர் கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நிகழ்த்திய மாபெரும் பரிசளிப்பு விழாவும் வாடிக்கையாளர் கௌரவிப்பு நிகழ்வும்







# குமரகுரு

**புடைவை அழகுப்பொருள் வாணிபம்**

**KUMARAKURU TEXTILE & FANCY HOUSE**

யாழ் சாலை, கிளிநொச்சி

Yarl Road, Kilinochchi.

Tel: 021 228 5971

# அமெரிக்காவை அதிரவைத்த மாணவனின் வெறியாட்டம்



-பரா.சந்திரகுமார்

கடந்த சிலநாட்களுக்கு முன்னர் அமெரிக்க பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலை வளாகத்துக்குள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது அமெரிக்காவில் மட்டுமல்ல உலகிலேயே பரபரப்பாக் பேசப்படுகிறது.

அமெரிக்காவின் மினெஸோட்டா மாநிலத்தில் உள்ள ரெட்லேக் உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் ஜெப்வெய்ஸ் என்ற 16வயது மாணவனொருவன் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியான தன் பாட்டானாரின் துப்பாக்கியை எடுத்து தனது வீட்டிலிருந்த பாட்டனாரையும் பாட்டியையும் முதலில் சுட்டுக்கொலை செய்து விட்டு கையில் இரு கைத்துப்பாக்கிகளுடனும் ஒரு ஷாட்கன்னுடனும் பாடசாலைக்குள் நுழைந்து வாசலில் நின்ற பாதுகாப்பு காவலாளியையும் சுட்டுக் கொன்றுவிட்டு உள்நுழைந்தான்.

நேராக தனது வகுப்பறைக்குச் சென்று தன்னுடைய சக மாணவர்கள், வகுப்பறையிலிருந்த ஆசிரியர் ஆகியோரை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் எட்டுமாணவர்களும், 62 வயதான நேவா ரோஜர்ஸ் என்ற ஆசிரியையும் துப்பாக்கி குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். பன்னிரு மாணவர்கள் படுகாயங்களுக்குள்ளாகினர்.

சம்பவ[illegible]டம் பெற்றவேளை சுடுவதை நிறுத்தும்படி ஒரு மாணவி அவனிடம் மன்றாடிக் கேட்ட வேளை அவளை பார்த்து சிரித்த படியே அவள் மீதும் அவன் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார். அந்த மாணவியும் உயிரிழந்தார். உள்நுழைந்தவுடன் சில மாணவர்களை நோக்கி துப்பாக்கியை நீட்டி அவர்களை பயமுறுத்திவிட்டு சட்டென வேறு மாணவர்களை நோக்கி அவன் தாக்குதல் நடத்தியதாக மேலும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி அறிந்த பொலிசார் மேற்படி பாடசாலைக்கு விரைந்த வேளையிலே அவர்களை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தவே பொலிசாரும் மாணவனை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்தனர். தப்பித்துச் செல்ல முடியாது போகவே இறுதியில் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு அவன் தற்கொலை செய்து கொண்டான்.

அந்த மாணவன் எதற்காக இந்தக் கொலைகளை புரிந்தான் என்றுஅறியமுடியவில்லை எனவும் பலகோணங்களில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் விசாரணை மேற்கொண்டுள்ள பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சகமாணவர்களிடம் மேற்படி மாணவனைக் குறித்து ஊடகவியலாளர்கள் விசாரித்த போது, அவன் ஒரு ஆண்டுக்கு முன்பே பாடசாலை மாணவர்கள் அனைவரையும் சுட்டுக் கொல்லப் போவதாக கூறியதாகவும் தன்னுடைய இணையத் தளத்தில் தனது பெயரை "மரணத்தின் தேவதை" என குறிப்பிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. தான் ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருடைய அபிமானி என்றும் ஹிட்டலர் மிகச் சிறந்த ஒரு ஆட்சியாளர் எனவும் மேற்படி மாணவன் அடிக்கடி சகநண்பர்களிடம் கூறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1999 ஆம் ஆண்டு கொலராடோவில் உள்ள கொலம்பைன் பாடசாலையில் 14 மாணவர்கள் சக மாணவனொருவனால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு இதுவே மிகப்பெரிய சம்பவம் ஆகும்.

அமெரிக்காவில் மட்டுமல்ல பல ஐரோப்பிய நாடுகளில் இலாப நோக்கத்திற்காக துப்பாக்கிகளும், பயங்கர ஆயுதங்களும் பெருமளவில் வெளிப்படையாகவே விற்கப்படுவதும் பொது மக்கள் சிலர் துப்பாக்கிகளை வைத்திருக்க அரசுகள் அனுமதி வழங்குவதுமே சிறுவர்கள் முதல் கிரிமினல்கள் வரை இப்படியான வெறியாட்டங்களில் ஈடுபட உதவி புரிகிறது என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டுள்ளமை இவ்விடயத்தில் கூர்ந்து நோக்க வேண்டிய ஒன்றாகும்.

உலக அமைதியிலும், பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை கொண்டது போல் தன்னைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்க வல்லாதிக்கம் தனது நாட்டில் இடம்பெறும் வன்முறைகளை தடுத்து நிறுத்த முடியாது இருப்பது ஏன் என்ற கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் எழுகிறது.

எனவே தனது நாட்டின் ஆயுத விற்பனையை மட்டும் நோக்காகக் கொண்டு தனிப்பட்ட ரீதியில் துப்பாக்கி வைத்திருக்க பொதுமக்களுக்கு 'லைசன்ஸ்' வழங்குவதை உடனடியாக நிறுத்தி சுலபமாக ஆயுதங்களை பெறுவதை தடைசெய்யும் வகையில் ஆயுத விற்பனையையும் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்க அரசு இருக்கிறது. இல்லையேல் இவ்வாறான கோரச்சம்பவங்கள் தடுக்க முடியாத ஒன்றாகி வன்முறைக் கலாசாரம் பரவ [illegible]யமைத்து விடும்.


புத்தாண்டிற்கு புதிய நண்பர்களுக்கு




வைட் டயமண்ட் சாராயம்

வைட் டயமண்ட் லெமன் சாராயம்

ஆதவனின் புத்தொளிக் கதிர்களோடு உதயமாகும் புத்தாண்டின் குதூகலத்தை
அதிகரிக்க புதியதோர் நண்பர்களுக்கு... வைட் டயமண்ட் லெமன் சாராயம்... வைட் டயமண்ட் சாராயம்.

ஐ. டி. லங்கா லிமிட்டட்

# இடுக்குகளில் ஏற்படும் அரிப்பும் அதனை குணமாக்கும் வழிகளும்

**கேள்வி : பெண் 15. கடந்த இரண்டு வருடமாக ஒரே சளி. மருந்துகள் எடுத்தும் சுகம் இல்லை. பரிகாரம் கூறுவும்.**

பதில்: உங்கள் கேள்வியில் விளக்கம் இல்லை. சளி நெஞ்சிலா, மூக்கினுள்ளா, தலையிலா என்று தெரிவிக்கவில்லை. என்றாலும் பொதுவாக சளி என்றால் நெஞ்சில் என்றே பலரும் கருதுவதால் நெஞ்சில் சளி என்ற முறையில் பதிலளிக்கின்றேன்.

காய்ச்சல், நிறைகுறைதல், இரவில்வியர்வை களைப்பு என்பவற்றுடன் நெஞ்சில் சளி இருந்தால் காசநோய், சுவாசப்பை நோய், CHRONIC BRONCHITIS என்கின்ற நுரையீரல்குழாய் அழற்சி நோய் என்பவை பற்றி கவனத்தில் கொள்ளவேண்டும்.

இரத்தப்பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனை, சளிப்பரிசோதனை என்பவறை செய்வதன் மூலம், சரியான காரணத்தை கண்டறியலாம்.

இரண்டு வருடங்களாக சளி என்று நீங்கள் கூறுவதால் – வீரியமுள்ள தொற்றுகளால் நீங்கள் பாதிக்கப்படவில்லை என்று நம்ப இடமுன்று. என்றாலும் நாட்பட்ட நெஞ்சில் சளி – CHRONIC BRONCHITIS என்ற நுரையீரல் குழாய்களின் அழற்சியால் ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு.

தூசி துணிக்கைகள் நிறைந்த இடங்களில் வாழ்தல், பணிபுரிதல்; புகை பிடித்தல் சாதாரண நுரையீரல் அழற்சியை கவனித்தில் கொள்ளாமல் இருத்தல், BRONCHIAL ASTHMA என்கின்ற ஆஸ்துமா, தொய்வு நோய்களுக்கு சரியான முறையில் சிகிச்சை பெறாதிருத்தல் என்பவற்றால், CHRONIC BRONCHITIS நோய் ஆரம்பமாகி, பின்னர் நுரையீரல் குழாய்கள் வலுவிழந்து அவ்விடங்களில் நுரையீரல் குழிகள் BRONCHIAL CAVITIES உருவாகலாம். இந்த குழிகளுள் சளி நிறைந்து அடிக்கடி சளி வெளியேறிக் கொண்டிருக்கும். இதனை BRONCHIECTASIS என்பர்.

இதற்கு வீரியம் நிறைந்த நுண்ணுயர் கொல்லி ANTIBIOTICS மருந்துகளோடு, RESPIRATORY PHYSIOTHERAPY என்கின்ற இயன்முறை சிகிச்சை முறைகளும் பெரிதும் உதவி செய்யும். உங்களுக்கு ஏற்பட்டிருப்பது இத்தகைய நோய் என்று எண்ணுகின்றேன். விசேட வைத்தியரின் ஆலோசனை பெறவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
**இலவச மருத்துவ ஆலோச்னை**
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

**கேள்வி : ஆண் 29. தொடை இடுக்குகளில் ஒரே அரிப்பாக இருக்கின்றது. மருந்து செய்தால் ஒரு சில காலம் சுகமாக இருக்கின்றது. திரும்பவும் வருகின்றது. முற்றாக குணம் காண பரிகாரம் சொல்லவும்.**



பதில் : உங்களுக்கு ஏற்பட்டிருப்பது – ஒரு பங்கசு தொற்று. இதனை RENGWORM அல்லது TINEA தொற்று என்பார்கள். உஷ்ண வலய் நாடுகளான, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில், அதிக வியர்வையும் புழுக்கமும் உள்ள சுவாத்திய நிலையில் இறுக்கமாக காற்சட்டைகளும், உள்ளாடைகளும் அணிந்து நீண்ட நேரம் பணிபுரியும் மக்களிடையே தொடை இடுக்குகளில் வியர்வை ஏற்பட்டு, காயாமல் எந்நேரமும் கசிவுத்தன்மை இருக்கும். இம்மாதிரியான சூழலில், TINEA, CANDIDA, போன்ற பங்கசுகள் வளரக் கூடியவை. இவை ஒட்டுண்ணிகளாக சருமத்தில் படர்ந்து, வளர்ந்தாலும், அவற்றின் வேர்கள் சருமத்தின் கீழ் உள்ள திசுக்களிலும் படரும். எனவே தான் பூச்சு மருந்துகள் எவ்வளவு பூசினாலும் சருமத்தின் மேல் படர்ந்துள்ள பங்கசுக்கள் ஆரம்பத்தில் அழிந்து, ஒரு சில காலத்தின் பின்னர், வேர்களினின்று புதிய பங்கசு வளரலாம்.

எனவே வெளிப்பூச்சு மருந்துகளோடு, ஒரு சில மாதங்களுக்கு – உள்ளேயும் மாத்திரைகள் எடுக்க வேண்டும். CLOTRIMAZONE, MACONOZOLE பூச்சுமருந்துகளும், GRISEOFULVIN, போன்ற உள் மருந்துகளும் இந்த நோய்க்கு உபயோகமாகின்றன. ப்ங்கசுக்கள் – அவற்றின் SPORES எனப்படும் முட்டைகள் மூலம் தொற்றுவதால், காற்சட்டைகள், உள்ளாடைகள் என்பவற்றை நன்றாக கழுவி, நல்ல வெயிலில் உலர்த்தி உபயோகிக்க வேண்டும்.

**கேள்வி : ஆண். வயது 29. மலம் கழிக்கும் போது சிறுநீருடன் விந்து வெளியாகிறது. சிலவேளைகளில் சாதாரணமாக சிறுநீர் கழிக்கும் போதும் விந்து வெளியேறுகிறது. பரிகாரம் கூறுவும்.**

பதில் : விந்துப்பையானது மலக்குடலுக்கு முன்னால் அமைந்துள்ளது. திருமணமாகாத இளைஞர்கள், அல்லது பிரமச்சாரியம் காக்கும் ஆண்கள் மலம் கழிக்க முன் வயிற்றை எக்கும் போது விந்துப்பையும் அமுக்கப்பட்டு சிறிது விந்து வெளியேற வாய்ப்புண்டு. இதுபோல தான் சிறுநீர்ப்பையின் கழுத்தின் அருகில் விந்துப்பை உள்ளது. சிறுநீருக்கு எக்கும் போது கூட விந்து வெளியேறலாம். இது ஒரு நோயல்ல. எனவே கவலைப்படாதீர்கள்.

**கேள்வி: ஆண். வயது 24. திருமணம் ஆகவில்லை. எனக்கு ஒரு விதை மாத்திரம் இருக்கின்றது. இதனால் ஆண்மை பாதிக்கப்படுமா? திருமணம் செய்து கொள்ளலாமா? விளக்கம் தாருங்கள்?**

பதில்: திருமணம், ஆண்மை பற்றி யோசிக்கின்றீர். ஆனால் அதைவிட பெரிய ஆபத்து இருப்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்களின் விதைகள், கருப்பையில் சிசுவாக இருக்கும் போது வயிற்றறையில் உருவாகி, எட்டாம்; ஒன்பதாம் மாதமளவில், பிரசவம் ஆக முன்னர் – விதைப்பைக்குள் இறங்கி விடுகின்றன. சில வேளைகளில் ஒரு விதை இறங்கும் போது, அரைக்கு அருகில் பொறுத்து விடுகிறது. இதனை UNDER SCENDED TESTIS இறங்காத விதை என்று அழைப்பர். விதைகள் உடலுக்கு வெளியே – விதைப்பைக்குள் இறங்காததற்கு காரணம் உண்டு. விதையில் தான் விந்தணுக்கள் உருவாகின்றன. இந்த விந்தணுக்கள் உருவாக – அவற்றின் சூழல் வெப்பம் – எமது சூழலின் வெப்பநிலை வயிற்றறை வெப்பத்தை விட அதிகமானதால், வயிற்றினுள் விந்தணுக்கள் உருவாவது என்பது கஷ்டம். விந்தணுக்கள், ஆண்களுக்குயௌவன பருவம் அல்லது வளர் இளம் பருவம் என்கின்ற ADOESCENT காலத்திலேயே உருவாக ஆரம்பிக்கின்றன. எனவே இறங்காமல், அரைப்பகுதியில் தடைப்பட்டுள்ள விதையை, 10 வயதிற்கு முன்னர், சத்திரசிகிச்சை மூலம், விதைப் பைக்குள் இறக்கி பொருத்த வேண்டும். இல்லாவிடில் விந்தணுக்குள் உற்பத்தி அங்கு நடைபெறாது மாத்திரமல்ல, அந்த விதை – புற்றுநோய்க்கு ஆளாவதை தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே உடனே ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் ஆலோனை நாடவும்,

**கேள்வி: ஆண். இளவயது. யுத்தத்தின் போது உடலின் முக்கிய இடத்தில் வெடிபட்டது, இதனால் ஏதாவது விளைவுகள் உண்டா?**

ஏதோ ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்து கொண்டு நீங்கள் கேள்வி கேட்கின்றீர்கள், நீங்கள் தந்த சிறிய குறிப்பை வைத்து பதிலை எழுதுகின்றேன். விதைகளில் காயம் பட்டிருந்தால் ஆனால் விதைகள் பழுதாகாமல் இருந்தால் வம்சவிருத்திக்கு பாதிப்பில்லை. ஆண்மைக் குறைவு ஏற்பட்டிருந்தால் கூட விதைகளிலிருந்து விந்தணுக்களை எடுத்து செயற்கை முறையில் கருத்தரிக்க வைத்து வம்சத்தை விருத்தி பண்ணும் வசதிகள் இப்போது நடைமுறையில் உள்ளன. ஒரு விதை இருந்தாலே இந்த சிகிச்சைக்கு போதுமானது. இரு விதைகளையும் விபத்தில் இழந்து போயிருந்தால் இன விருத்தி என்பது முற்றாக இல்லை. ஆனால் ஒன்றை மனதில் எண்ணுங்கள். தாம்பத்திய வாழ்க்கை என்பது உடலுறவு இனவிருத்தி என்பதில் மட்டும் தங்கியிருக்கும் ஒன்றல்ல. ஒருவர் மனதை ஒருவர் புரிந்து கொண்டு ஆருயிர் நண்பர்கள் போல் எந்தக்குறைவும் இல்லாமல் வாழலாம். குழந்தைகள் தாம்பத்திய உறவுக்கு உறுதி கொடுப்பவை என்பது



உண்மைதான். ஆனால் அது பெற்றெடுத்த குழந்தையாகத் தான் இருக்க வேண்டுமா? தத்தெடுத்த குழந்தை இந்த உறவுப் பாலத்தை பேணாதா? உடலுறவு என்பது கூட ஒருவகை இன்பம் தானே. அது தவிர மனதால் உறவு கொண்டு சந்தோஷமாக வாழ்பவர்கள் இல்லையா? உங்களை புரிந்து – உங்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாக வர நிச்சயம் ஒருத்தி கிடைப்பாள். கவலை ஒழிக!

# ஆண்களுக்கான கருத்தடை ஊசி மருந்து

உலகிலேயே முதன் முறையாக ஆண்களுக்கான கருத்தடை ஊசி மருந்தை மேற்கு வங்கத்தில் உள்ள காரக்பூர் ஐஐடி மருத்துவ விஞ்ஞான தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கருத்தடை ஊசி மருந்தை ஒரு முறை உடலில் செலுத்தினால் அதன் பலன் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்கும் தன்மை கொண்டது.

தேவைப்படும் நேரத்தில் மாற்று மருந்து கொடுத்து மீண்டும் குழந்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

'ரிசுக்' என்று அழைக்கப்படும் இந்த புதிய ஊசி மருந்து மனிதர்களுக்கு கொடுக்கபட்டு சோதிக்கப்பட்டுள்ளது. கெலன் மார்க் என்ற நிறுவனம் இந்த ஊசி மருந்தை வர்த்தக ரீதியில் தயாரித்துள்ளது.

விதையில் 5 மி.மீ. துளையிட்டு இந்த ஊசி மருந்து உள்ளே செலுத்தப்படும். தையல் கிடையாது. பக்கவிளைவும் இல்லை என்று இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

விதைப் பையில் செலுத்தப்படும் ஊசி மருந்து உள்ளேயிருந்து அங்கு உற்பத்தியாகும் விந்தணுவைத் தாக்கி அழித்து விடுகிறது.

ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை இல்லாத ஒரே கருத்தடைச் சாதனம் ஆணுறை தான். ஆனால் பெரும்பாலானோர் ஆணுறையைப் பயன்படுத்துவதை விரும்புவதில்லை. இந்த நிலையில் இந்த கருத்தடை ஊசி மருந்து ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லலாம்.

ஆண்களுக்கான வாசெக்டமி கருத்தடையை ஒரு முறை செய்துவிட்டால் மீண்டும் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பும் நிலையில் சிக்கல்கள் உள்ளன. ஆனால் இந்த ஊசி மருந்தில் அதுபோன்ற சிக்கல்கள் இல்லை.

பெண்கள் கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் உண்டு. தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிட முடியாது. அதற்கெல்லாம் ஆண்களுக்கு ஏற்றப்படும் இந்த ஊசி மருந்து ஒரு தீர்வாக அமையும்.

# சந்திரன் அருகே வியாழன்

சூரிய கோள்களில் ஒன்றான வியாழன் (ஜுபிடர்) கடந்த சனி இரவு சந்திரனுக்கு மிக அருகில் வந்து சென்றது.

சூரிய குடும்பத்தில் உள்ள ஒன்பது கோள்களில் ஒன்று வியாழன் (ஜுபிடர்). 11.86 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனை சுற்றிவரும் இந்த கோள், தனது சுற்று வட்டப்பாதையில் வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் சந்திரனுக்கு அருகே வந்து சென்றது. வியாழன் கிரகமானது சந்திரனுக்கு மிக அருகில் வந்து சந்திரனுக்குப் பின்புறம் மறைந்து, பிறகு விலகிச் சென்ற காட்சியை பலரும் கண்டு களித்தனர்.

அந்தார்டிகா, ஆஸ்திரேலியாவின் தென் பகுதி, இந்திய கடலின் தென்பகுதி ஆகியவற்றிலும் இந்த அரிய காட்சியை பலரும் கண்டனர்.


இதற்கு முன்பு யுரேனஸ் கோள் பூமிக்கு அருகில் சுற்றிவந்த போது அதன் துணைக் கோள்கள் பற்றியும், அதன் வளையங்கள் குறித்தும் இந்தியாவிலிருந்தே ஆய்வு செய்யப்பட்டது. இதேபோல, தற்போது விண்ணில் ஏற்படும் இந்த நிகழ்வின் காரணமாக, வியாழன் கோளின் தன்மை குறித்தும் ஆய்வு நடத்தலாம் என்று விஞ்ஞானி கூறுகின்றனர்.

மந்திரி:- அரசே! இது என்ன கோலம்?
அரசர்:- நேற்று மாறுவேடத்தில் நகர்வலம் போனதில் மக்கள் எனக்கு கொடுத்த பரிசு!
மந்திரி:- என்ன வேடத்தில் போனீர்கள் அரசே!
மன்னர்:- ரவுடி கெட்டப்பில் போயிருந்தேன்.



# மு.காவில் தொடரும் முரண்பாடு தீர்வுக்கு வழி பிளவுதானா?

முஸ்லிம் சமூக அரசியல் அரங்கில் ஒற்றுமை என்பது தொடர்ந்தும் எட்டாக்கனியாக இருந்து வருகின்ற அதேவேளை சர்ச்சைகளும் பிளவுகளும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. முஸ்லிம்களின் ஒட்டுமொத்த அரசியல் சக்தியாகத் திகழ்ந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அதன்




ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் திடீர் மறைவைத் தொடர்ந்து எழுந்த தலைமைத்துவ சண்டை பிளவில் முடிந்தது. இன்று அக்கட்சி பல்வேறு துண்டுகளாக உடைக்கப்பட்டு – செல்லாக்காசாக மாற்றப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சிலரின் தனிப்பட்ட அபிலாஷைகளுக்கு ஏற்ப வழிநடத்தப்பட்டதன் விளைவே முஸ்லிம் சமூகத்தின் இன்றைய அவலநிலைக்குக் காரணமாகும். இதற்கு ரவூப் ஹக்கீம் மட்டுமல்லாது முஸ்லிம் காங்கிரஸை விட்டு வெளியேறியோரும், புதிய புதிய கட்சிகளையும், அணிகளையும் உருவாக்கியவர்களும்கூட பதிலளித்தேயாக வேண்டும்.

மர்ஹூம் அஷ்ரப்பின் அகால மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட தலைமைத்துவ வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்ய முடியாமல் மு.கா. அரசியல் பீடத்தினர் இழுபறிப்பட்டு தற்காலிக ஏற்பாடாக ரவூப் ஹக்கீமும், பேரியல் அஷ்ரப்பும் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். எனினும், மிகக்குறுகிய காலத்திற்குள்ளேயே முரண்பாடு வலுப்பெற்று ஒரு பிரிவினர் கட்சியிலிருந்து விலகிச் சென்றனர்.

அஷ்ரப்பின் அந்திம காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியை (நுஆ – NUA) பேரியல் அணியினர் கைப்பற்றினர். மு.காவின் இணைக் கட்சியான நுஆவை மீட்டெடுப்பதில் ஹக்கீம் அணியினர் மேற்கொண்ட பிரியத்தனங்கள் பயனளிக்கவில்லை. நுஆ கட்சியின் யாப்பின் பிரகாரம் மு.கா. தலைவரே அக்கட்சியின் தலைவராக இருக்க முடியும் எனக் கூறப்பட்டிருக்கின்றபோதிலும் அதனைச் சட்ட ரீதியாக நிரூபிப்பதற்கு ஹக்கீம் அணியிரால் முடியாமல் போய்விட்டது.

பேரியல் அணியினரின் வெளியேற்றத்தினால் பலவீனமடைந்த முஸ்லிம் காங்கிரஸை மறுசீரமைத்து – ஒற்றுமைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையிலேயே அதாவுல்லா அணியினரின் புரட்சி வெடித்தது. ரவூப் ஹக்கீமைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான அதிரடி நடவடிக்கையில் இறங்கிய அதாவுல்லா அணியினரின் இம்முயற்சி கைகூடாததால் அஷ்ரப் காங்கிரஸ் எனும் கட்சியை உருவாக்கினர்.

இதன்பின்னர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், பேரியல் அஷ்ரப் தலைமையிலான நுஆ, அதாவுல்லா தலைமையிலான அஷ்ரப் காங்கிரஸ் ஆகிய மூன்று பிரதான பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்தி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் தாய்க் கட்சியைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்று வந்தன.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைந்த சூட்டோடு முஸ்லிம் தலைவர்களை ஒற்றுமைப்படுத்தி – ஒரே அணியாகச் சேர்த்து தேர்தலில் போட்டியிடச் செய்வதற்காக கொழும்பு வர்த்தக சமூகத்தினர், கிழக்கு மாகாணப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினர், உலமாக்கள், புத்திஜீவிகள் எனப் பல தரப்பினரும் கூட்டாக மேற்கொண்ட பிரயத்தனங்கள் கூட பயனளிக்கவில்லை.

இம்முயற்சிகளின் காரணமாக ஒற்றுமைக்கான நல்ல சூழ்நிலையொன்று ஏற்பட்டபோதிலும் அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளர் அதாவுல்லாவும், முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோரும் சேர்ந்து எடுத்த அதிரடி முடிவு அனைத்தையும் குழப்பிவிட்டது. இவர்கள் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் எனும் புதிய கட்சியை இரவோடிரவாக உருவாக்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒப்பந்தமொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் செய்து கொண்டனர்.

இதையடுத்து கடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுடன் மு.கா. இணைந்து கொள்ளவேண்டும் என வற்புறுத்தி தலைவர் ஹக்கீமை வழிக்குக் கொண்டுவருவதற்காக குமாரி குரே விவகாரத்தை ஒரு துரும்புச்சீட்டாகப் பயன்படுத்துவற்கு றிஷாத் பதியுதீன் அணியினர் முற்பட்டனர். அதே வேளை மு.கா. தேசியப் பட்டியல் எம்.பி. ஹுஸைன் பைலா அரசுடன் இணைந்து கொண்டார். பின்பு அவர் பிரதியமைச்சராக நியமனம் பெற்றார்.

இதனால் றிஷாத் பதியுதீனையும், ஹுஸைன் பைலாவையும், நஜீப் ஏ.மஜீதையும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றும் தீர்மானத்தை கட்சியின் அரசியல் பீடம் மேற்கொண்டது. ஆனால் இவர்கள் மூவரும் இத்தீர்மானத்தை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். தீர்ப்பு இம்மூவருக்கும் சாதகமாகவே கிடைத்தது. இவர்களைக் கட்சியிலிருந்து விலக்கியது செல்லுபடியாகாது – சட்ட விரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதனைத் தொடர்ந்து றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகிய இருவருடன் மட்டக்களப்பு மாவட்ட மு.கா. எம்.பியான எம்.எஸ்.அமீரலியும் சேர்ந்து அரசுடன் இணைந்து அமைச்சர் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். இவர்களின் இந்நடவடிக்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்துற்கு பெரும் தலையிடியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

**– அஸ்லம் எஸ்.மௌலானா –**

''பேரினவாத சக்திகளின் எலும்புத் துண்டுகளுக்கு சோரம்போன சமூகத் துரோகிகளுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அப்போது அறிவித்திருந்தார். எனினும், ஐந்து மாதங்கள் கடந்த பின்னரே அவர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்தவாரம் கூடிய முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்பீடம் அமைச்சர்கள் றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், அமீரலி ஆகிய மூவரையும் கட்சியிலிருந்து விலக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளது. அதற்கு முன்னதாக நடைபெற்ற அரசியல் பீடக்கூட்டத்தில் பிரதியமைச்சர் ஹுஸைன் பைலாவை கட்சியிலிந்து வெளியேற்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்நால்வர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அவர்கள் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்வதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கட்சியின் அரசியல் பீடக் கூட்டங்களில் கலந்து கொண்டு விசாரணைக்கு முகம் கொடுக்கும் தேவை – அவசியம் எமக்குக் கிடையாது என இவர்கள் அறிவித்தனர். தமது நிலைப்பாட்டை ஏற்கனவே




எழுத்து மூலம் அறிவித்து விட்டார்கள் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை வழக்கில் தோல்வி கண்டு விடக்கூடாது என்பதில் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீடம் கவனமாக இருந்து காரியமாற்றி வருகிறது. ஏனெனில், முன்னைய ஒழுக்காற்று நடவடிக்கையின்போது சட்ட, சம்பிரதாயங்கள் பேணப்படாமையினாலேயே வழக்குத் தீர்ப்பு றிஷாத் அணியினருக்கு

(23ஆம் பக்கம் பார்க்க)


## பதவி வெற்றிடங்கள்

கொழும்பில் உள்ள பிரபல தமிழ்ப்பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக சுறுசுறுப்பான தகுந்த ஆண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Clerks - Circulation Dept.**

20 - 25 வயதிற்குட்பட்ட, G.C.E.(O/L) சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Delivery Peon - Circulation Dept.**

22 - 30 வயதிற்குட்பட்டவராகவும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். வான்/முச்சக்கர வண்டி ஓட்டுநர் அனுமதிப் பத்திரமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முழு விபரங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் (Referees) விபரங்களுடன் விண்ணப்பத்தை 31. 03. 2005 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக S-102, P.O. Box 2129, Colombo. முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது உதயன் பிரின்டர்ஸ், 39, அருணகிரி வீதி, திருகோணமலை என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கலாம்.

## பதவி வெற்றிடம்
### திருகோணமலைக் கிளைக் காரியாலயம்

**நிர்வாக அலுவலர் (Administration Officer)**

கொழும்பிலுள்ள பிரபல தமிழ்ப் பத்திரிகை நிறுவனத்தின் திருகோணமலை கிளைக்காரியாலய நாளாந்த நட்வடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை செய்வதற்கு தகுந்த ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிர்வாகம்/வெளிக்கள/விநியோகத்துறைகளில் குறைந்தது 5 வருட ஆனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். இளைப்பாரியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

முழு விபரங்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் (Referees) விபரங்களுடன் விண்ணப்பத்தை 31. 03. 2005 ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக S-102, P.O. Box 2129, Colombo. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அல்லது உதயன் பிரின்டர்ஸ், 39, அருணகிரி வீதி, திருகோணமலை என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கலாம்.

## விற்பனைக்கு

கொழும்பு – 15, தமிழ் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பு பிரசேத்தில், நான்கு அறைகளுடன் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:—

தொ.பே. இல்: 2522561

## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஏப்ரல் 19 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

ஏப்ரல் 02 - 03 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

ஏப்ரல் 05 -10
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

ஏப்ரல் 03 – 09, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

# பொதுக்கட்டமைப்பும் அரசின் பிடிவாதமும்

ஆழிப்பேரலை அழிவுகளினால் அவலப்பட்ட மக்கள் தங்களின் வாழ்க்கைப் போக்கை மேம்படுத்தும் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் இன்று ஆரம்பமாகலாம், நாளை ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்களின் ஏக்கப்பெரு மூச்சு முடிவுக்கு வரும் போல் தெரியவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் கழிந்துவிட்டன. இந்த விவகாரத்தில் இன்னும் இழுபறி நிலைமை நீடிக்கிறது.

நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயத்தில் இலங்கை அரசுத் தரப்புக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்படுவதற்கான சாத்தியம் இதுவரை இல்லை. காலம் கடந்துபோகப் போக விரிசல்களே அதிகரிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான இணக்கம் அரசதரப்புக்கும் புலிகள் தரப்புக்கும் இடையில் இன்னும் வெகுதூரத்திலேயே இருந்து வருகிறது.

இப்படியான நிலையில் மற்றொரு ஆழிப்பேரலை அபாயமும் கடந்த திங்கள் (28) இரவு வந்து மக்களைப்படாத பாடு படுத்திவிட்டுப்போய் விட்டது.

ஆழிப்பேரலை நடக்கப்போவதாக விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து சில மணி நேரங்கள் வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதி மக்களும் தென்னிலங்கை கரையோரப் பகுதி மக்களும் பட்டபாடு சொல்லமுடியாதவை. பல்லாயிரக்கணக்கானோர் இரவோடிரவாக இடம்பெயர்ந்தனர்.

ஆழிப்பேரலையின் தாக்கத்தில் இருந்து மக்கள் மீள முன்னரே இரண்டாவது ஆழிப்பேரலை பேராபத்தும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு பொதுக்கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை இது இரட்டிப்பாக்கி இருக்கிறது.

நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றின் அவசியத்தை, இனப்பிரச்சினையில் ஏற்பாட்டாளர்களாக இருந்து வரும் நோர்வேத் தரப்பு உணர்ந்து அரச தரப்பினதும், புலிகள் தரப்பினதும் கருத்துக்களை உள்வாங்கி திட்டம் ஒன்றைத் தயாரித்தது. நோர்வே தயாரித்த திட்டத்தை புலிகள் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், திட்டத்தில் உள்ள சில அம்சங்கள் தனக்கு ஏற்புடையதாக இல்லை என்று கூறி அரச தரப்பு அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

தற்பொழுது நோர்வேத் தரப்பு அரச தரப்பின் யோசனைகளை உள்வாங்கி புதியதிட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. நோர்வே தரப்பு தற்பொழுது தயாரித்துள்ள திட்டத்தை ஏற்கும் நிலையில் புலிகள் அமைப்பு இல்லை. அது புலிகளுக்கு இணக்கமானதாக இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேரினவாதிகளின் பிடியில் சிக்கி இருக்கும் ஜனாதிபதியிடமிருந்து நாம் இதனைவிட வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

பொதுக்கட்டமைப்பு, வெறும் நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தப்பட்டதே. மீள்கட்டுமானத்துக்கு வரும் நிதியைப் பெறவும், மீள்கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்யவும் மட்டுமே இது அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

இப்படியான ஒரு சொற்ப அதிகாரம் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கே இணங்கிப்போக தயார் இல்லாத அரசு வடக்கு, கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்கு சம்மதிக்கும் என்பதை சிந்தித்தும் பார்க்க முடியாது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசு தனது பிடிவாதப்போக்கைக் கைவிடுமானால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான இணக்கப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும் சாத்தியப்படலாம்.

# பீதி ஏற்படுத்திய அந்த ஒருசில மணி நேரங்கள்

கடந்த வருட இறுதிப் பகுதியில் தெற்காசியாவை கோரமாகத் தாக்கிய ஆழிப்பேரலைகள் ஏற்படுத்திய அழிவுகளிலிருந்தும் அவலங்களில் இருந்தும் மக்கள் இன்னும் விடுபடாத நிலையில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட பாரிய பூகம்பம் மக்களை மீண்டுமொரு முறை சுனாமி அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவுகளின் அருகே இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட பெரும் பூகம்பத்தின் காரணமாக மீண்டும் ஆழிப்பேரலைகள் ஏற்படலாம் என்று அபாய அறிவிப்பு விடுக்கப்படவே ஏற்கனவே மீண்டும் சுனாமி ஏற்படலாம் என்ற பயப் பீதியில் இருந்த கரையோரப் பகுதி மக்கள் கடுமையான பீதிக்குள்ளாகியுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் அறிவிப்புக் கிடைத்த அடுத்த கணமே கையில் அகப்பட்ட பொருட்களுடன் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு வரையிலான கரையோரப் பிரதேசமே இந்த அறிப்பை அடுத்து அல்லோல கல்லோலப்பட்டது. அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த நகர வீதிகள் அவசரமாக வெளிப்பட்ட வாகனங்களால் நிறைந்து வழிந்தன. சில மணிநேரங்களில் முழு இலங்கையுமே விழித்துக்கொண்டது.

பூகம்பம் இலங்கை நேரப்படி 10.10 மணிக்கு ஏற்பட்டிருதாலும் அது நிகழ்ந்து சுமார் மூன்று மணி நேரத்தின் பின்னர் அதிகாலை 1.10 மணியளவிலேயே ஆழிப்பேரலை இலங்கை கரையோரத்தைத் தாக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டதால் அந்த ஒரு சில மணி நேரங்களில் மக்கள் பீதியடைந்து அதிர்ச்சியிலும் அச்சங்களிலும் உறைந்தனர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து முப்படையினரும் உடனடியாக உஷார் படுத்தப்பட்டனர்.

கிழக்கு கரையோரப்பகுதி மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்லுமாறு விசேட அதிரடிப்படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல்கள் வழங்கினர். தெற்கிலும், தலைநகரின் கரையோரப் பிரதேசங்களுக்கு விரைந்த பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. கடற்படையினரும் 'சைரன்'களை ஒலிக்க விட்டு மக்களை உஷார்ப்படுத்தினர்.



இலத்திரனியல் ஊடகங்களும் தமது விசேட சேவையூடாக அனர்த்த நிலைமை தொடர்பாக மக்களுக்கான எச்சரிக்கை அறிவிப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தன.

மீண்டும் ஆழிப்பேரலை ஏற்படும் என்ற அச்சம் காரணமாக மக்கள் மிகுந்த பயப்பீதியுடனேயே அன்றிரவைக் கழித்தனர். அதிர்ச்சியில் உறைந்திருந்தனர். கரையோரப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் பீதிகாரணமாக மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு செல்லாது இடம் பெயர்ந்த இடங்களில் தங்கியுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் 8.7 ரிச்டர் அளவில் இடம் பெற்றுள்ளது.

இந்த நில நடுக்கத்தால் இந்தோனேஷியாவின் சில பகுதிகளும் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரும் பாதிக்கப்பட்டன. பல தற்காலிக குடியிருப்புகள் இடிந்து வீழ்ந்துள்ளன. நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகளும் கடலுக்கு அடியே நிகழ்ந்த பூகம்பத்தை அடுத்தே வெளிக்கிளப்பின. இந்த பேரலைகள் தெற்காசியாவில் பல இலட்சக்கணக்கான உயிர்களை காவு கொண்டதுடன் ஈடு செய்ய முடியாத இழப்புக்களையும் ஏற்படுத்தி இருந்தன. அதன் பயங்கரத்தை தெற்காசிய மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இதன் காரணமாகவே மீண்டும் ஏற்பட்ட பூகம்பத்தை தொடர்ந்து சுனாமி அலைகள் தாக்கலாம் என அஞ்சியே அல்லோல கல்லோலப்பட்டுள்ளனர்.

கடந்தமுறை ஏற்பட்ட ஆழிப்பேரலையின் தாக்கத்தைவிட இந்தமுறை தாக்கம் குறைவாகவே இருக்கும் என நிபுணர்கள் கருத்துதெரிவித்துள்ள போதிலும் இந்தப் பிராந்திய நாடுகளை அவர்கள் எச்சரிக்கை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எது எப்படி இருப்பினும் ஒரு சில மணி நேரங்களில் மக்கள் அடைந்த பீதியிலிருந்தது சுனாமி பேரலைகள் எந்தளவுக்கு உளரீதியாக அவர்களைப் பதித்துள்ளன என்பதை தெளிவாக புரிய முடிகிறது.

– தமிழரசன் –

# செயற்றிறனற்ற ஒருவருட ஆட்சியின் நிறைவு

ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி கூட்டுச் சேர்ந்து தேர்தல் ஒன்றினூடாக ஆட்சியை கைப்பற்றி ஒருவருடம் பூர்த்தியாகின்றது.

இந்த ஓராண்டு காலத்தில் இலங்கையில் அரசியல் இராணுவ – சமூகவியலில் நடந்த நிகழ்வுகளை திரும்பிப் பார்க்கையில் அடுத்த ஆண்டுகளில் என்ன நிலை தொடரப்போகின்றது என்பதை ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இரண்டு ஆண்டுகள் நீடித்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைத்து ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஜனாதிபதி அமைத்த ஒரு வருட ஆட்சி எல்லாவகையிலும் செயற்திறனற்றதாகவும் – குழப்பம் நிறைந்ததாகவும் காணப்படுகிறது.

சமாதான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அது கிட்டத்தட்ட செயலிழந்து விட்டது என்றே தெரிகிறது. இதற்கான காரணங்கள் பலவற்றை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

முதலாவது அரசிடம் செயன்முறை குறித்து தெளிவற்ற – குழப்பமான ஒரு நிகழ்ச்சி நிரலே உண்டு. கூட்டமைப்பு கட்சிகளினுள் சமாதானச் செயற்பாடுகள் பற்றிய கொள்கைகள் ஒன்றாகவே இருக்கின்றன. அதாவது சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி ஒரு யுத்தத்தை நோக்கி நகர்தல் என்பதே அதுவாகும்.

இதற்காக கடந்தவருடம் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவை பயன்படுத்தி தமது நிகழ்ச்சித் திட்டங்களை அரசியல் – இராணுவ வழிகளினூடாக மேற்கொண்டு வந்தது இந்த அரசு. அது ஒருகட்டத்தில் இரு தரப்பினரையும் போரை நெருங்கி கொண்டு வந்திருந்த நேரத்தில் தான் கடல் பேரனர்த்தம் ஏற்பட்டு நிலைமையை மாற்றிவிட்டிருந்தது. தற்போது மீண்டும் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. சமாதானத்தை பின்தள்ளி போருக்கான வாசலை திறந்து விட்டுள்ளமை ஒருவருட ஆட்சியின் சாதனைகளில் ஒன்றாகும்.

அடுத்தது, ஆட்சிக்கு வந்தவுடன் புதிய சிந்தனைகளுடன் ஆட்சியமைப்பதாக கூறிய ஆட்சியாளர்கள் அரசியல் பழி வாங்கல்களைத் தொடரவும் தவறவில்லை.

குறிப்பாக ஐ.தே.கவின் முக்கிய உறுப்பினர்களை குறிவைத்து சட்டம் பாய்ந்தது. இவற்றின் உச்சமாக ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னாள் நெருங்கிய சகாவும் தற்போதைய எதிர்க்கட்சியின் முக்கிய அமைப்பாளருமன எஸ்.பி.திஸநாயக்கா கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார். இவையும் எதிர்காலத்தில் தொடரப்போகும் அரசியல் பழிவாங்கல்களுக்கு புள்ளிபோட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அரசுக்குள்ளும் முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன. சுதந்திரக்கட்சிக்கும் – ஜே.வி.பிக்கும் இடையிலேயே பெரிய விரிசல்கள் தோன்றி இருக்கின்றன. அவை பூசி மெழுகப்பட்டு இருந்தாலும் அவ்வப்போது பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்கின்றன. இவ்வாறான குழப்பங்களுடன் ஒருவருடம் கழிந்துள்ளது.

கடந்தவருட இறுதியில் ஏற்பட்ட கடல் பேரனர்த்தம் அரசுக்கு பாரியநெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தது. பல்லாயிரம் உயிர்களை காவு கொண்டதும் பல ஆயிரம் கோடி ரூபா நஷ்டத்தையும் ஏற்படுத்தி இருந்தது. இதன் பின்னர்கூட அரசு உரியமுறையில் நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளை இன்றுவரை மேற்கொள்ள முடியாமல் திணறுகின்றது.

உரிய செயற்றிட்டங்கள் எதுவுமில்லாமல் வெளிநாட்டு உதவிகளை உரியவகையில் பயன்படுத்தாமல் மக்களின் விசனத்துக்குள்ளாகியதுடன், தமிழர் தாயத்தின் மீது முழு புறக்கணிப்பை காட்டி தனது சிங்கள இனவாத முகத்தை இந்த அரசு காட்டி நிற்கிறது. இவைகூட தமிழ் – சிங்கள உறவுகள் மேலும் விரிசல் அடைய உதவியது.

ஓராண்டுகால ஆட்சி, பிரச்சினைகளை மட்டும் ஏற்படுத்துவதிலும், கட்சிகளை உடைப்பதிலும் செலவிட்டிருப்பதையே காணக்கூடியதாக உள்ளது. உருப்படியாக எதையும் செய்ததாக இல்லை.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும் காலம் நெருங்கிவருவதால் அதை எவ்வாறு சரிப்படுத்தி ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பது என்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகா சிந்திக்க ஆரம்பித்துள்ளார். இதற்காக அரசமைப்பை மாற்றும் குறுக்குவழி முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்.

தற்போதைய அரசமைப்பை மாற்றுவதாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியைப் பெறுவதற்கு முன்னர் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பி.களின் ஆதரவைப் பெறவேண்டும் என இந்த அரசமைப்பு தெளிவாக கூறுகிறது. இந்த நிலையில் மக்களின் கருத்தை அறிவதற்கு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அவர் திட்டமிடுகின்றார்.

அத்தகைய ஒரு வாக்கெடுப்பில் மக்கள் தரும் ஆணையை – அவர்களின் தீர்மானத்தை தமக்குச் சாதகமான ஓர் அரசியல் பக்கபலமாக வைத்துக்கொண்டு இப்போதைய அரசமைப்பை அதற்குரிய ஏற்பாடுகளுக்கு முரணாக அல்லது அந்த ஏற்பாடுகளைப் புறந்தள்ளி தமக்கு ஏற்றமுறையில் மாற்றியமைக்க எத்தணிக்கப் போகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தாம் ஆட்சியில் நீடிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு, மாற்று வழிகள் என அரசியல் குளறுபடிகளில் ஈடுபடுவாராயின் பல சிக்கல்களை ஏற்படுத்தும்.

பல கட்சிகள் ஜனாதிபதியின் சர்வஜன வாக்கெடுப்புத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் ஜனாதிபதியின் திட்டங்கள் எவ்வளவுக்கு வெற்றி அளிக்கும் என்பது கேள்விக்குறியே!

– கலன் –

கடந்த காலத்திலும் தனது ஆட்சி அதிகாரத்துக்காக எந்த எல்லைவரையும் சென்றவர் ஜனாதிபதி. அவரது கடந்த ஆட்சிக்காலம் தமிழர்களுக்கு நீண்ட அவலத்தையும் – துன்பங்களையும் – துயரங்களையும் மட்டுமே விட்டுச் சென்றுள்ளது. இன்னுமொரு ஆட்சிக்காலத்தை ஏற்படுத்தினால் ஜனாதிபதி எதைச்செய்வார் என்பதை கடந்த கால வரலாறு தெளிவாகவே சொல்லிக் கொண்டிருக்கிறது.

கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் தேர்தல் வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.க. போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமா என்பதை அடுத்து தொடரப்போகும் அரசியல் நகர்வுகளே தீர்மானிக்கும்.

# கால்க்கட்டு

மயில்வாகனத்தாருக்கு பேர்த்தி சொன்னது சரிவர விளங்கவில்லை. அவளுடைய தமிழும் அப்படி. அதற்கிடையில் அஸ் புஸ்ஸென்று ஆங்கிலம் வேறு தண்ணிபட்ட பாடாக கலந்து பேசுகிறாள். சென்னது பிடிபடவில்லை அவருக்கு. அவளோடு பேசிய தெம்பில் அடுத்த அலுவலுக்குப் பாய்கின்றார். தனது கடைசி மகளின் கல்யாண ஏற்பாடுகளில் அவர் தீவிரமாக இருந்தார். இஞ்சை இருந்திருந்தால் இப்படி முன்னேறி இருக்குங்களோ, என்று பேர்த்தியை நினைத்து மனதாரப் புழுகிக் கொண்டார்.

‘அம்மப்பா சித்தியடை கலியாணத்தக்கு நான் வரேல்ல. எனக்கு ஒரு ‘இம்போர்ட்டன்ட்’ வீ.ஐ.பீ.யோடை டேட்டிங் இருக்கு’ என்று பெருமையாகச் சொல்லியிருந்தாள் அமெரிக்காவிலிருந்து அவள்.

ஆங்கில ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் அவர். வஞ்சகம் சூதாக எதையும் எடுக்கத் தெரியாதவர். அவளுக்கு ஏதோ முக்கியமான அலுவலாக்கும் என்று விபரத்தை விடுத்துக் கேட்காமல் விட்டுவிட்டார்.

இனப்பிரச்சினையை சாட்டி இங்கே இருக்க இயலாது என்று அமெரிக்காவுக்கு மூத்த மகள் கமலா குடும்பம் கிளம்பியபோது மனோனுக்கு வயது ஐந்துதான். அதன் பிறகு அவளை அவர் படங்களிலை பார்ப்பது மட்டும்தான். இப்படி இடைக்கிடை அவசரமாக ஏதாவது தொலைபேசியில் கதைப்பாள்.

கடைசியாக வந்த படத்தில் அவளது பதினேழு வயதுச் செழிப்பைப் பார்த்து வியந்து கொண்டார் அவர். 46 வயதான அந்த ரவுன் மேயருடன் சரிசமனாக நின்றிருந்தாள் அவள்.

‘‘கமலா நீங்கள் கல்யாணத்துக்கு எல்லாரும் வாறதெண்டால் மனோக்குட்டி உங்கை தனியாகச் சமாளிப்பாளோ?’’ மீண்டும் மகளுடன் கதைக்கும்போது அவருக்கு அந்த ஏக்கம் பிறக்கிறது.

‘‘அவள் வரமாட்டாள் அப்பா.’’ நெஞ்சில் தைக்கும் நெருடலை அப்பாவுக்கு மறைத்தவாறு கமலா அடுத்த கட்டப் பேச்சுக்கு நகர்ந்தாள். இவருக்கும் கனநாள் ஸ்ரீலங்காவிலை நிற்க ஏலாது. உந்தக் கிளைமேற் ஒத்துவராது’’

‘‘ஏன்பிள்ளை உன்ரை அவரென்ன அமெரிக்க மாப்பிளையே! இலங்கையில தானே பிறந்து வளர்ந்தவர்’’?

‘‘இல்லை அப்பா இங்க நிலைமையும் அப்பிடி இப்பிடி இருக்கு, உந்தப் பாதையை நம்பியும் கனநாள் நிக்க ஏலாது. நாங்கள் கொழும்பிலை வந்து ஹோட்டல்லை நிண்டுட்டு கல்யாணத்தண்டைக்கு யாழ்ப்பாணம் வந்து திரும்பிறதா உத்தேசம்’’

பெருமூச்சு விட்டார் மயில்வாகனத்தார்.

இளையவள் ஜெயா இனிக்கப் பேசும் பொன் குஞ்சு. ஊருக்குள் அவள் கலகலக்க வலம் வந்தால் பையன்கள் திங்கக் கிழமையானா என்று பாட்டெடுப்பாங்கள். இருபத்தாறு வயதில் இப்போதுதான் மயில்வாகனத்தார் குடும்பத்திலை எல்லாருக்கும் பிடிச்ச சம்பந்தம் வந்து வாய்த்திருக்கு அவளைத் தவிர.அவளை யார் என்ன கேட்டார்களா?

கலகலப்பு அடங்கி, முகம் வாடி அவள் ஒய்ந்து ஆறுமாதங்களாகி விட்டன. ஜெயாவுக்கு குடும்பக்களை வந்திட்டுச்சு என்று வீட்டில் பேசிக் கொண்டார்கள். அவள் மனதில் உள்ள வலிகளை உணர ஒரே யொரு இதயம் மட்டும் இருக்கிறது. அது இவளின் பக்கம் கண்வைத்துப் படித்தால் கூட இவளது அண்ணன்கள் மோட்டார் சைக்கிளில் போய் இறங்கி புஷ் செயினால்தான் பேசுவார்கள்.

அவனின் இடைஞ்சல்களைக் கருத்தில் கொண்டு இவள் அவனைத் தவிர்க்கப் பழகிக்கொண்டாள். வேறு வழிகள் அவளுக்குத் தென்படவில்லை. தன்னுடைய முட்டாள் அண்ணன்மார்களுக்கு எதையும் சொல்லி நியாயம் கேட்க இயலாது என்பது அவளுக்குத் தெரியும்.

வீட்டில் கேட்டால் ஆளுக்கு ஒரு மோட்டர் சைக்கிள், கழுத்துக்கு தங்கச் செயின், வேளா வேளைக்கு சாப்பாடு, கைச்செலவுக்கு அக்கா அனுப்பிற அமெரிக்கக் காசு, சந்தியிலை சீவியம், ரியூஷனுக்கு போற வாற பிள்ளைகளைப் படுத்திற பாடு. ஏதோ பெண் சகோதரத்தோடை பிறக்காதவங்கள் மாதிரி.

அண்ணனும் தம்பியும் மச்சான் மச்சான் மாதிரி கதைச்சுப்பேசி சண்டித்தனத்துக்கு தினம்பும்போது அவளுக்கு அருவெருப்பாக இருக்கும். இவங்களாலை ஊர்படுகிறபாடு அம்மாவுக்கு விளங்காது. ஆருக்கு முறைப்பாடு கொண்டு வீட்டுக்கு வரத் துணிவு வருமே. அதுவும் கிடையாது.

ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாலை இவளெட்டை அரும்பின பிஞ்சுக் காதலை அரிவாளால் மாங்காய் சீவிய மாதிரி அவங்கள் கிளீனா துடைச் செறிஞ்சதை இன்றைக்கும் நினைச்சா அவளுக்கு இரத்தம் உறையுது. இவ்வளவு காலம் கடந்தும் 24 மணிநேரமும் அந்த நினைப்பு எரிமலையாய் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கிறது.

அது பள்ளிப் பருவத்துக் காதல்தான். விபரம் அதிகம் அறியாத வயதுதான். ஆனால், அன்றைய தெரிவில் இம்மியும் பிசகு கிடையாது என இன்றைக்கும் அவள் உள் மனம் சொல்லிக் கொண்டிருக்கும். அந்த மாதிரி சதீஸ் அடக்கமாக வளர்ந்து நிற்கிறான். இன்றைக்கும் அவனைக் கண்டால் இவளிடம் ஆயிரம் ‘கிலோ வால்ட்’ மின்சாரம் பாயும்.

அவனது அபாரத் திறமைகளை அவள் மனது இன்றைக்கும் வியந்து கொண்டிருக்கும். கணினிப் புதிர்களை விடுவிப்பதிலும் ஆராய்ச்சியிலும் அவனுக்கு நிகர் அவனேதான். இவளது அதிகரிக்கும் அறிவுப் பசிக்கு விருந்தளிக்கும் வல்லமை அவன் ஒருவனிடம் மட்டுமே இருந்தது.

இவளோடு அவன் பழகக் கூடாது என்கின்ற தடையுத்தரவு கடுமையாக அமுலுக்கு வந்த நாள் முதல் அவளிடம் எழுகின்ற வினாக்களுக்கு விடையளிக்க சூழ இருக்கும் எவராலும் இயலுவதில்லை. கேள்விகள், அறிவுத் தேடல்கள் அனைத்தும் அலைகள் போல் எழுந்து அவள் இதயத்துக்குள்ளேயே அடங்கிப்போய்விடும்.

எப்போதாவது எங்காவது சந்தையில், கடைவீதியில், கோவிலில் என்றெல்லாம் எதிர்பாராமல் சதீஸ் சந்திப்பான். கண்கள் சந்தித்துக் கொள்ளும். அக் கணத்து உணர்வுகள் பற்றி விபரிக்க வார்த்தைகள் கிடையாது. பேசிக்கொள்ள உதடுகள் துடிக்கும். உடலில் இருந்து உயிரைப் பிரிப்பது போல இருவரையும் சூழ்நிலை பிரித்துக் கொள்ளும்.

இயன்றவரை அவள் நடமாடும் இடங்களை விலக்கி சங்கடங்களைத் தவிர்த்துக் கொள்ளவே அவனும் விரும்புவான். அண்மைக் காலங்களில் கணினித் துறையில் அவன் நிகழ்த்திவரும் சாதனைகள், குவித்துவரும் வெற்றிகள், பெற்றுவரும் பாராட்டுகள் பற்றியெல்லாம் கேள்விப்பட்டு அவளது மனது பூரிக்கும். அவற்றிலெல்லாம் அஸ்திவாரத்தில் அவளோடு சேர்ந்து உழைத்த பெருமை அவனை இன்றும் மயங்க வைக்கும்.

எவ்வளவு உயரப் பறந்தாலும் மண்ணோடும் மக்களோடும் இணைந்து வாழுகின்ற சதீஸின் பண்பாடு மேலும் அவளைக் கொல்லும். ஒரு சொட்டுக்கூட பெருமை கிடையாது. சொந்த மண்ணில், சொந்த மூளையில், சொந்தக் காலில் நின்று தாக்குப் பிடிக்கும் இவனைப் போன்றவர்கள் மிகச் சிலரே. அவனது பிரகாசமான எதிர்காலத்தில் கைகோர்த்து இணையும் வாய்ப்பு இனியும் இவளுக்குக் கிட்டாது.

தனது பள்ளிக் காலத் தேர்வு என்றாலும் அது எவ்வளவு பொருத்தமானது என இன்றைக்கும் அவள் வியப்பதுண்டு. அறிவிலோ பண்பிலோ அவளது அண்ணன்மார் அவனது கால்தூசிக்கும் வர முடியாது. அவனை அடித்து முறித்து வைத்தியசாலை வார்ட்டில் முடக்கிய இவங்களின் மிருக்கத்தனம் அவளை வாய்மூட வைத்திருக்கிறது.

பல மாதங்கள் கழித்து அவனைச் சந்திக்க நேர்ந்தபோது அவனது முகத்தில் அண்ணன்மாரின் சைக்கிள் செயின்கள் வரைந்த கோலங்களை அவள் கண்டு கூனிக் குறுகிப் போனாள். இதற்கெல்லாம் மன்னிப்புக் கேட்க ஒருகணச் சந்திப்பையாதல் இறைவன் தரக் கூடாதா என ஏங்குவாள். அவனது மனத்தினைப் பிழியும் வேதனைகள் கண்வழி கசிவதை அவள் உணர்கிறாள்.

என்றாலும் அண்மைக் காலம்வரை கலகலப்பாக அவள் ஊருக்குள் உலாவந்தாள். என்றோ எப்போதோ எதிர்பாராமல் .... வந்திருக்கின்ற தெம்பு இருக்கிறதே அந்த ஒன்றுக்காக வாழலாம் என்பதே அவளது இலட்சியம்.

அவனுக்கு எங்கிருந்தோ எல்லாம் பெரிய இடங்களிலிருந்து கல்யாணப் பேச்சுக்கள் தேடிவரும். ஒவ்வொன்றையும் அவதானமாகத் தவிர்த்து வந்தான் அவன். அவனது மனதில் ஏதேதோ கனவுகள் எண்ணங்கள்! அவனது ஆசை ஒரு உலக அதிசயமாக நிறைவேற வழி கிடைக்காதா என்கின்ற ஏக்கம்தான் அது. அவளிடம் அத்தகைய எண்ணங்கள் கிடையாது. உள் வீட்டு நிலவரம் அறிந்தவள் அவள் அல்லவா?

இப்போது அவளுக்குக் கல்யாண எற்பாடுகள் தடல் புடல். கமலா அக்கா அமெரிக்காவிலிருந்து வருகிறா. அவ தான் பேசி வைச்ச கல்யாணம். பையன் அமெரிக்காவில் தான் படிச்சவன். அக்காவுக்கு பரீட்சையமான குடும்பமாம்.

கொஞ்சம் வயது வித்தியாசம் அதிகம் தான் எண்டு மயில்வானத்தாருக்கு ஆரம்பத்தில் பிடிக்கவில்லை. போன வருஷம் பையன் கொழும்பு வந்திருந்தபோது பெண் பார்க்கும் படலம் நடந்தது. பையன் முகத்தில் வயதின் ரேகைகள் படரத் தொடங்கியிருந்தன. என்றாலும் ஆள் வாட்டசாட்டமாக இலட்சணமாக இருந்தான். கமலாவின் ஒழுங்குகளில் பிசகு அதிகம் இருக்காது என விட்டு விட்டார் மயில்வாகனத்தார்.

ஜெயாவின் கருத்தை ஒரு வார்த்தை ஆகுதல் எவர் கேட்டார்? அவள் பிறந்து வளர்ந்து மழலை மொழிபேசி வளர்ந்த உலகம் சூழ நிற்கிறது. அவளது குடும்பத்தினர் எல்லோரும் டொலர்களில் பேசிக் கொண்டனர். குடுக்கல் வாங்கல் எல்லாம் அமெரிக்காவில் வைத்துக் கொள்ளலாம் என்றுவிட்டார் கமலா அக்கா.

வெளிநாட்டு மாப்பிளைகளை முடித்த அவளது சிநேகிதிகளின் அந்தரங்க கண்ணீர்க் கதைகளையெல்லாம் அவள் அறிவாள். கஞ்சி குடிச்சாலும் இந்த ஊரிலை சீவிக்கிறதுக்கு வராது. இங்கை வாழக் குடுத்து வைக்க வேணும். பிள்ளைகளை வளர்க்க அங்கை படுகிற பாடு. பருவம் வரும்போது அதுகள் படுத்துகிறபாடு எல்லாம் நம்மளுக்கு ஒத்துவருகிற காரியம் இல்லை. பெரும் பிரயத்தனப்பட்டு ஒரு சந்ததியை அரைகுறையா பொத்தி வளர்த்தாலும் அடுத்த சந்ததி கைநழுவிப் போறதை என்ன விலை கொடுத்தும் தடுக்க இயலாது.

சதீஸைத்தவிர ஆரைக்கேட்டாலும்பிடிச்சிதெண்டு இவள் சொல்லப்போவதில்லை. எனவே, அவளைக் கேட்காமலே முடிவுகளை எடுக்கலாம் என்கின்ற அண்ணன்மாரின் வற்புறுத்தல் வென்றுவிட்டது. இவளோ ஒரு வீட்டில் இருந்தாலும் அண்ணன்மாரை முகம் நிமிர்ந்து பார்ப்பதோ ஆசையாய் ஒரு வார்த்தை பேசுவதோ கிடையாது. அத்தனை வைராக்கியத்தை அவள் வளர்த்தக் கொண்டாள்.

அவளது நண்பி ரமாவின் அப்பா சொன்னதாக அவள் கேள்விப்பட்ட வார்த்தைகள் பொன் எழுத்தக்களால் அவள் மனதில் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. கொடுத்து வைத்தவள் ரமா என நினைத்துக் கொண்டாள். உள்ளூர் மருமகனை ஆயுள் முழுவதும் வீட்டிலை வச்சு சாப்பாடு போட்டாலும் பரவாயில்லை. பிள்ளையை வெளிநாட்டு மாப்பிளைக்கு கட்டிக்கொடுக்கப் போறதில்லை என்று கங்கணம்கட்டிக் கொண்டவர் அவர்.

அப்பாவைப் போல அதிகம் படித்த மனுஷன் இல்லை எண்டாலும் விபரம் தெரிஞ்ச ஆளாக இருக்கிறாரே.


கல்யாண நாள் நிச்சயிக்கப்பட்டபோது எங்கடை மாப்பிளைக்கு அண்டைக்கு டேட்டிங் இல்லையாமா அப்பா? என்று நாசூக்காக் கேட்க நினைத்தாள் ஜெயா. பாவம் அப்பா அவரைக் கேட்டென்ன செய்யிறது? இவங்களைத்தான் கேட்க வேண்டும். கேட்டால் நாக்கை அறுத்துப் போடுவாங்கள்.

பெரிய அட்டகாசமான அமர்க்களமான கல்யாணம். பொருத்தமான ஜோடி என்கின்ற கல்யாண வாழ்த்துக்கள் குவிகின்றன. புதிய கல்யாண மண்டபமொன்றில் முதலாவது கல்யாணம் வேறு. மணமேடையில் தங்கச் சிலையாட்டம் ஜொலிக்கும் ஜெயாவின் உள்மனத்தின் நெருடல்களை எவரறிவார்?

அருகில் தெரிகின்ற கோவில் கோபுரத்தைப் பார்த்து பெருமூச்செறிந்து நேர்த்தி வைக்கிற மாமியார், ‘‘இந்தக் கால்க்கட்டோடை யாவது என்ர பிள்ளை திருந்தி விட வேணும் சுவாமி’’ என்ற இந்த முணுமுணுப்பு ஜெயாவின் காதில் பட்டும் படாததும் மாதிரி பேரதிர்ச்சியாக விழுகிறது.

அவளது நண்பி ரமா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

(22 ஆம் பக்கம் பாரர்க்க)



-எஸ். சிவனேசன்-

# கவிதைப் புனல்

## சந்தோஷ வாழ்க்கை வாழ்வதற்கு தேவை

சுகாதாரமற்ற சுற்றாடலால்
சுகக் கேடு வரும்
சுத்தமற்ற சமையலால்
சுகவாழ்வு கெடும்
ஆகாரம் குறைந்த உடம்புக்கு
அசதி ஏற்படும்
ஆசாரமற்ற வாழ்க்கையில்
அமைதி குன்றும்
தகாத உறவினால்
தன்மானம் கெடும்
தரங்கெட்ட பொருளால்
விற்பனை மவுசு குறையும்
போகம் அளவுக்கு மீறினால்
ரோகம் வரும்
புடம் போட்ட தங்கம்
புதுமெருகு பெறும்
ஊகத்தில் தீர்ப்பளித்தல்
உண்மை யாகாது
ஊரோடு பகைத்த செயல்
உருப்படாது
சாகத் துணிவதற்கு
முயலக்கூடாது
சந்தோஷ வாழ்க்கைக்கு
சந்தேகம் வரவே கூடாது!

*அ.அரசரெத்தினம்*
*சேனையூர் - 6*

## புதுக்கவிதை

சொந்தங்கள் பிரிந்த போது
உறவுகள் அறுந்த போது
நண்பர்கள் பிரியும் போது
சோகம் என்னை வாட்டும்
போது
இன்பத்தை துன்பம் கலைக்கும் போது
கடல் அலைகளை பார்க்கும்
போது

வான் முகில்கள் கூடும் போது
வானம் பாடி வாழ்த்தும் போது
மலர்கள் மலரும் போது
கண் இமைகள் மூடும் போது
தாய் தாலாட்டுப் பாடும் போது
மழலைகள் சிரிக்கும் போது

நான் தனிமையில் இருக்கும்போது
கற்பனையை கவி வடிவமாக்கி
கண்ணீரை மையாக்கி
என் கரங்களில் விளையாடி
எழுதுகின்றேன் ஒரு புதுக் கவிதை

*பா:காங்கேஸ்வரி, 4ஆம் கட்டை,*
*அமதிபுரம், அக்கராயன்குளம்.*

## எம் தேச வித்துக்கள்

ஒன்றாய் எம்மோடு உடன்
வந்த தோழர்கள்
ஒரு தட்டில் உணவருந்தி
மனம் மகிழ்ந்த நண்பர்கள்
உல்லாச வானில் சிறகடித்த
சிட்டுக்கள் - இன்று
உறுதியாய் வீழ்ந்திட்ட எம்தேச
வித்துக்கள்.

நேற்றுவரை எம்மோடு
நெடுவழியில் வந்தவர்கள்
ஒருகல்லாய் இன்று
நெடுவரியில் நிற்பவர்கள்
வித்தாக வீழ்ந்தும்
விழுதெறிந்து வளர்பவர்கள்
சொத்தாக எம் மண்ணில்
புதைந்திட்ட முத்துக்கள்
நீறாக எதிரியின் மேல்
நெருப்புமழை பொழிந்தவர்கள்
நிலையாக எம்மனதில்
சுவடுகளை பதித்தவர்கள்
ஊருறங்கும் வேளையிலே
ஊணுறக்கம் மறந்தவர்கள்
ஊர்வாழவென்றே
உறவுகளைத்
தொலைத்தவர்கள்
தாயொடு பிள்ளையாக தாம்
வாழ விரும்பாமல்
தாயக வாழ்விற்காய்
தவம்செய்த வீரர்கள்.
வீழ்கின்ற வேளைவரை
விடுதலைக்காய்
உழைத்தவர்கள்
நாளை விடிகின்ற வேளையிலே
படமாக சிரிப்பவர்கள்.

*உடுவில் மானா*

## அவள் முகம்

நினைவு வைக்கோலை
விலகி விலக்கித் தேடுகிறேன்
கையிலிருக்கும் காசோடு
கடையில் என்ன பொருள்
வாங்க வந்தேன் என்று
எல்லாமே மறக்கப் பண்ணி
வந்து வந்து நிற்கிறதே
வழியில் கண்ட அவள் முகம்....!

*கு.க.தவசீலன்,*
*விசுவமடு.*

## சுனாமி அலை

இலங்கை ஒரு தீவு - அதில்
ஈடுசெய்ய முடியாத சாவு?
கடந்த இருபத்தியாறிலே
காவு கொண்டது இலங்கையை
சுனாமி என்றொரு சூரன் - அவன்
சூத்திரதாரியாகிய வீரன்.
உயிர்ப்பலி அதிகம் - அதில்
உடமை அழிவு மிக அதிகம்
மிகுதி மக்கள் ஒன்றிணைவோம்
மீண்டொரு இலங்கையை கட்டி
எழுப்பிட.

*பத்மறஞ்சன்*
*இருபாலை.*

## சேதமில்லை....

நட்பு எனும் ஏட்டினிலே
நாம் வரைந்த பாட்டினிலே
அன்பு எனும் ஊற்றினிலே
ஆடும் சிறு நாற்றினிலே
சின்னச் சின்ன கோபங்கள்
சிறிதாய் வந்தன ஊடல்கள்
செல்லமான சிணுங்கல்கள்
சிதறும் மூக்கில் நீர்துளிகள்
எல்லாம் வந்து போயிடினும்
ஏனோ நட்பில் சேதமில்லை.

**இராஜதீபா**
**யா/தேசிய கல்வியல்**
**கல்லூரி**

## வருகைகள்

அன்று என் கவலைகள் மறந்திருந்தேன் உங்களிடத்தில்

இன்று கவலைகளே நிரந்தரமாகி விட்டன எம்மிடத்தில்

எத்தனை நாட்கள் இந்த நிலைமைகள் நீடிப்பு

இத்தனைக்கும் இதயத்தில் இன்னும் இல்லை துடிப்பு

எதற்கு இந்த தொடரும் துயரங்கள்

இதற்குள் இருக்கிறதா இத்தனை மர்மங்கள்

என்னால் தானே இத்தனை இம்சைகள்

இனிமேல் இல்லை இவனால் துன்பங்கள்

இருண்டு விட்டன இவனது நினைவுகள்

இவனால் உங்களுக்கு எத்தனை நன்மைகள்

எனவே வேண்டாம் என் வருகைகள்

*சி.சுகந்தி, மாணிக்கபுரம்,*
*விசுவமடு.*

## நட்பு

மொட்டுக்களைவிட மலர்கள்
அழகானது
மலரைவிட உன்மௌனம்
அழகானது
தண்டை விட தாமரை அழகானது
தாமரையைவிட உன்தவிப்பு
அழகானது
வானத்தைவிட நிலவு அழகானது
நிலவைவிட உன் நாணம்
அழகானது
கனவைவிட கவிதை அழகானது
கவிதையை விட உன் நட்பு
அழகானது

*உச்பிரியா, ஸ்கந்தபுரம்,*
*கிளிநொச்சி.*

## முடிவு

என்னை
ஈன்றெடுத்த
அன்னையே
சிறையறையில்
நான் படும்
வேதனையை
முன் கூட்டியே - நீ
அறிந்திருப்பாயேயானால்
கருவறையிலேயே
என்னை
அழித்திருப்பாய்.

***களுத்துறைச்***
***சிறையிலிருந்து***
***ஜோ - கிறிஸ்டி.***

## பதில் சொல்!

உன்னை மறக்க நினைக்கிறேன்
முடியவில்லை.
என் கண்ணிலும் மனதிலும்
உன் விம்பமன்றி
வேறொன்றுமில்லை.
ஆனால் நீ
என்னை ஒரு காகிதம் போல்
கசக்கி எறிந்து விட்டு உன்
காரியத்தில் கண்ணாகிறாய்
எப்படி முடிகிறது?
என்னிதயம் கலங்கிய
நீரோடைபோல் தத்தளிக்கிறது
உன்னிதயத்தில் ஏன்
சலனமில்லாமல் போனது?
இரும்பாலான இதயமும்
கல்லாலான தேகமும்
எப்படியானது?
பதில் சொல்!

**தரணி,திருமலை.**

## என்ன நேருமோ?

நினைவும் மங்கி விட்டது
நினைக்கவும் ஒன்றுமில்லை
வினாடிகளும் நிமிடங்களும்
மணித்துளிகளும், நாட்களும்
கிழமைகளும் மாதங்களும்
பல வருடமென கழிந்துவிட்டது.
தலை மயிரும் நரைத்து
உருவமும் மாறுகிறது,
எமக்கு வரும் கடிதமும் மணியோடரும்
குறைந்து கொண்டே போகிறது,
எப்போது விடுதலையென
பேச்சுக்காவது கேட்க யாருமில்லை
எதிர்கால எதிர்பார்ப்புகள்.
மனதிலிருந்து மறைந்து கொண்டே
போகிறது
சோதனைச்சாவடிகளும் பதுங்கு
குழிகளும்
புதுப்பிக்கப்படுகின்றன
சமாதானத்துக்காய் ஓங்கியொலித்த
குரல்களும்
ஓய்ந்து போகிறது உள்ளம் உடைந்து
ஒப்பந்தம் கைச்சாத்தான போது
கைகுலுக்கியவர்கள் பார்வையில்
முறைக்கின்றனர் ஒருவரையொருவர்
ஆங்காங்கே டயரும் காவலரணும்
எரிந்தபடி
கல்லெறி வீச்சுக்களும்
சரமாரியாய்..........
யுத்த அரக்கனும் சமாதான போர்வை
போர்த்திய துப்பாக்கியால்
உயிர்களை உறிஞ்சிக் குடிக்கிறான்
சமாதானப் புறாவும் பீதியில்
ஓடி ஒழிக்க மறைவிடம் தேடுகிறது.

***களுத்துறை சிறையிலிருந்து***
***ஜோ.கிறிஸ்டி பெர்னாண்டோ.***

## காத்திருப்பேன்

பயிற்றையை உண்ட
கிளியைக் கலைக்க
சத்தம் என்று
இசையை எழுப்பினாய்.
அவ்விசையில் மயங்கி
எழுந்து பறக்காது
இருந்த கிளியாய்
நான் உணர்விழந்தேன்.
நான் தந்த காதல் மடலுக்கு
நீ தந்த மறுப்பு மடல்
காரணங்கள்
சொல் எனும் இனிமை
கொண்டு
தீட்டிய கவிதையாய்
என்னை மயங்கச் செய்து
உன்மீது கொண்ட காதலை
இரட்டிப்பாக்கி விட்டது!
கடமைகள் முடித்து
கரம் பற்ற வருவாய் நீயென
காலமெல்லாம் நான்
காத்திருப்பேன்

*ச.கருணாகரன்,*
*யாழ்.பல்லைக்கழகம்*
*யாழ்ப்பாணம்.*

## நிம்மதியானவை

ஆயுள் முடியும் வரைக்கும் அம்மா
அருகே இருந்தாள் நிம்மதி
கையில் குறையாத காசு இருந்தால்
கடைசி வரைக்கும் நிம்மதி.
சோகம் நெஞ்சை வாட்டும்போது
பாச வார்த்தைகள் கிடைத்தால் நிம்மதி.
வியர்வை உடலை நனைக்கும் போது
வீசிடும் தென்றல் நிம்மதி.
உள்ளம் குமுறி அழுதிடும் போது
வருகின்ற உறக்கம் நிம்மதி.
உயிரில் கலந்த உறவுகள் என்றும்
பிரியாமல் இருந்தால் நிம்மதி.
அழுதிடும் போது அன்பாய் அணைக்கும்
காதலி (காதலன்) கிடைத்தால் நிம்மதி
காண்கின்ற கனவில் எல்லாம் நல்லவை
என்றால் கனவுகள் என்றும் நிம்மதி
அன்பு வைத்த நெஞ்சுக்கு நிஜமான
அன்பு கிடைத்தால் நிம்மதி.

***ஆர்.கன்னன்,***
***வவுனியா.***

## ஏற்றுக்கொள்வாயா?

நாமம் தெரியாத தங்கையே
முகவரி தெரியாத முகமே
உன் ஒரே ஒரு
ஓரப் பார்வையினால் என் இதயம்
இடி விழுந்தது போல் ஆனது.
அன்று என்
அகவையோ ஐந்து
என்னை அணைத்து அன்பும்
ஆறுதலும் கூற வேண்டிய
என் அன்னை அவளை
அழைத்துச் சென்றாள்
"மரணம்"
எனும் கொடியவன்.
அன்றுத் தொட்டு இன்றுவரை
அன்புக்காகவும்
ஆறுதலுக்காகவும்
ஏங்குகிறேன்.
தாயிற்குப்பின் தாரம்
என்கிறார்கள்
அதனால் தான் என் மனம்
உன்னை நாடுது.
பணத்திற்காகவும்,
பகட்டுக்காகவும்
காதல் கொள்ளும்
இக்காலத்தில்
அன்புக்காகவும், பண்புக்காகவும்
ஏங்கும் என்னை நீ
ஏற்றுக் கொள்வாயா....?

***என்.ஜெய்கணேசன், ஆரியபுர,***
***பொகவந்தலாவ.***

## சமாதானத் தோழியே ஓடோடி வா

அன்பின் சமாதானத் தோழிக்கு
ஆவலுடன் எழுதுகிறேன்!
இதயம் நொறுங்கிய நிலையில்
ஈரமான கண்களுடன்
உன்னை யாசிக்கின்றேன்!
ஊமையின் கனவுபோல
எம்நிலையும் ஆகிடுமோ!
ஏக்கத்துடன் தவிக்கின்றேன்
ஐயத்துடன் வாழ்கின்றேன்.
ஒரு நிமிடமும் தாமதியாமல்
ஓடோடி வா என் சமாதான
தோழியே!

*அ.அமலராஜி, நெடுந்தீவு*

# பித்தன் பதில்கள்

*த.பிரதீபன். வல்வெட்டித்துறை*

**கேள்வி: பித்தா! ஒரே வகுப்பில் பல வருடங்கள் படித்து விட்டு — மேல் வகுப்புக்கு போக முடியாமல் தான் நீர்.. இந்த தொழிலுக்கு வந்தீராமே! உண்மையா?**

பதில் :அடடா.. எப்படி உமக்கு இந்த உண்மை தெரிந்தது..?நான் நன்றியில் நாயை விட மேலானவன். எல்லோரும் ஒரு வகுப்பில் படித்துவிட்டு நன்றி கெட்டதனமாக அந்த வகுப்பையும் — அந்த



வகுப்பு ஆசிரியரையும் விட்டு விட்டு... அடுத்த வகுப்புக்கு ஏறி விடுகிறார்கள். பின்னர் ஓ.எல், ஏ.எல் என்று வேறு பாடசாலைகளுக்கு ஓடிவிடுகிறார்கள். ஆனால் நான் மட்டும் நன்றியுன் அதே வகுப்பில் இருந்து கொண்டு — அதே ஆசிரியரை மறக்காது அதே பாடசாலையிலும் தொடர்ந்து அவரிடமே பாடம் படித்தது..கேவலமா..? பாராட்டப்பட வேண்டிய விடயமா..? சிந்தித்துப் பாரும்.....

*இராசேந்திரம் தர்ஷா. மாங்குளம்.*

**கேள்வி: அன்பின் பித்தா! உமது மனைவியிடம் நீர் ஏன் அடிவாங்கிக் கொண்டு இருக்கிறீர்..? என்னிடம் வாரும் நான் உம்மை ஒழுங்காக வைத்துப்பார்க்கிறேன்.**

பதில் : என்னை வைத்திருக்கத் துடிக்கும் உமது மனப்பான்மைக்கு நன்றி. ஆனால் சட்டியிலே இருந்து தப்பி அடுப்புக்குள் விழுந்து வெந்து — வேகி — நொந்து — நூலாக நான் தயாரில்லை.. ஆளை விடும்.

*புவிதா! திருநெல்வேலி கிழக்கு*

**கேள்வி : டியர் பித்தா மனைவிமாரை குறை கூறுவதில் அதிகபட்ச அக்கறை உடையவர்களாக ஆண்கள் திகழ்கிறார்களே! இதற்கு என்ன காரணம் என்று சொல்லமுடியுமா?**



பதில்: கணவன் குறை கூறக் கூடிய அளவுக்கு நடப்பதில் அதிக பட்ச அக்கறையுடையவர்களாக பெண்கள் திகழ்கிறார்களே! அதனால் தான்.

*து.வைதேகி.வெள்ளவத்தை.*

**கேள்வி : பித்தா உமக்கு கவிதை எழுத வருமா? முடிந்தால் ஒரு கவிதை எடுத்து விடும் பார்ப்போம்..?**

பதில் : ஷி..ஷி... ஷி.. கவிதை எழுதுவதென்பது எனக்கு கசக்கும். ஆனால் யாராவது எழுதிய கவிதையை ரசிப்பதில் புலி.. இதோ அப்படி நான் ரசித்த கவிதை ஒன்று..

ஆழக் குழி தோண்டு — அணு குண்டு கலாசாரம் புதை.

உள்ளத்தில் அன்பு நடு.. உலகத்தில் அமைதி வளர்

அந்நியனை அணைத்துக் கொள் — அருங்காட்சியகத்தில் போரை வை

தினமும் தியானம் செய் — சிதறும் சிந்தனையை சீராக்கு..

உன்னுள் இருக்கும் உன்னை அறி..

முடியாது என்பதை மூலையில் எறி..

ஒருவனுக்கு ஒருத்தியாய் வாழ்.. எயிட்ஸுக்கு எதிராய்

எமனாய் எழு, ஏடு தூக்கி ஏற்றம் காண்.

கல்லாமைக் கொரு கல்லறை கட்டு..

அரசு வேலை கோரிக்கை நிறுத்து..

விஞ்ஞான எல்லையை விசாலமாக்கு.

நிலாச் சோற்றை நிலவில் ஊட்டு.

மிகுந்த பொருள்தனை பகிர்ந்து கொடு.

வாட்டும் வறுமையின் வாழ்வை கொடு.

சரியான பாதையில் சமூகம் நடத்து.

எல்லாம் முடிந்து காத்திரு — எதிர்காலம் வரும் வழி பார்த்திரு.

பூத்துக் குலுங்கும் புதுயுகம் — அதன் வாசம் முகர்ந்து பிறவிப் பயன் எய்து.

*செல்வி. த.சந்திரா— முத்து மாரிநகர்.*

**கேள்வி: டியர் பித்தா! நெடு நாளாக ஒரு டவுட். சிலர் கதைத்துக் கொண்டிருக்கும் போது வேறு சிலர் ஒட்டுக் கதை கேட்கிறார்கள். பித்தா.. இதில் என்ன இன்ட்ரஸ்ட் உள்ளது?**

பதில் : இது மனித இயல்பு. பலருக்கு தமது வீட்டில் ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கும். ஆனால் அவைகளை எல்லாம் என்ன என்று கேட்டு தீர்த்து வைக்க நேரம் இருக்காது. மற்றவர்களின் வீட்டில் என்ன பிரச்சினை என்று விசாரித்து — அதனை ஊர் முழுக்க சொல்லித் திரிவதில் மகிழ்ச்சி. அதே போன்ற ஒரு மனோ வியாதிதான் இதுவும்.

ஏன் அதிகம் போக வேண்டாம். சினிமா நடிகர் நடிகைகளின் கிசு..கிசுக்களை போட்டால் தான் இப்போது பல பத்திரிகைகள் விற்பனையாகின்றன. மற்றவர்களின் அந்தரங்கங்களை அறிவதில் தற்போதைய உலகம் ஆவலாய்ப் பறக்கிறது. இது இன்ட்ரஸ்ட்டுக்காக இல்லை.. அப்பாடா.. என்னை விட அவனுக்கு பிரச்சினைகள் சாட இருக்கிறதே என்ற குரூர திருப்தி.

*இ.தோமஸ். குருநகர்.*

**கேள்வி அன்பின் பித்தா! அழகு யாருக்கு கூடுதலாக இருக்க வேண்டும் ஆண்களுக்கா.. பெண்களுக்கா.. ஏன் அப்படி?**

பதில் : ஆண்களுக்கு அகத்தில், பெண்களுக்கு முகத்தில். ஏனென்றால் பொதுவாக ஆண்கள் குணத்திற்காகத் தான் விரும்பப்படுகிறார்கள். பெண்கள் அழகுக்காகத் தான் விரும்பப்படுகிறார்கள்.

*கே.வாசவன். மல்லாகம்.*

**கேள்வி : பித்தா! ரஜனியின் சந்திரமுகி எப்படி ஜெயிக்குமா.. ரஜனியை கவிழ்க்குமா?**

பதில் : வெளியாகியுள்ள பாடல்களை பார்த்தால் பெரிதாக ஒன்றும் இல்லை போல் தெரிகிறது. வழமையான ரஜனி பாடல்கள் போல் சூப்பர்டுப்பர் வெற்றி கிடையாது போலிருக்கு. ஏதோ.. எவருக்கும் நட்டம் வைக்காமல்.. காக்கும் போல் தெரிகிறது.

*தீபனா மகான்— வட்டக்கச்சி.*

**கேள்வி: வணக்கம் பித்தா! ஆண்கள் கவலையை மறப்பதற் காக குடிக்கிறார்கள். அதேபோல் பெண்களும் கவலையை மறப்பதற்காக குடித்தால் என்ன வரும்?**

பதில் : அடிக்கடி வாந்தி எடுக்க வேண்டி வரும். ஏனென்றால் ஏராளமான தப்பு தண்டாக்கள் பெண்களுக்கு போதையை ஏற்றிவிட்டுத்தான் நடைபெறுகின்றன.



*கு.சந்துஷா. தேவிபுரம். அச்சுவேலி.*

**கேள்வி பித்தா! ஜோக் கதை ஒன்று தர முடியுமா? பிளீஸ்?**

பதில் : இறைச்சி வகைகளை விற்கும் கடைப்பகுதிக்கு ஒருவர் சென்றார். ஒரு கடையின் வாசலில் அங்கே விற்கப்படும் இறைச்சி வகைகளின் விலைப்பட்டியல் போடப்பட்டிருந்தது. அதனை வாசித்துப் பார்த்தார். அதில் ஒரு கிலோ ஆட்டு மூளை 100ரூபா, ஒரு கிலோ மாட்டு மூளை 75ரூபா, ஒரு கிலோ மனித மூளை. 1000 ரூபா என எழுதப்பட்டிருந்தது.

சென்றவருக்கு இந்த விலைப்பட்டியலை பார்த்து ஆச்சரியம். அருகே இருந்த கடைக்காரரிடம் இது பற்றி விசாரித்தார். ''ஐயா. உங்கள் விலைப்படியலில் ஆட்டு மூளை 100ரூபா, மாட்டுமூளை 75 ரூபா என்று போட்டிருக்கிறீர்களே! மனித மூளைக்கு மட்டும் 1000 ரூபா போட்டு வைத்திருக்கிறீர்களே.. ஏன் மனித மூளைக்கு மட்டும் இவ்வளவு அதிகரித்த விலை?''



அதற்கு கடைக்காரர் சொன்னார் ''ஐயா... ஒரு ஆட்டின் தலையை வெட்டினால் 500 கிராம் மூளையை எடுக்கலாம். ஒரு மாட்டை வெட்டினால் 500 கிராம் மூளையை வெளியே எடுக்கலாம். ஆனால் 500 மனிதர்களின் தலையை வெட்டினால் தான் ஒரு கிலோ மூளையை எடுக்க முடியும். அதனால் தான் இந்த விலை.'' என்றான் கடைக்காரன்.

*கயா. மல்லாவி.*

**கேள்வி : அன்பின் பித்தா! காதலித்தால் நிச்சயமாக கல்யாணம் செய்ய வேண்டும் என்பது கொள்கை. ஆனால் காதலித்து விட்டு ஏமாற்றுபவர்களை பற்றி என்ன நினைக்கிறீர்.. இது பற்றி உமது கொள்கை என்ன?**

பதில் : காதலித்தால் கலியாணம் செய்ய வேண்டும் என்பது உமது கொள்கையாக இருப்பது போல் — காதலித்து விட்டு ஏமாற்ற வேண்டும் என்பது அவர்களின் கொள்கையாக இருக்கலாம். ஆனால் எனது கொள்கை வேறு.. அதாவது காதலித்துப் பார்த்து அது கலியாண வாழ்வுக்கு சரிப்படும் என்றால் கல்யாணம் கட்டுவது.. சரிப்படாது என்றால் (ஏ) மாற்றுவது.

*எம்.தமிழ் விழி. அச்சுவேலி.*

**கேள்வி : பித்தா வசூல் ராஜா M.B.Bs இல் 'வாழ்க்கை வாழ்வதற்கே' ஜெமினி எடுத்த படம் என்ற ஒரு பாடல் வரி வருகிறதே.. அவர் என்ன படம் எடுத்தார்.**

பதில் : ஐயய்யோ..நீர் நினைப்பது அண்மையில் மறைந்த பழம்பெரும் நடிகர் ஜெமினி கணேசன் என்று. அது அப்படி அல்ல, முன்னர் தமிழ்நாட்டில் இப்போது அண்ணாசாலை எனப்படும் மவுண்ரோட்டில் உள்ள அண்ணா மேம் பாலத்துக்கு கீழே ஜெமினி ஸ்ருடியோ என்று ஒரு திரைப்பட ஸ்ருடியோ இருந்தது. அது ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் ஆகியவற்றை வெளியிடும் நிறுவனத்துக்குச் சொந்தமானது. அந்த ஜெமினி நிறுவனம் பல படங்களை எடுத்து வெளியிட்டது. அதில் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்றும் ஒரு படம் எடுத்து வெளியிட்டது. அதனை தான் அந்த படத்தின் பாடலிலே குறிப்பிட்டார்கள். நீர் நினைப்பது போல் ஜெமினி கணேசன் அப்படி படம் எதுவும் எடுக்கவில்லை. ஆனால் கணேசன் என்ற பெயரை வைத்திருந்தவர் அந்த படநிறுவனமான ஜெமினியில் வேலைக்கு சேர்ந்த பின்னர் தான் அவருக்கு ஜெமினி கணேசன் என்ற பெயர் வந்தது. இந்த விளக்கம் போதுமா.. இன்னும் கொஞ்சம் வேண்டுமா....

*எஸ் நளினி. மல்லாவி.*

**கேள்வி : அன்பின் பித்தா! எங்கள் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்று தமிழ் மக்கள் எல்லோரும் சொல்லும் போது சில அரசியல் வாதிகள் மட்டும் அதனை மறைப்பதற்கான காரணம் என்ன பித்தா?**

பதில் : தமிழ் மக்களுக்காக வெட்டிப்பிடுங்கிறோம் என்று சொல்லி இவ்வளவு காலமும் ஏமாற்றி வயிறு வளர்த்தவர்கள், தங்களையும் தங்களைச் சுற்றி இருந்த ஜால்ராக்களையும் வளர்த்துக் கொண்டவர்கள். இன்று தமிழ் மக்களுக்காக பேசக் கூடிய, போராடக் கூடியவர்கள் வந்தவுடன் — இவர்களது சாயம் வெளுத்துப் போய் விட்டதால் வெம்பி — வெதுத்துப் போய் பேசுகிறார்கள்.

*சா.புஷ்பா. கொல்லி விமால்குளம்.*

**கேள்வி : ஆசைப்பித்து மாமாவே! படிக்கும் மாணவிகளுக்கு பின்னால் பல ஆண்கள் செல்கிறார்களே. ஏன்?**

பதில் : ஹோமோன்கள் கலகம் செய்ய ஆரம்பித்தால் இப்படித் தான்.



*அ.அம்சலேகா. மஸ்கெலியா.*

**கேள்வி : பித்தா! பெண்களுக்கு சம உரிமை வழங்குவது பற்றி நீர் என்ன நினைக்கிறீர்...?**

பதில் : கட்டாயம் வழங்க வேண்டும் என்பது எனது கொள்கை. அதே நேரம் ஆண்களுக்கும் சமஉரிமை வழங்கினால் நல்லது.

*ந.சிவாகரன்—கல்வயல்.*

**கேள்வி: அன்பின் பித்தா! பெண்களுக்கு திடீர் திடீரென்று மனம் மாறுவதற்கான காரணம் என்ன?**

பதில்: அது இறைவனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடை நினைத்தது கிடைக்காது விடில், கிடைத்ததை நினைப்பார்கள்

## பித்தனின் கேள்வி

*கேள்வி:-அன்பின் பித்து! ஒருவர் தவறுதலாக பிழை ஏதும் செய்து விட்டால் மன்னித்து விடுவது நல்லதா? தண்டிப்பது நல்லதா?*

## வாசகர்கள் பதில்கள்

*ஜமிலா — வவுனியா.*

அதைத்தான் யேசுநாதர் சிறப்பாகக் கூறியிருக்கிறாரே. 'ஒரு கன்னத்தில் அறைந் தால் மறுகன்னத்தை காட்டு' என்று

*காயத்திரி — கொடிகாமம்.*

மன்னிக்கத் தெரிந்தவன் மனிதன் என்பார்கள். சரி போகட்டும் தவறுதலாகச் செய்து விட்டான் என்று மன்னித்துவிடுங்களேன்.

*சுபாஜினி — அளவெட்டி.*

சிறிய தவறுகள் செய்யும் போது தட்டிக் கழித்து வருவதால்தான் பித்தா பெரிய தவறுகள் இடம் பெறுகின்றன. எனவே, இரு தட்டுத் தட்டினால்தான் இனிமேல் இப்படியான தவறுகள் மீண்டும் இடம் பெறாது தடுக்கலாம்.

*மப்றூப்— கல்முனை*

தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கொடுக்கநினைத்தால் நிச்சயம் மரணதண்டனைதான் கொடுக்க வேண்டும். அப்படி என்றால்தான் தவறு மீண்டும் நடக்காது. அவ்வாறு மரணதண்டனை வழங்கினால் இவ் உலகில் தேவதாஸாக மாறும் ஆண்கள் குறைவார்கள். அதேநேரம் பெண்களின் எண்ணிக்கையும் குறைந்துவிடும்.



பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான —குறும்பான —யதார்த்தமான—பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

*க.யமுனா — கொக்குவில்.*

*கேள்வி:-பித்தா! சுனாமி மீண்டும் வரும் என வதந்திகள் பரப்பித்திரியும் விஷமிகள் பற்றி என்ன நினைக்கிறீர்?*



பதில்:- சுனாமியில் சுருட்டியதெல்லாம் முடிஞ்சு போச்சு போல. கதைவிட்டு மீண்டும் சுருட்டலை மேற்கொள்ள நினைக்கும் விஷக் கிருமிகள்.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு - 14.

# சச்சின் திரைப்பட முன்னோட்டம்



'சச்சின்'
—விஜய், பிபாஷா—

கலைப்புலி எஸ்.தாணுவின் 'வி' கிரியேஷன் வழங்கும் 'சச்சின்' படத்திற்கான சில முக்கிய காட்சிகள் உல்லாச நகரமான ஊட்டியில் படமாக்கப்பட்டன.

இந்தப் படத்தில் விஜய்யின் ஜோடியாக ஜெனிலியா டிஸோசா நடிக்கிறார். மும்பைக் கவர்ச்சிப்புயல் பிபாஷா பாசு ஒரு முக்கியமான கேரக்டரில் நடிக்கிறார். இவர்களுடன் வடிவேலு, ரகுவரன், சந்தானம் ஆகியோர் நடிக்கின்றனர்.

சச்சின் துணிவுள்ள, நேர்மைக்குணம் கொண்ட இளைஞன். தனக்கு எது சரி என்று படுகிறதோ அதை சரியாக செய்யக்கூடியவன் சச்சின். தனக்காக வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும் என்ற வித்தியாச குணம் கொண்டவன் அவன். பொதுவாகச் சொன்னால் மற்றவர்களிடமிருந்து தன்னை மாறுபடுத்திக் காட்டும் குணம் கொண்டவன்.

ஒரு சின்ன உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், ஊட்டி கல்லூரியில் படிக்கும் மற்ற மாணவர்கள் தற்போது புது மாடலில் வந்திருக்கும் மோட்டார் சைக்கிளை ஸ்டைலாக ஓட்டியபடி வந்தாலும் மாணவன் சச்சின் மட்டும் தனக்கு மிகவும் பிடித்த பழைய மோட்டார் சைக்கிளையே ஓட்டி வந்தான்.

வழக்கம்போல ஊட்டி மலைப் பாதையொன்றில் பழைய மோட்டார் சைக்கிளில் வந்த அவனை பள்ளி மாணவர்கள் வழிமறித்த போது — அவர்களுடன் உற்சாகமாகப் பாட்டுப் பாடத் தொடங்கினான்.

இப்பாடல் காட்சி ஊட்டியில் எடுக்கப்பட்டது.

'சச்சின்' படப்பிடிப்பை நேரில் காண்பதற்காக தயாரிப்பாளர் 'கலைப்புலி' எஸ். தாணு ஊட்டிக்கு அழைத்திருந்தார். அங்கு தயாரிப்பாளர் பரந்தாமனிடம் பேசிக் கொண்டிருந்தபோது....

''இன்றைய இளைஞர்களுக்கு மட்டுமல்ல— எல்லோருக்குமே பிடிக்கக்கூடிய கதை. அப்பா (கலைப்புலி எஸ்.தாணு)வின் படங்களில் யதார்த்தமான நேர்த்தி இருக்கும். பிரம்மாண்டமாகவும் இருக்கும்.

படத்தில் மும்பையைக் கலக்கி வரும் பிபாஷா பாசு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். கதாநாயகியாக ஜெனிலியா நடிக்கிறார். அவரவர் கேரக்டருக்கேற்ப — சிறப்பான முறையில் அவர்கள் நடித்துள்ளனர்!

சென்னையில் ஒரு மினி ஊட்டி செட் போட்டு — படப்பிடிப்பு நடத்தியுள்ளோம். வெளிநாடுகளில் இரண்டு பாடல் காட்சிகளைப் படமாக்கவுள்ளோம். 'சச்சின்' ஏப்ரல் 14ம் தேதி ரிலீஸாகிறது!'' என்றார் பரந்தாமன்.

சச்சினாக நடிக்கும் விஜய் தெரிவிக்கும் போது....

'சச்சின்' கதை மென்மையான லவ் சப்ஜெக்ட். அதனால் ஆக்ஷன் காட்சிகள் குறைந்திருக்குமா என்று ரசிகர்கள் அஞ்சத் தேவையில்லை. எந்த அளவிக்குத் தேவையோ அந்த அளவுக்கு ஆக்ஷன் சீன்கள் படத்தில் இருக்கும்.

இந்தக் கதையை முதன்முதலில் டைரக்டர் ஜான் சொன்னபோதே — முதல் அரைமணி நேரத்திற்குள் படத்தில் நடிக்க சம்மதித்துவிட்டேன்.

இந்த படம் 'கில்லி' போல் இருக்குமா என்று கேட்கிறார்கள். 'கில்லி' கேரக்டரை வைத்தே மீண்டும் ஒரு படத்தை எடுக்க முடியாது. இந்தக் கதை எல்லோருக்கும் மிகவும் பிடித்திருக்கும். குறிப்பாக எனது ரசிகர்களுக்கு நிச்சயமாகப் பிடிக்கும்'' என்றார்.

படத்தின் இயக்குநர் ஜான் பேசுகையில்...

''சச்சின் என்ற பெயரை ஹீரோவுக்கு வைத்ததற்கு முன்பே காரணத்தைக் கூறி உள்ளேன். 'சச்சின்' என்றால் இன்று நாட்டில் எல்லோருக்கும் தெரியும். சச்சின் டெண்டுல்கார் அந்த அளவுக்கு ரசிகர்களால் நேசிக்கப்படுகிறார். இன்று பல் குழந்தைகளுக்கு 'சச்சின்' என்று பெயர் சூட்டியுள்ளனர். குழந்தைகளுக்கும் அந்தப் பெயர் பிடித்தமாகி உள்ளது.

இன்று குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த நடிகராக விஜய் இருக்கிறார். அவருக்கு முற்றிலும் வித்தியாசமான ஒரு கேரக்டரை கொடுத்து — குழந்தைகளுக்கும் பிடிக்கிற மாதிரி ஒரு கதையை அவரிடம் சொன்னபோது உடனே அதில் நடிக்க சந்தோஷமாக ஒப்புக்கொண்டுவிட்டார்.

அவரை மனதில் வைத்தே எழுதப்பட்ட கதை என்றும் இதைக் கூறலாம்.

கதாநாகியாக நடிக்க ஜெனிலியாவைக் கேட்டபோது முதலில் யோசித்தார். பிறகு கதையைக் கேட்டதும் இதில் நடிக்க ஒப்புக் கொண்டுவிட்டார்.

அதே போலவே பிபாஷா பாசுவை நடிக்க வைத்ததும் சுவாரசியமான சம்பவம். முதலில் டெலிபோனில் பேசியபோது — இதில் நடிக்க ஆர்வம் காட்டவில்லை. ஆனால் மும்பைக்குச் சென்று கேட்டபோது ''பதினைந்து நிமிடத்தில் சொல்லுங்கள் — என் கேரக்டர் பற்றி!'' என்றார்.

அப்படி முதலில் சொன்னவர் ஒன்றே கால் மணிநேரம் கதையைக் கேட்டுவிட்டு நடிக்க சம்மதித்தார். படத்தில் இரண்டு கதாநாயகிகள் என்று சொல்ல முடியாது. ஆனால் பிபாஷாவுக்கு முக்கியமான ரோல் என்பதை மட்டும் சொல்ல முடியும்'' என்றார்.



'சச்சின்'
—விஜய், ஜெனிலியா—



'சந்திரமுகி'
—ரஜனி, நயன்தாரா—

# புடவைக்கு இனி குட்பாய் - நயன்

முதல் படமான ஐயாவில் புடவை. இரண்டாவது படமான சந்திரமுகியில் புடவை! இப்படி அடுத்தடுத்த படத்தில் புடவை கட்டியதாலோ என்னவோ, நயன்தாரா என்றாலே முற்றிப் பழுத்த முதுமைக்கிழவி என்ற இமேஜை கொடுத்துவிட்டது.

இதை நன்றாக புரிந்து கொண்ட நயன்தாரா இனிவரும் படங்களில் ஐந்து முழத்தில் டவல் கொடுத்தாலே போதும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டாராம். சின்ன பசங்களுடன் நடிப்பதே தன்னுடைய எதிர்கால லட்சியம் என்று சொல்லுகிற அளவிற்கு நொந்து போயிருக்கும் நயன், இளம் இயக்குனர்களுக்கு போன் போட்டு சான்ஸ் கேட்கிற படலத்தில் இறங்கிவிட்டாராம். இந்த முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. எ...
சூர்யா நடிக்கும் 36—28—36 என்ற படத்தில் ...
வுக்கு ஜோடி இவர்தான்.

சமீபத்தில் சந்திரமுகி பட ஆடியோக் கேசட் ...
யீட்டு விழாவிற்கு வந்திருந்த நயனும், ஜே...
வும் அடித்த அரட்டை இருக்கிறதே.. பார்க்க ...
பரவசம். கேட்கக் கேட்க பழரசம்! படப்பிடிப்...
சரி, பொது இடங்களிலும் சரி, உம்மென்று ...
தால் எனக்குப் பிடிக்காது.

சந்திரமுகி படப்பிடிப்பில் எல்லோரும் ''...
சார் இருக்காரு'' என்று ஒதுங்கிப்போக, அவ...
தன் அரட்டை கச்சேரியில இழுத்துவிட்டு ...
டையே திகைப்பில் ஆழ்த்தினாராம் நயன்த...

# சினித் தகவல்க...



பாண்டு முதன் முதலாக வில்லன் வேடத்தில் தோன்றும் படம் 'ஸாரி எனக்கு கல்யாணமாயிடுச்சி'. இந்த படத்தில் ஃபிளோராவை கற்பழிக்கும் ஒரு காட்சியில் பாண்டு அசத்தலாக நடித்து இயக்குனரின் கைதட்டலை பெற்றுள்ளார். பாண்டுவின் பலநாள் ஆசை நிறைவேறி இருக்கிறது. வில்லன் வேடத்தில் நடிக்கவேண்டும் என்ற ஆசையைச் சொன்னோம்.

*****

டூயட் மூவிஸுக்காக ப்ரியா இயக்கி வரும் புதிய படம் 'கண்டநாள் முதல்' இப்படத்தில் லைலா கதாநாயகியாக நடிக்கிறார். சமீபத்தில் சென்னையை அடுத்துள்ள இரும்புலியூரில் படப்பிடிப்பு நடந்தபோது தாறுமாறாக வந்த லாரி, யூனிட்டில் இருந்தவர்களை தடுமாறவைக்க அதிர்ஷ்டவசமாக நாயகி லைலா கசங்காமல் காப்பாற்றப்பட்டார்.

*****

கலைப்புலி தாணுவின் 'தொட்டி ஜெயா' படத்தை முடித்த பின்பு சிம்பு புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார் இப்படத்தை இயக்குபவர் அவரது நண்பரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யா. இவர் சிம்பு வுக்கு ஜோடி தேடும் படலத்தில் தற்போது இறங்கியுள்ளார்.

*****

கமல்ஹாசன் தயாரித்து நடிக்கும் 'மும்பை எக்ஸ்பிரஸ்' படத்தில் ஹொலிவுட் மாடல் அழகிகளை வைத்து கிளுகிளுப்பான ஒரு பாடல் காட்சியை படமாக்கியிருக்கிறார்கள். இந்தக் காட்சியில் கமராவே வெட்கப் படும் அளவுக்கு அத்தனை கிளுகிளுப்பாக ராக்சி சாவந்த் என்ற பலிவுட் அழகி ஆட்டம் போட்டுள்ளாராம்.

*****

பிரிக்க முடியாதது எஸ்.ஜே.சூர்யாவும் வில்லங்கமும் என்று திருவிளையாடல் தருமி ஸ்டைலில் வசனம் சொல்ல வேண்டும். ஏனெனில் எஸ்.ஜே.சூர்யாவின் ஜோடியாக நயன்தார நடிக்கும் படத்திற்கு 36—28—36 என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். (பெயரை மாற்றத்தீர்மானம்)

நீண்ட இல...
நெப்போலியன...
படத்தில் நடித் து...
இந்தப் படத்...
நெப்போலி...
போட்டி...
வில்லிவாக்கம் தெ...
இருப்ப...
எம் எல்.ஏ...
நகராட்சித் ...
ஐஸ்வர்...
எம்....



# இனி ...யன்

கிடைத்திருக்கிறது. எஸ்.ஜே. ... 28—36 என்ற படத்தில் சூர்யா ...ான்.

...முகி பட ஆடியோக் கேசட் வெளி ...வந்திருந்த நயனும், ஜோதிகா ... இருக்கிறதே... பார்க்க பார்க்க ...ட்க பழரசம்! படப்பிடிப்பிலும் ...ரிலும் சரி, உம்மென்று இருந் ...காது.

...பிடிப்பில் எல்லோரும் ''ரஜினி ...று ஒதுங்கிப்போக, அவரையே ...ரியில இழுத்துவிட்டு யூனிட் ...ஆழ்த்தினாராம் நயன்தாரா!

# கமலுக்கு குணா விக்ரமுக்கு சேது எனக்கு ராம் - ஜீவா



'ராம்' —ஜீவா—

'ஆசை ஆசையாய்', 'தித்திக்குதே' என இரண்டு படங்களும் ஜீவாவுக்கு கைகொடுக் கவில்லை. ஆனால் இதற்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து ஜீவாவை உச்சத்திற் குக் கொண்டு போய்விட்டது அமீரின் 'ராம்' படம். அடுத்து 'கண்ணெதிரே தோன்றினாள்' பட இயக்குனர் ரவிச்சந்திரனின் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் ஜீவா.

''ஆடியன்ஸோட சேர்ந்து 'ராம்' படம் பார்த்தோம். தியேட்டரில் என்னைப் பார்த்து விட்டு தூக்கி வைத்து கொண்டாடினார்கள். உன்னுடைய பிறந்த நாள் பெப்ரவரி 3— தான். ஆனால் ராம் படம் வெளியான மார்ச்3— தான் உன் உண்மையான பிறந்த நாள் என என் அம்மாவே சந்தோஷப்பட்டார். இத்தனை சந்தோஷத்துக்கும் காரணம் டீம் ஒர்க் கம்பெனியின் கலைஞர்களும் குறிப்பாக, டைரக்டர் அமீர் சாரும் தான்'' என நெகிழ்ந்து போய் பேசுகிறார் ஜீவா.

''கமல் சாரின் குணாவும், விக்ரம் சாரின் சேதுவும் எனக்கு ரொம்பப் பிடித்த படங்கள். சினிமா ஆசை வந்தபோதே அப்படி ஒரு படம் பண்ணவேண்டும் என்கிற கனவும் வந்துவிட்டது. அந்தக் கனவு இத்தனை சீக்கிரம் நிறைவேறும் என்று நான் நினைத் துக்கூடப் பார்க்கவில்லை. ஓரிரு வருடங்களுக்கு முன்பே இந்தக் கதையின் அவுட் லைனை என்னிடம் அமீர் சொன்னார். அவர் சொன்ன விதமே என்னை அந்தக் கதைக் குள் இழுத்துக்கொண்டு போய்விட்டது. அப்போதிருந்தே 'ராம்' கேரக்டருக்காக நிறைய ஹோம் வேர்க் செய்யத் தொடங்கினேன். பல்வேறு தரப்பட்ட மனிதர்களைப் பார்த்து அவர்களின் வித்தியாசமான குணாதிசயங்களை அப்சர்வ் பண்ணினேன். இப்படி நான் செய்த பயிற்சி தான் இந்த ஜீவா 'ராம்' ஆகவே மாறிப்போக காரணம்.

அந்த உழைப்புக்கு இப்போது சரியான சம்பளம் கூடவே ஊக்க போனஸும் கிடைத்திருக்கிறது. தொடர்ந்து ஆக்ஷன் வித் லவ் சப்ஜெக்டுகளில் தனித்துவம் வாய்ந்த கதாபாத்திரங்களில் நடித்து இப்போது கிடைத்திருக்கும் பெயரை தக்கவைத்துக் கொள்வேன்'' என்று அழுத்தம் திருத்தமாக பேசினார் ஜீவா.



'ராம்' —ஜீவா, கஜாலா—



'சொல்லட்டுமா' —குட்டி ராதிகா—

# ...வல்கள்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நெப்போலியன் 'வீரண்ணா' என்ற படத்தில் நடித் துக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தில் முதல் முறையாக நெப்போலியன் இரட்டை வேடம் போட்டிருக்கிறார். நிஜத்தில் வில்லிவாக்கம் தொகுதி எம்.எல்.ஏ.ஆக இருப்பவர் இந்தப் படத்திலும் எம் எல்.ஏ. ஆகவே நடிக்கிறார். நகராட்சித் தலைவியாக நடிக்கும் ஐஸ்வர்யா வில்லி கேரக்டரில் எம்.எல்.ஏ. நெப்போலிய னுடன் மோதுகிறார்.

# வருடத்திற்கு 4 படங்களாம்



—பிரகாஷ்ராஜ்—

சினிமாவில் சம்பாதிப்பதை சினிமாவில் முதலீடு செய்பவர் கமல் மட்டுமே. இப்போது கமலுடன் இணைந்திருக்கிறார் பிரகாஷ்ராஜ்.

'தயா' படத்தில் துவங்கியது இவரது தயாரிப்பு பணி. 'நாம்', 'அழகிய தீயே' என தொடர்ச்சியாக படம் தயாரித்தவர் இனி வருடத்திற்கு நான்கு படங்கள் தயாரிக்க முடிவு செய்துள்ளார்.

முதலாவதாக மணிரத்னம் அசிஸ்டெண்ட் ப்ரியா இயக்கத்தில் 'கண்ட நாள் முதல்'.அடுத்து தனது குருநாதர் கே.பாலசந்தர் இயக்கத்தில் 'பொய்'.

இது தவிர அதியமான் இயக்கத்தில் ஒரு படமும் சிவா இயக்கத்தில் ஒரு படமும் தயாரிக்க பேச்சு நடக்கிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் பிஸியாக நடித்துவருகிறார் பிரகாஷ்ராஜ். அதனுடன் நான்கு படங்களை தயாரிப்பது அவர் திறமைக்குச் சான்று.

பெரிய பெரிய ஸ்டார்களெல்லாம் வருடத்திற்கு இரண்டு படங்கள் நடிக்க ஆலோசித்து வருவதையே சாதனையாக பேசும் தமிழ்சினிமாவில் பிரகாஷ்ராஜின் முடிவு நிச்சயம் பெரிய சரித்திரம்தான்.

# ரஜனியின் வேண்டுகோளும் தரணியின் சம்மதமும்

முதல் படத்தின் ரிலீசின் போது கூட இத்தனை டென்ஷன் இருந்திருக் காது ரஜினிக்கு. சந்திரமுகி ரிலீஸ் நெருங்க, கோவில் கோவிலாக ஏறி இறங்க ஆரம்பித்திருக்கிறார். திருவண்ணாமலை, திருப்பதி என்று அவர் அடிக்கிற தெய்வீக டிரிப்புகள், சினிமாவுலகத்தை மட்டுமல்ல, அரசியல்வாதிகளையும் கவனிக்க வைத்திருக்கிறது. சமீபத்தில் திருப்பதி சென்றிருந்த ரஜினி ஸ்பெஷல் கேட் வழியாக உள்ளே நுழைந்து மின்னல் வேகத்தில சாமி கும்பிட்டு விட்டு வெளியேறியிருக்கிறார். அவரை சூழ்ந்து கொண்ட பத்திரிகையாளர்களுக்கும் கும்பிடு ஒன்றையே பதிலாக தந்துவிட்டு அவர் சென்றுவிட, அவர் பின்னால் சென்ற உதவியாளர்கள், ''சந்திரமுகி நல்லா ஓடணும்னு பிராத்தனை பண்ணிட்டு போறாரு'' என்றார்கள்.

இதற்கிடையில் ரஜினி தரப்பிலிருந்து சந்திரமுகி ரிலீஸ் நேரத்தில் வரப்போகும் பிற படங்களின் ரிலீசையும் தள்ளி வைக்கிற முயற்சிகள் நடக்கின்றன. சச்சின் படத்தின் தயாரிப்பாளர் தாணு என்பதாலும், ரஜினிக்கு அவர் ஏற்கனவே நல்ல நண்பர் என்பதாலும், சச்சின் படத்தின் ரிலீசை தள்ளிப்போட வைத்திருக்கிறார்கள். அதைப்போலவே அந்நியன் படத்தின் ரிலீசையும் தள்ளி போட வைத்திருக்கிறார்களாம்.

ஏப்ரல்—14 திகதி ரிலீஸ் ஆகும் படங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய படங்கள் இது இரண்டும்தான் என்பதால் பதட்டத்தில் இருந்த ரஜினி தரப்பு, இப்போது ரிலாக்ஸ் ஆகிவிட்டது.

ரஜினியின் இந்த சமாதானப்படலத்தை கேள்விப்பட்ட ரசிகர்கள் சற்றே அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்களாம். ஏனென்றால்,

தலைவன் நிமிர்ந்தா மலை...

சொறிஞ்சா தலை என்று கோஷம் போட்டது அவர்கள்தானே!

# சிம்பு செய்த மாயம்

சிம்பு கதை, திரைக்கதை எழுதிய படம் 'மன்மதன்'. இயக்குனர் ஏ.ஜே.முருகன். அடுத்து ஏ.ஜே.முருகன் இயக்கும் படத்திற்கு சிம்பு இசையமைப்பதாக சொல்லப்பட்டது. அது உண்மையா இல்லையா என்று அறியும் முன் படவேலை தள்ளிப் போனது.

துரையின் 'தொட்டி ஜெயா' எஸ்.ஜே.சூர்யாவின் 'ஏசி' படங்களுக்கு பிறகு சிம்பு நடிக்கும் படம் 'வல்லவன்'. பி.எல். தேனப்பன் தயாரிக்கிறார். மலேசியா அருகிலுள்ள தீவில் 'வல்லவனு'க்கான கதை, திரைக்கதை விவாதத்தை முடித்துவிட்டார் சிம்பு. படத்தையும் சிம்புவே இயக்குவதாக இருந்தது. இப்போது இதில் மாற்றம் . படத்தை இயக்குபவர் 'மன்மதன்' படத்தின் இணை இயக்குனர் ஸ்ரீநாத். இந்தப் படத்தில் இணை இயக்குனராக பணியாற்ற இருப்பது... அதுதான் ஆச்சரியம்! 'மன்மதன்' படத்தை இயக்கிய ஏ.ஜே.முருகன் தன் சிஷ்யன் படத்தில் சிஷ்யனாக பணியாற்ற எப்படி ஒப்புக்கொண்டார்? எல்லாம் சிம்பு செய்த மாயம்.

# இன்ப அதிர்ச்சியில் பரத்

ஷங்கரின் முதல் தயாரிப்பில் வெளியான படம் காதல். அப் படத்தில் ஹீரோவாக நடித்த பரத்திற்கு 50 ஆயிரம் மட்டுமே சம்பளமாகத் தரப்பட்டதாம். காதல் கொடுத்த மெகா ஹிட் காரணமாக அதே ஷங் கர் அடுத்து தயாரிக்கும் புதுப்படத்திற்கு 5 லட்சம் ரூபா.கொடுத்து இன்ப அதிர்ச்சியடைய வைத்திருக்கிறார். அட்வான்சே 5லட்சம் என்றால் சம்பளம் எவ்வளவு தருவார் என்று ராத்திரி எல்லாம் கணக்குப் போட்டு கண்டுபிடிக்க முடியாமலேயே கண்ணயர்ந்திருக் கிறார் மெக்கானிக் முருகன். என்ன அவர் யார், இடையில் முருகன் என்று பதட்டப்படுகிறீர்களா. அவர்தாங்க நம்ப காதல் நாயகன் பரத். இப் படமும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்ப தாகக் கூறும் பரம் தொடர்ந்து வெற்றிப்படங்களை தர எமது வாழ்த்துக்கள்.

# கடவுள் சன்னதியில் காதல் அரங்கேற்றம்

காதலில் பேதலித்துப் போகும் இளைஞன் ஒருவன். அவன் சுயநினைவை மீட்டெடுக்க அவன் நண்பர்கள் முயற்சிக்கிறார்கள். அதற்காக தங்கள் பழைய கல்லூரி வாழ்க்கையை பல சிரமங்களுக்கு மத்தியில் மீண்டும் உருவாக்குகிறார்கள்.

ரிடையர்ட் ஆன பேராசிரியர்கள், மணமான மாணவிகள் என முன்னாள் மாணவர்கள், பேராசிரியர் அனைவரையும் ஒன்று திரட்டி கடந்த கால கல்லூரி வாழ்க்கையை மீண்டும் நிஜத்தில் ஏற்படுத்துகிறார்கள்.

நந்தா பெரியசாமி இதைத்தான் 'ஒரு கல்லூரியின் கதை' யாக எடுத்து வருகிறார். இது உண்மைக் கதை என்பது இதன் ஸ்பெஷல்.

கல்லூரிக் காதல் என்றாலும் படத்தின் நாயகனுக்கு காதல் பற்றிக்கொள்வது கடவுள் சன்னதியில். நாயகன் ஆர்யா ராம நவமிக்காக பெருமாள் கோயிலுக்கு செல்கிறார். அங்கு 'சீதா கல்யாண வைபோகமே...' பாடல் ஒலிக்கிறது. அந்த இனிமையான குரலை தொடர்ந்து போகும் ஆர்யாவுக்கு இன்ப அதிர்ச்சி.

அவர் யாரை மனசுக்குள் காதலித்து வருகிறாரோ அதே சோனியா அகர்வால் அங்கு பாடிக்கொண்டிருக்கிறார். கடவுள் பாடலை காதலி பாடகேட்கும் பக்தனாக ஆர்யா ஆறாக உருகும் காட்சிக்கு ஸ்பெஷல் கைத்தட்டல் நிச்சயம் என்கிறது பட யூனிட். கல்லூரிக் கதையைச் சுமந்து வரும் இப் படம் காதலில் அரங்கேறிவந்தால் சரிதான்.

உங்களுக்கு எப்படி பொறுத்திருங்கள்?



—சோனியா அகர்வால்—

# ஆழிப் பேரலை அச்சம் மாறாத நிலையில் மக்கள்

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கையை கடுமையாகத் தாக்கிய ஆழிப் பேரலை பெருமளவிலான உயிர் இழப்புக்களையும் உடமை சேதங்களையும் ஏற்படுத்தியதுடன் பல்லாயிரக் கணக்கான மக்களை அகதிகளாக அகதி முகாம்களுக்கு அனுப்பியது.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் கழிந்து விட்ட நிலையிலும் அது ஏற்படுத்திய மனித அவலங்களும், விட்டுச்சென்ற கோரவடுக்களும் இன்றும் மக்கள் மனதை விட்டு அகலாது உள்ளன.

இலங்கையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை என பல பகுதிகளும் கடற்கோள் அனர்த்தத்தில் கடும் அழிவுகளைச் சந்தித்தன.

இப்பகுதிகளில் அனர்த்தம் நிகழ்ந்த வேளையில் அதில் அகப்பட்டு அதிஷ்டவசமாக உயிர் பிழைத்தவர்கள் அதன் பயங்கரத்திலிருந்து இன்னமும் விடுபடாமல் ஒரு வித பயப் பீதியுடனேயே இன்றும் காணப்படுகின்றனர்.

அவர்களுடைய பீதிக்கு பிரதான காரணமாக இருப்பவை அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பயங்கர அனுபவங்கள் தான்.

கண் முன்னாலேயே தமது மனைவியை பறி கொடுத்த கணவன், கணவனை பறிகொடுத்த மனைவி, தாயைப் பறிகொடுத்த பிள்ளை, பிள்ளையைப் பறி கொடுத்த தாய் என அலை எல்லாவற்றையும் அள்ளிச் சென்றதை நேரடியாகக் கண்டவர்கள் -



பயங்கரத்தை உணர்ந்தவர்கள் - மீண்டும் ஏற்பட்டால் எப்படி இருக்கும்? ஏற்படுமா? எங்கே ஏற்படும்? என்றெல்லாம் பயம் கொண்டிருப்பதை அண்மைய சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

முல்லைத்தீவில் பேரலை அனர்த்தத்தில் உயிர் தப்பிய சிறுவனொருவன் தனக்கு இரவில் கடல் பொங்கி தனது வீட்டை நோக்கி வருவது போல தினமும் கனவு வருவதாகவும் தான் விழித்து எழுந்து பார்த்தால் எதையும் காண்பதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது பாதிப்பினுடைய பாரதூரத்தை காட்டி நிற்கிறது.

இது ஒரு புறமிருக்க தேவையற்ற வதந்திகளை கிளப்பிவிட்டு 'எரிகிற வீட்டில கொள்ளிபிடுங்கும்' சில விஷமிகளை நம்பி பல தடவை மக்கள் பதறியடித்து பயந்தோட வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்தமாத முற்பகுதியிலும் அம்பாறைப்பிரதேசத்தில் மீண்டும் சுனாமி வந்து விட்டதாக சிலர் கூறவே மக்கள் பதறியடித்து நகர உட்புறம் ஓடியதுடன் பொது நிறுவனங்கள், பாடசாலைகள், கடைகள் உட்பட அனைத்தும் இழுத்து மூடப்பட்டதுடன் அவசரமாக வாகனங்கள் சென்ற வேளையில் பல இடங்களில் விபத்துக்களும் ஏற்பட்டன.

பேரலை நிகழ்ந்த 26இன் மூன்றாம் மாதமான மார்ச் - 26லும் மக்கள் பீதிக்குள்ளாகினர்.

களுத்துறைப் பகுதியில் கடற்கரையோரப் பிரதேச மக்கள் சுனாமி மீண்டும் ஏற்பட்டுவிட்டது என பீதியடைந்து ஓட்டம் பிடித்துள்ளனர். கல்முனைக்கரையோரப் பகுதி மக்கள் பலர் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதுடன் கடற்கரையோர இடிபாடுகள் அகற்றும் பணியும் ஸ்தம்பித்தது.

பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய அகதி முகாமுக்கு கிழக்குப் புறமுள்ள பெரும்பாலான மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் இரவோடு இரவாக இடம்பெயர்ந்து சேனைக் குடியிருப்பு, நாவிதன் வெளிப்பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். கல்முனை மீனவர்களும் அன்று கடலுக்குச் செல்ல வில்லை. கல்முனையில் மட்டுமல்ல நாட்டின் கரையோரப்பகுதி அனைத்திலும் வாழும்

**-சந்திரன்-**

மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டே இருந்தது.

ஆனால் ஆழிப்பேரலை பாதித்த இடங்களில் மீண்டும் இயற்கை அனர்த்தம் ஏற்படவாய்ப்பில்லை. பௌர்ணமி தினத்தில் ஏற்படும் ஈர்ப்புக்காரணமாக கடல் அலைகள் மேலெழுவது வழமையான இயற்கை நிகழ்வாகும்.

இனி அப்படி ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுமானால் அதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய வகையில் சர்வதேச காலநிலை அவதான நிலையத்துடன் இலங்கை தொடர்பு கொண்டுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களமும் புவிச்சரிதவியல் ஆய்வுப் பணியகமும் தெரிவித்துள்ள.

எனவே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் இயற்கை அனர்த்தம் ஏற்படும் என்ற வதந்திகளை நம்பி எவரும் வீண் பீதியடையாது நாளாந்த கடமைகளை கவனித்து அனர்த்த வடுக்களின் நினைவுகளை படிப்படியாக மறக்க முயல்வதே ஆரோக்கியமான சூழலுக்கு வழிவகுக்கும்.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 04-04-2005 முதல் 10-04-2005**
**பொ. சந்திரன்**

**மேடம்:அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 10 இல் மத்திமபலனைச் செய்யும். உச்சமாக இருப்பதால் நல்ல பலனைச் செய யலாம். மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. பிரயாண வாய்ப்பு உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். (2,7) உரிய சுக்கிரன் 12 இல் உச்சமாக இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நாலாம் வீடு செவ்வாயின் பார்வையில் இருப்பதால் வாகன சுகம் இல்லை. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (9,12) உரிய குரு 6 இல் இருப்பதால் பிதாவுக்கு கூடாது. சயன சுகம் இருக்காது. (10, 11) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. தொழிற்துறை முன்னேறும். முதலீடுகளால் லாபம் உண்டு. ராசிநாதனான செவ்வாயை குரு பார்ப்பது விசேஷம்.

**இடபம் :கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 11 இல் உச்சமாக இருப்பது நல்லது, மேலும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகி நட்பாகும். (2,5) உரிய புதன் 10 இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் 11 இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய் நலம். (7,12) உரிய செவ்வாய் 9 இல் இருப்பதில் பிரயோசனம் இல்லை. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பதில் பயன் இல்லை. பிதாவுக்கு கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியையும் ராசிநாதனான சுக்கிரனையும் குரு பார்ப்பதால் தொடங்கும் எந்தக் காரியமும் சித்தி பெறும். குறை இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 9 இல் இருப்பதால் நல்ல பலனைச் செய்யாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இரண்டாம் வீடு செவ்வாயின் தாக்கத்தில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (6,11) உரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நண்பர்களால் தொல்லையுண்டு. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரிய குரு 4இல் இருப்பது தோசமான நிலை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் சனி இருப்பதும் பிரச்சினை. மன அமைதி இருக்காது. தேவையில்லாத பிரச்சினை வீடு தேடி வரும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மகரம் முதல் மேடம் வரை சஞ்சரிப்பார். வார முற்பகுதியில் நல்ல பலன் உண்டு. யோககாரரான செவ்வாயின் பார்வை இருப்பதால் தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 9 இல் இருப்பதால் கையில் பணம்இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய் நலம். மூத்த சகோதரத்துக்கு நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய செவ்வாய் 7இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகளின் செயற்பாடு திருப்திதராது. (7,8) உரிய சனி 12 இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (6,9) உரிய குரு மூன்றில் இருப்பது கூடாது. பிதாவுக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம் பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 8 இல் இருப்பது கூடாது. இருப்பினும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். மன அமைதி இருக்காது. (2,11) உரிய புதன் 7 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் பிரயோசனம் இருக்காது. (3,10) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. (6,7) உரிய சனி 11 இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகி நட்பாகும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். குருவின் இருப்பும் ராசிநாதனைப் பார்ப்பதும் நல்லது. குறை இருக்காது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 7 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 5 இல் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு கூடாது. பூர்வீக சொத்து கைமாற வாய்ப்பு உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமணபலன் தாமதமாகலாம். மேலும் குரு கேதுவுடன் கூடியதால் தோசம் உண்டு. ராசியில் கேது இருப்பதும் பிரச்சினை. சுக்கிர பார்வை ராசிக்கு கிடைப்பது ஆறுதல் உண்டு. குரு, கேது வழிபாடு நன்மை செய்யலாம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 6 இல் நன்மை செய்யாது. இருப்பினும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. (2,7) உரிய செவ்வாய் நாலில் இருப்பது தோசம். கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு 12 இல் மறைவது உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கு கூடாது. (4,5) உரிய சனி 9 இல் பயன் இல்லை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. குழந்தைகளின் செயற்பாடு திருப்திதராது. 10 ஆம்வீடு சுத்தமாக இருப்பினும் செவ்வாயின் பார்வை படுவதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (9, 12) உரிய புதன் 5 இல் இருப்பதால் பிதாநலம், சயன சுகம் உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது மிகவும் நல்லது. தொடங்கும் காரியம் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,5) உரிய குரு 11 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பத்துக்குரிய சூரியன் ஐந்தில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குரு செவ்வாயைப் பார்ப்பதால் குறைகள் தீரும்.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10 இல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (2,3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. (6,11) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் உண்டு. மூத்த சகோதரத்துக்கு நல்லபலன் உண்டு. (7,10) உரிய புதன் மூன்றில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. மேலும் சனி 7 இல் இருப்பது கூடாது. குடும்பத்தில் வெளியாரின் தலையீடு இருக்கும்.

**மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்கும். (3,12) உரிய குரு 9 இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களால் தொல்லையுண்டு. (5,10) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதரும். 7 ஆம் வீடு செவ்வாயை பார்க்கப்படுவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் குருவின் பார்வை செவ்வாய்க்கு கிடைப்பது நல்லது.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. (2,11) உரிய குரு 8 இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லையுண்டு. மூத்த சகோதரத்துக்கு கூடாது. (3,10) உரிய செவ்வாய் 12 இல் இருப்பது கூடாது. இளைய சகோதரத்துக்கு கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (4,9) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. பெற்றோருக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. 7 உரிய சூரியன் இரண்டில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு, சனி வழிபாடு செய்ய தீய பலன்களின் தாக்கம் குறையலாம்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. (2,9) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய புதன் 12 இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். ராசியில் ராகுவும், 7 இல் கேதுவும் இருப்பது கூடாது. மன அமைதி இருக்காது. வீண் அலைச்சல் இருக்கும். தேவையில்லாத பிரச்சினைகள் வீடு தேடி வரும். ராகு, கேது வழிபாடு செய்வதால் தோசம் விடுபடலாம்.

## இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சுக்<br>சூரியன்<br>ராகு | | | சனி |
| புதன் | செவ் திருவோணம் சந<br>சுக்கிரன் ரேவதி சனி<br>புதன் பூரட்டாதி குரு | | |
| செவ் | சூரியன் ரேவதி புதன்<br>குரு அத்தம் சந<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | குரு<br>கேது |

பங்குனி 22 முதல் 28 வரை

சந்திரன் மகரம் முதல் மேடம் வரை




# டிப்ஸ்

விடியற்காலை எழுந்ததும் குளிர்ந்த நீரால் முகம் கழுவுங்கள். அது முகத்தில் உள்ள துவாரங்களை மூடும். இதனால் முகத் தசைகள் தொங்காமல் இருக்கும்.

பப்பாளியைக் கூழாக்கி முகத்தில் தடவி வர, முகம் பளபளப்பாகவும் வழவழப்பாகவும் நல்ல நிறத்துடனும் காட்சியளிக்கும்.

பேரீச்சம்பழத்தை தினமும் ஒன்றிரண்டு சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான இரும்புச்சத்து கிடைக்கும். இதனால் சருமப் பொலிவும் கிடைக்கும்.

சரும நிறத்தைப் பாதுகாக்க தினமும் உலர்ந்த திராட்சையைச் சாப்பிட்டு வர வேண்டும்.

தினமும் பாலோடு தேன் சேர்த்து அல்லது பனங்கற்கண்டு சேர்த்து ஜூஸ் ஆக சாப்பிட்டு வந்தால் கண்கள் அழகாகத் தெரியும். உடலும் பளபளப்புக் கூடும்.

கூந்தல் அடர்த்தியாக வளர தேன், வெள்ளரிக்காய், அப்பிள், அன்னாசி, கோதுமை, கறிவேப்பிலை ஆகியவற்றை அவ்வப்போது சாப்பிட்டு வர வேண்டும்.

விளக்கெண்ணெயை கண்களில் படாமல் புருவங்களில் தடவி வந்தால் முடி கருகருவென்று வளரும்.

புடலங்காயின் தோலைச்சீவி கை, கால்களில் தடவி சிறிது நேரத்துக்குப்பின் கழுவினால் கை, கால்கள் புத்துணர்ச்சி பெறும்.

கண்களின் கீழ் உருவாகும் கருவளையத்தைப் போக்க உருளைக்கிழங்கை வெட்டி அதில் வரும் ஈரப் பசையைத் தடவிவர கருவளையம் மறையும்.

**இவ்வார பொன்மொழி**

*அறிவாளி யோசித்துவிட்டுப் பேசுகிறான். முட்டாள் பேசிவிட்டு யோசிக்கிறான்.*

# வேலைக்குப் போகும் பெண்ணா நீங்கள்...?

அலுவலகம் என்று வந்துவிட்டாலே ஒருசில பழக்க வழக்கங்களை மேற்கொள்ள வேண்டும் அல்லது உங்கள் நடவடிக்கைகளில் கொஞ்சம் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பத்தோடு பதினொன்றாக இல்லாமல் எப்பொழுதும் தனித் தன்மையுடன் நீங்கள் விளங்க வேண்டும். இப்படி உங்கள் தனித்தன்மை தெரிய உங்களுக்காக சில ஆலோசனைகள்...

முதலில் உங்கள் குரலில் மிகவும் குழைவும் இருக்கக் கூடாது. அதேநேரம் மிகவும் முறுகலும் இருக்கக் கூடாது. எப்பொழுதும் ஒரே தொனியில் பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

உடை விடயத்தில் கவனமுடன் இருங்கள். எல்லோர் பார்வையும் உங்கள் மீது படிவது போல் கவர்ச்சியாக உடை அணியாதீர்கள்.

புடைவை அணிபவர்கள் அங்கங்கே நெளிவு, சுழிவுகள் தெரியாமல் பாங்காக அணிந்துகொள்ளுங்கள்.

சுடிதாரென்றால் துப்பட்டா அணிய மறந்துவிடாதீர்கள்.

காலில் கொலுசு அணிந்தால் மெல்லிய சத்தம் வருமாறு அணிந்துகொள்ளுங்கள். அலுவலக ஊழியர்களிடையே நிசப்தமான வேளையில் நீங்கள் சலங்கைச் சத்தத்துடன் நடந்து சென்றால் அனைவரது கவனமும் உங்கள் மேல் விழும்.

அதிக மேக் கப்பைத் தவிருங்கள்.

சிலருக்கு வாய் துர்நாற்றம் இருக்கும். இதைப்போக்க கராம்பு, ஏலக்காய் கைவசம் வைத்திருங்கள். அவ்வப்போது வாயில் போட்டு மென்றால் வாசனையாக இருக்கும்.

காலையிலிருந்து மாலை வரை அலுவலகத்தில் இருப்பதால் மென்மையான வாசனை கொண்ட வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தலாம். வியர்வையை, துர்நாற்றத்தை போக்க இது உதவும்.

முதலாளியைக் கூட சமாளித்துவிடலாம். ஆனால், உங்கள் சக ஊழியர்களைக் கையாள்வது கடினமான செயலே! அதனால் எப்பொழுதும் உங்கள் நிதானத்தை இழந்துவிடாதீர்கள்.

தவறு நேர்ந்துவிட்டால் அதை நேரடியாக நீங்களே மேலிடத்துக்குக் கொண்டு செல்லுங்கள். தவறு உங்களால் நிகழ்ந்துவிட்டால், 'நான்தான் முழுப்பொறுப்பு, என்னால்தான் இது நேர்ந்தது' என்று உடனடியாக ஒப்புக்கொண்டு விடுங்கள். இதனால் ஒரு பெரிய இழப்பிலிருந்து நீங்கள் காப்பாற்றப்படலாம் அல்லது உங்களின் நடத்தைக்காக உங்களுக்கு மன்னிப்பு கிடைக்கலாம்.

மீண்டும் தவறு நேராமல் இருக்க முயற்சி செய்யுங்கள்.

அன்றாட வேலைகளைப் பட்டியல் தயாரித்து அன்றே முடித்துவிடுங்கள். வேலையில் மீதி வைப்பது உங்கள் பதட்டத்தை அதிகப்படுத்துவதோடல்லாமல் வீட்டிலும் உங்களை நிம்மதியாக இருக்க விடாது.

மேசையை தினமும் 5 நிமிடம் செலவழித்து ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்ளுங்கள். கூடுமானவரை ஒவ்வொரு விடயத்துக்கும் ஒரு பைல் என்று போட்டுவிடுங்கள். வேலை எளிதாக இருக்கும்



# ஓ... இதற்குப் பெயர்தான் தர்ம சங்கடமோ...?

இன்று அழகு ராணி போல் ஜொலிக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படும் நாளில், உங்கள் முகத்தைப் பார்த்தால் மூக்கின் நுனியில் முகப்பரு காட்சியளிக்கும்.

திருமணத்துக்குப்போக வேண்டும் என்று நினைக்கும்போது தலைமுடி பிசுபிசுவென உயிரற்றுப் போயிருக்கும்.

ஏதாவது ஒரு த்ரில்லான படம், நாடகத்தின் முடிவைத் தெரிந்துகொள்ளும் ஆவல் காரணமாக முக்கியமான வேலையைக் கூட விட்டு வைத்திருப்பீர்கள். அந்த நிகழ்ச்சி முடிய 5 நிமிடம் இருக்கையில் காலிங் பெல் அடிக்கிறது. உங்கள் பக்கத்து வீட்டுத் தோழி வாசலில் நின்றபடியே பேச்சுக் கொடுப்பார். என்ன செய்வீர்கள்?

'இவங்க வீட்டில 12 மாதமும் தயிர் இருக்கும்' என்று தோழிகளின் மத்தியில் பாராட்டப்படுபவர் நீங்கள். தற்செயலாக உங்களின் பக்கத்துவீட்டுத் தோழி உறைமோர் கேட்டு வரும்போது உங்கள் பிரிட்ஜில் தயிர் இல்லாமல் போனால் எப்படி இருக்கும்?

நீங்கள் நன்றாக அலங்கரித்துக்கொண்டு கணவருடன் ஷொப்பிங் செல்கிறீர்கள். முதல் கடையில் நுழையும்போது, நடுத்தர வயதுக் கடைக்காரர் பார்த்து, பல் தெரிய சிரித்தபடி அழைக்கிறார் 'வாங்க ஆன்டி, என்ன வேணும்?'என்று. எப்படி இருக்கும் உங்களுக்கு?

நகரத்தில் எல்லாக் கடைகளிலும் ஏறி இறங்கி தேடிப்பிடித்து ஓர் அழகான புடைவையை வாங்கிக் கொள்கிறீர்கள். அதை முழு மகிழ்ச்சியுடன் அணிந்துகொண்டு வெளியில் போகும்போது, அதே புடைவையைக் கட்டிக்கொண்டு வேறொரு பெண் வந்தால் எப்படி இருக்கும்?

நீங்கள் இன்று இரவு உங்கள் கணவருடன் சேர்ந்து ஒன்றாகச் சாப்பிடத் திட்டமிட்டு விரும்பும் உணவைச் சமைத்து வைத்துக் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கிறீர்கள். அப்போது பார்த்து கணவனின் நண்பர்கள் பட்டாளம் வருகிறது. என்ன செய்வீர்கள்?

# டென்ஷனைக் குறைக்க தியானம் செய்யலாமே!



உடற்பயிற்சி என்றவுடன் பயந்து விடாதீர்கள். நீங்கள் உட்கார்ந்த இடத்திலிருந்தே உங்கள் நாற்காலியில் அமர்ந்த நிலையிலேயே இவற்றைச் செய்யலாம்.

இந்தப் பயிற்சிகள் உங்கள் மூளையில் உள்ள செல்களைத் தூண்டி உங்களுக்கு உற்சாகம் தரும். டென்ஷனைக் குறைக்க உதவும்.

1. இரண்டு கைகளின் ஆட்காட்டி மற்றும் கட்டை விரல் நுனியையும் சேர்த்து சின்முத்திரை வடிவில் வைத்துக் கொள்ளுங்கள். (சின்முத்திரை வடிவானது உடம்பு முழுவதும் ரத்த ஓட்டத்தைச் சீர்ப்படுத்தி மனதை ரிலாக்ஸ்டாக வைத்துக் கொள்ள தூண்டுவதாக அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.)

2. கண்களை மூடிக் கொண்டு மூன்று முறை ஆழ்ந்த மூச்சு விடுங்கள்.

3. இரண்டு கைகளையும் மடி மீது ஒன்றன் மேல் ஒன்றாக உள்ளங்கைகளை மேல் நோக்கிய நிலையில் இருக்கும் படி வைத்துக் கொள்ளவும். இப்பொழுது இரண்டு பக்க தோள் பட்டைகளையும் மூன்று முறை கடிகாரச் சுற்றுப்படி சுழற்றவும். இதே போல் மூன்று முறை அதற்கு நேர் சுற்றாகச் சுழற்றவும்.

4. தொடர்ந்து எழுதுவதால் ஏற்படும் கைவலிக்கு இரண்டு கைகளையும் கோத்த நிலையில் கழுத்துக்குப் பின்பக்கம் கொண்டு சென்று மேல்நோக்கி நெட்டி முறிக்கவும்.

5. இரண்டு கைகளின் நுனி விரல்களை மாத் தூவுவது போல் அல்லது மணி மாலை உருட்டுவது போல் தேய்த்து விடுங்கள்.

6. மூன்று முறை ஆழ்ந்த மூச்சு விடுங்கள். நன்றாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு விடும்பொழுதும் படிப்படியாக மெதுவாக வெளிவிடவும். எப்படிப்பட்ட இறுக்கமான சூழ்நிலையாக இருந்தாலும், 'கவலைப்படாதே, எல்லாம் நன்மைக்கே' என்று உங்களுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள். உடனே ஒரு தன்னம்பிக்கை கிடைக்கும், உற்சாகம் பிறக்கும். இது போல், நமக்கு நாமே தட்டிக் கொடுத்துக் கொள்வதிலும் தைரியப்படுத்திக் கொள்வதிலும் உண்டாகும் 'சக்தி' வேறு எந்த மந்திரத்திற்கும் கிடையாது என்றே சொல்லலாம். வேலை, குடும்பம் என இரண்டையும் சமமாக எதிர்நோக்குங்கள். வேலைக்காகக் குடும்பத்தை இழக்க வேண்டாம். குடும்பத்திற்காக வேலையையும் இழக்க வேண்டாம். இரண்டையும் சரிசமமாகக் கொண்டு செல்வதில் தான் உங்கள் திறமையே இருக்கிறது. அது நிச்சயம் உங்களால் முடியும்!

# இனிய குடும்பம் பல்கலைக்கழகம்



திருமண வாழ்க்கையில் பரிபூரண ஆனந்தம் கிடைக்க, சில பழக்க வழக்கங்களை நீங்கள் கடைப்பிடிப்பது அவசியம். ஆண்டுகள் பல கடந்தாலும், முதுமையின் பாதிப்பு உங்களுக்குத் தெரியாமல் அது பார்த்துக் கொள்ளும்.

தாம்பத்திய உறவில் பாதுகாப்பு உணர்வை உறுதி செய்து கொள்ள உற்சாகம் அவசியம். தங்கள் வாழ்க்கையின் ஆதாரமாக வாழ்க்கைத் துணைவரைக் கருதுவதும், அந்த உணர்வை அவர் மனதில் விதைப்பதுமே ஒருவரின் தாம்பத்திய வாழ்க்கையின் ஆயுளை அதிகரிக்கச் செய்யும்.

வாழ்க்கைத் துணைவர் மீதான அன்பு என்றும் இளமையாக இருக்க, திருமண வாழ்க்கையில் ஒரு சில தீர்மானங்களை நீங்கள் கடைப் பிடிக்க வேண்டி இருக்கும்.

***மலரும் நினைவுகள்***

அவரும் நீங்களும் சந்தோஷமாக இருந்த தருணங்களை ஓய்வு நேரத்தில் மனதில் அசை போடுங்கள். அவர் உங்களுக்குச் செய்த நல்ல விஷயங்களை நினைவு கூருங்கள். மழையில் நனைந்தது, சினிமா தியேட்டர் இருட்டில் ஒரே ஐஸ் க்ரீமை ஒன்றாய் சுவைத்தது, ரப்பர் பல்லியை தூக்கிப் போட்டு விளையாட்டாக பயமுறுத்தியது... என வாழ்வின் ஆனந்தமான நிமிடங்களை மனதில் மீட்டிப் பாருங்கள். அது கணவன் — மனைவி உறவை மேலும் நெருக்கமாக்கும் வலுவான டானிக்.

மனச் சங்கடம், கருத்து வேறுபாடு அல்லது சச்சரவினால் ஏற்பட்ட கசப்பான சூழ்நிலையைக் கூட இந்த மலரும் நினைவுகள் சகஜமாக்கிவிடும்.

***திருமண வாழ்க்கை இயந்திரமயமாவது எப்படி?***

திருமணமான சில ஆண்டுகளில் வீடு, குழந்தை, வேலை.. என பொறுப்புகளும் அதற்கேற்ப பணத்தேவையும் அதிகரிக்கிறது. கூடுதல் வருமானத்துக்காக ஓவர் டைம் செய்ய வேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது. குழந்தைகளின் எதிர்காலம், சொந்த வீடு, வாகனம் போன்றவை பொருளாதார நெருக்கடிகளை உண்டாக்குகிறது.

ஆக, குடும்பத்துக்காக கணவன் — மனைவி செலவிட வேண்டிய நேரத்தை இந்த விஷயங்களே ஆக்கிரமித்துக் கொள்கின்றன. தாம்பத்திய உறவுகூட படிப்படியாகக் குறைந்து விடுகிறது.

மேலும், குழந்தைகளின் கல்வி, பெண்களின் கணிசமான நேரத்தை ஆக்கிரமிக்கிறது. காலையில் சிற்றுண்டி, சாப்பாடு செய்வது முதல் குழந்தைகளைப் பள்ளிக்குத் தயார் செய்து அனுப்புவது என பெண்களின் வேலைப்பளு அதிகரிக்கிறது. இதனால் களைத்துப்போகும் பெண்கள் ரொமான்ஸ் விடயத்திலும் ஆர்வம் காட்டாது விடுகிறார்கள்.

எனவே தினசரி வாழ்க்கையிலிருந்து சற்று வித்தியாசமாகப் பொழுதுபோக்க நேரம் ஒதுக்குவது அவசியமானது.

திருமணத்துக்குப்பிறகு பரஸ்பரம் அன்பை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளில் இருவரும் உளப் பூர்வமாக ஈடுபடுவதன் மூலமே குடும்பத்தின் மகிழ்ச்சியைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

இலக்கியப் பொழில்

# இலங்கைத் தமிழர் வந்தேறு குடிகளல்லர்!

வரலாறு என்பது வெறுமனே தலைகளை எண்ணிச் சொல்லப்படும் ஒன்றல்ல. இன்றைய ஜனநாயக நடைமுறையின் பழக்கதோஷப்படி எந்தவோர் இனத்தினதும் வரலாற்றை வாக்குச்சீட்டு முறைமையில் கணீப்பீடு செய்யமுடியாது.

அமெரிக்காவில் செவ்விந்தியர்தான் ஆதிக்குடிகள். அங்கு அவர்கள் ஆட்சியில் இல்லை. எல்லையோரங்களுக்கு துரத்தப்பட்டு விட்டனர். அவுஸ்திரேலியாவில் கறுப்பர்கள்தான் ஆதிக்குடிகள். ஆனால், இன்று அவர்களுக்கு அங்கு முகவரியே இல்லை. ஆதலின் ஆட்சியில் இருப்பவர்கள் தான் 'ஆதிக்குடிகள்'என்பது புதுக்கதையேயன்றி பூர்வீகமாகாது.

மேற்கு நாட்டினர் சந்திரமண்டலம் போன்ற பிறமண்டலங்களில் குடியேறலாமா என ஆராய்ந்து வரும் இக்காலத்தில் இலங்கையில் தமிழர்கள் வந்தேறு குடிகளா என்று வாதப்பிரதிவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பது பெரும் புதினம்தான்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா 1984 இல், இலங்கையில் தமிழர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டில் குடியேறியதாக ஒரு தப்பிதமான கருத்தைச் சொல்லியிருந்தார். அவரின் தவறான கருத்து இன்று மீண்டும் அரங்கேற்றப்படுவது ஏனோ? அதேவேளை டாக்டர் போல் பீரிஸ் 1917 இல் சொன்ன கருத்து புதைகுழி

**சொல்லேருழவன்**
**ம.க.அ.அந்தனிசில்**

யில் மூடிவைக்கப்பட்டுள்ளதா? அவர் சொன்னது என்ன?

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னரேயே இலங்கையில் கருத்திற்கொள்ளத்தக்கனவும் முழு இந்தியாவினதும் வழிபாட்டுக்கு உரியனவுமான ஐந்து சிவாலயங்கள் இருந்தன. அவையாவன: மகாதித்தவிற்கு அண்மையில் திருக்கேதீச்சரம், முத்துச்சிலாபம், சிலாபத்தில் பிரசித்திபெற்றிருந்த முன்னீச்சரம்,



மாந்தோட்டைக் கருகில் தண்டேச்சரம், பெரிய கொட்டியாரக்குடாவிற்கு எதிரேயுள்ள திருக்கோணேச்சரம், காங்கேயன் துறைக்கு அண்மையிலுள்ள நகுலேச்சரம் (P.E.Pieris, Nagadipa and Buddhist Remains in Jaffna, Jrascb, xxvi, No.70 (1917) P.17-18)

இவ்வாறு விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே ஐந்து சைவத் திருத்தலங்கள் இருந்திருக்கும்போது இங்கு முற்காலத்தில் தமிழர் வாழவில்லையென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

இவற்றிலிருந்து பண்டைக்காலத்தில் இலங்கைத்தீவில் இரத்த தாகம் கொண்ட பிசாசுகளும் பூதங்களும் வாழ்ந்து வந்ததாக பாளி நூலான தீபவம்சம் பசப்பியிருப்பது வெற்றுக் கற்பனையென்பது வெளிப்படுகிறதல்லவா?

இலங்கையில் பேய்கள் வாழ்ந்ததையும் இராட்சதர்கள் வாழ்ந்ததையும் உலகின் எந்தவொரு வரலாற்றாய்வாளரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். 'பேய்கள்' என்பது கட்டுக்கதை. 'இராட்சதர்கள்' என்பது மானிடவியலுக்கு புறம்பான கூற்று. 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் திராவிடர்கள் வாழ்ந்திருப்பதை மூடி மறைக்கவே இப்பேய்க் கதைகள் சொல்லப்பட்டுள்ளன.

பலாங்கொடையில் ஹோமோ சேப்பியன் (HOMOSAPIAN) எனும் மனிதவகை எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது. சேப்பியன் என்றால் 'புத்திவிருத்தியுடைய' என்று பொருள். இவ்வகை மனிதர்களின் காலம் இற்றைக்கு 30,000 ஆண்டுகளுக்கும் 15,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகும். இவற்றிலிருந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இலங்கையில் மானிடர்கள் வாழ்ந்து வந்திருப்பது தெளிவு.

இந்தியாவும் இலங்கையும் முற்காலத்தில் ஒரே நிலத்திட்டாக இருந்தமை பற்றி பெரும்பாலான சிங்கள வரலாற்றாசிரியர்கள் ஊமை வேடம் போட்டு வந்திருப்பதில் புதிர் இல்லை.

கடல்நீரால் பெரும் நிலப்பரப்பு துண்டிக்கப்பட்டு இலங்கை தனித்தீவாகவிருந்த காலப்பகுதியில் புத்தர் பரிநிர்வாணம் அடைந்தார். ஆனால், அதேதினத்தில்தான் விஜயனும், 700 நண்பர்களும் இலங்கைத் தீவுக்கு வந்ததாக தீபவம்சமும் மகா வம்சமும் தன்னிச்சையாக கூறியுள்ளன. இது ஏன்? புத்தர் இறந்ததினத்தில் தான் விஜயன் என்ற கதாபாத்திரம் வட இந்தியாவிலிருந்து இலங்கை வந்து சேர்ந்ததான எண்ணக்கருவை உருவாக்குவதற்கேயன்றி வேறல்ல.

புத்தர் கி.மு.483இல் இறந்ததாக இந்திய பௌத்த வரலாறு கூறுகிறது. சிங்கள பௌத்த வரலாறு புத்தர் கி.மு.544 இல் இறந்ததாக கூறுகிறது. ஆதலில் விஜயன் எந்தத் தேதியில் வந்தான்?

விஜயனுக்குப் பின்னரே இலங்கைதீவில் மானிடர் வாழத்தொடங்கியதாக தீபவம்சமும் மாகா வம்சமும் சொல்லியிருப்பது ஆரிய குடியேற்றங்களை மனதிற்கொண்டுதான். ஆனால், மண்ணின் மைந்தர்கள் திராவிடர்களென்பதை அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்தி விட்டன.

1969, 1984, 1990 ஆண்டுகளில் அநுராதபுரியிலும், 1970இல் கந்தரோடை, பொம்பரிப்பு ஆகிய இடங்களிலும், 1980 இல் மாந்தையிலும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் மாங்குளம், பலாங்கொடை, திஸ்ஸமகாராம போன்ற இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒட்டு மொத்தமாகச் சொல்லப்போனால் தென்னிந்தியாவில் நிலவிய திராவிடரின் பண்பாடான குறுணிக்கற் பண்பாடும், பெருங்கற்காலப் பண்பாடும் சமகாலத்தில் இலங்கைத் தீவிலும் நிலவியிருப்பதையே மேற்கூறிய அகழ்வாராய்ச்சி முடிவுகள் சான்று பகிர்கின்றன.

மாந்தையில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன் காஸ்வெல் அவர்களால் பெருங்கற்கால கலாசாரப்படைக்குக் கீழே இடைக்கற்கால பண்பாட்டிற்குரிய குவாட்ஸ் கல்லாயுதங்கள் இருந்தமை எடுத்துக் காண்பிக்கப்பட்டது. இப்பண்பாட்டின் தோற்றக்காலம் கி.மு.28,000 ஆண்டுகள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பண்டைய இலங்கையில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்த திராவிடப் பழங்குடியினரின் வழித்தோன்றல்களே இயக்கரும் நாகரும் ஆவர்.

**'இலங்கைத் தமிழர் வந்தேறு குடிகளல்லர்!' என்ற ஆக்கம் இலக்கியப் பொழிலில் இவ்வாரம் இடம்பெறுகிறது.**

நாகர்கள் திராவிடர்கள் தமிழர்கள் ஆன காரணத்தினாலேயே இலங்கைத்தீவின் ஆதி வரலாற்றுக்கு அவர்கள் உரித்தானவர்கள் அல்ல என்று காண்பிக்கும் பொருட்டுத்தான் பாளிநூல்களில் நாகர்கள் மானிடரல்லாத பிறவிகளாகக் காண்பிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் தொல்லியல் ஆணையாளரும் பேரின சிந்தனையாளருமான செனரத் பரணவிதான நாகர்களை மானிடரல்ல என்றும் அவர்களின் உருவம் மனித தலையும், பாம்பின் உடலும் அல்லது பாம்பின் தலையும் மனித உடலும் கொண்டவர்கள் போன்று காண்பிப்பதில் முன்னணி வகித்துள்ளார். இதற்கு அவர் இந்திய இதிகாசங்களை ஆதாரமாகக் காண்பிப்பது ஒரு வேடிக்கையான விடயம்.

இலங்கைத்தீவில் நாகவேந்தர்கள் அரசியற்றியிருப்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. இதில் கந்தரோடையில் அரசியற்றிய பௌத்த சமயம் சார்ந்த நாகவேந்தர்களின் சேமக்காலையும் ஒன்று. அது அவ்வாறிருக்க பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா 13ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழர்கள் குடியேறியிருப்பதாக சொல்லியிருப்பது ஒரு ஆய்வுக்கட்டுரையில் தான்.

பேராசிரியர் கா.இந்திரபாலா குறிப்பிட்டிருக்கும் 13ஆம் நூற்றாண்டைய குடியேற்றம் ஒரு இடைக்கால நிகழ்வைப்பற்றியதேயன்றி தமிழரின் ஆதி வரலாற்றுடன் எவ்விதத்திலும் தொடர்புடையதல்ல. ஆனாலும், அவரின் கூற்றுப்படி 13ஆம் நூற்றாண்டிலேயே இலங்கையில் தமிழர்கள் குடியேறியதே தமிழரின் வரலாற்றுத் தொடக்கமென்றால் அது பேராசிரியரின் குறைப்பிரசவ ஆராய்ச்சியன்றி வேறல்ல.

திருகோணமலையிலுள்ள கோணேச்சரம் பாடல்பெற்ற திருத்தலமாகும். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அதன்மீது பதிகம் பாடியிருப்பது யாவரும் அறிந்ததே.

ஆனால், சமூகக்கல்வி சமாஜ அத்தியாபன போன்ற கல்வித்திணைக்களத்தால் வெளியிடப்படும் தமிழ், சிங்கள பாடநூல்களில் மேற்படி கோணேச்சரம் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக தப்புப் பாடங்கள் சொல்லப்பட்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோணேச்சரம் ஐந்து ஆண்டுகள கழித்து பாடல் பெற்றதென்பது உச்சமான வரலாற்றுத் திரிபன்றோ. அதிலும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 13ஆம் நூற்றாண்டில் தேவாரப் பதிகம் பாடியிருக்க முடியுமா?

அதுமட்டுமல்ல கி.பி.நாலாம் நூற்றாண்டுக்கு முன்னரே திருக்கோணேச்சரம் கட்டப்பட்டிருந்ததை மகாவம்சத்தின் வாயிலாகவும் நாம் அறிய முடியும். அநுராதபுரியில் அரசியற்றிய மகாசேனன் (கி.பி.334 - 361) மேற்சொன்ன கோணேச்சரர் ஆலயத்தை இடித்து புத்த விகாரை கட்டியதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

பிறிதொரு வேடிக்கை என்னவென்றால் கி.பி. 13ஆம் நூற்றாண்டில்தான் இங்கு தமிழர்கள் காணப்பட்டதாக சமூகக்கல்வி சமாஜ அத்தியாபன போன்ற நூல்கள் கூறியிருப்பதுதான். இவையாவும் சில தமிழ் அறிஞர்களின் அரைகுறை ஆராய்ச்சிகளையும், கண்டுபிடிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டு சிங்கள வரலாற்றாய்வாளர்கள் உருவாக்கிய இனச்சார்பான கட்டுக்கதைகளே.


தமிழர், சிங்களவர் யாவருமே இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள்தான் என்று சொல்லப்படுவதையும் ஆராயப் புகுந்தால் இலங்கைக்கு பத்தொன்பது மைல் தூரத்திலுள்ள தமிழ் நாட்டிலிருந்து முதன்முதல் தமிழர்கள் குடியேற்றியிருப்பார்களா அல்லது ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள வங்காளம், பீகார், ஒரிஸா ஆகிய வடஇந்திய மாநிலங்களிலிருந்து வட இந்தியர் வந்து முதன்முதல் குடியேறியிருப்பார்களா என்பதற்கு விடை காண்பது சிரமமான காரியமன்று.

வட இந்தியாவில் குப்தவம்ச அரசனொருவனின் காலத்தில் அங்கிருந்த பௌத்தர்கள் கொல்லப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் கொடுமை குரூரங்களுக்குள்ளானபோது அப்பௌத்தர்கள் பல்லாயிரக் கணக்கில் இலங்கையிலேயே வந்து குடியேறினார்கள்.

தமிழ் நாட்டிலும் பௌத்த, சமண சமயங்களின் வளர்ச்சி சைவமதத்தினருடன் பெரும் சர்ச்சைகளை உருவாக்கியிருந்த காலமது. தொடர்ச்சியாக வாதங்களும், பிரதிவாதங்களும் நடைபெற்றுவந்தன. சமண சமயத்தவனாக இருந்த பாண்டியன் நெடுமாறன் சோழ இளவரசியை மணம் புரிந்துமீண்டும் சைவ சமயத்தவனாக மாறி மூவாயிரம் தமிழ்ச் சமணர்களை சுண்ணாம்புக் காளவாயிலிட்டு கொன்றதினாலான அச்சம் காரணமாக மீண்டும் பலர் சைவ சமயம் தழுவியதுடன் மேலும் பலர் பாண்டிநாட்டை விட்டு வெளியேறவும் செய்தனர். சரியாகவோ, பிழையாகவோ இவைகளை மனதிற்கொண்டு அல்லது வேறு தரவுகளை மனதிற்கொண்டு இன்ன இன்ன காலங்களில் தமிழர் தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறினர் என்றவாறு ஒட்டுமொத்தமாகச் சொல்லப் புறப்படுவது இலங்கையின் ஆதிவரலாற்றுக்கு முரணானதாகும். திராவிடரே இலங்கையின் பழங்குடி மக்களென்பதை அகழ்வாராய்ச்சி முடிபுகள் அரண் செய்கின்றன.

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

# மிஸ்டர் வேதாளம்



''வதந்திகளால் மனிதர் படும் பாடு சொல்லிமாளாது. இந்த வதந்தி சுனாமியை விட பயங்கரமானது'' என்று சொல்லியபடி அறையினுள் நுழைந்தார் வேதாளத்தார்.

''என்னய்யா உம்மைப் பாதித்த வதந்தி விடயம் என்னவோ'' என்றோம்.

''என்னை அல்ல; இன்று ஆளும்கட்சியை ஆட்டி வைக்கும் அந்த கூட்டுக் கட்சியின் தலைவர்களை கடந்தவாரத்தில் ஒரு வதந்தி ஆட்டோ.. ஆட்டென்று ஆட்டி வைத்தது'' என்றார்.

''அப்படி என்னய்யா நடந்தது. சொல்லித் தொலையுமேன்?'' என்றோம் எரிச்சலாக.

''கடந்த வாரம் இறுதியில் நடு இரவு நேரம் சிவப்புக் கட்சியின் பிரசாரச் செயலாளரான வீரமானவரின் ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி கிணு கிணுத்தது.''

''நாடாளுமன்றத்தில் நடக்கும் குழப்பங்களை எல்லாம் படங்களாக சுட்டுத் தள்ளும் அந்தக் கமரா அடங்கிய தொலைபேசியோ?''

''ஆம் ... அதே தான். அதில் அவரது நண்பரான ஊடகக்காரர் ஒருவர் வீரமானவரிடம் குண்டு ஒன்றை தூக்கிப்போட்டார். அதாவது 'நீங்களும் — உங்கள் தோழரான ரில்வினாரும் நாளை காலை கைது செய்யப்படப் போகிறீர்கள் அதற்கான உத்தரவை அம்மையார் பிறப்பித்து விட்டார்' என்று சொன்னார். இதனைக் கேட்டு சிரித்து விட்டு போனைக் கட் பண்ணி விட்டார் வீரமானவர். ஆனால் அதனை தொடர்ந்து வந்த தொடர் தொலைபேசி அழைப்புகள் அவரை கொஞ்சம் ஆட வைத்துவிட்டன''

''ஆஹா.. எவ்வளவு தான் துள்ளி அடித்தாலும் ஆடத்தான் செய்கிறார்.. என்ன?''

''ஆமாம்.. அதன் பின்னர் தனது மற்றத் தோழர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இது உண்மையா என்று கேட்டார். உண்மையென்றால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்று வினாவினார். மொத்தத்தில் பரபரப்பாகவே காணப்பட்டாராம்.''

''ஐயய்யோ... பிறகு..?''

''ஆனால் தோழர்களோ அவரை சமாதானப்படுத்தி தாங்கள் உண்மையை ஆராய்ந்து பார்ப்பதாகத் தெரிவித்துவிட்டு கொஞ்சம் விசாரணையில் இறங்கினார்களாம். அதன் பின்னர் தான் தெரியவந்ததாம்; அது வெறும் கப்ஸா என்று.

''அது சரி; அவர்கள் என்ன தப்புச்செய்தார்களாம்; அப்படிப் பயப்பட..?''

''அது தான் அவர்களுக்கும் சந்தேகம். எனென்றால் ஏற்கனவே அவர்களின் பழைய கால கோப்புகளை கொஞ்சம் வெளியே எடுக்கும்படி அம்மையார் காவல்துறைக்கு உத்தரவிட்டிருந்தாராம். இது தவிர இந்தக் கட்சிக் காரர்கள் அண்மைய காலங்களில் கொஞ்சம் சொத்து சேர்த்திருப்பது அம்மாவின் கவனத்துக்கு போயிருந்ததாம் அதனால் தான் கொஞ்சம் பயப்பட்டிருக்கிறார்கள்.''

''அப்படியென்றால் இந்த வதந்தியை யார் பரப்பியிருப்பார்கள்?''

''அது இவர்களுடன் கூட்டாக ஆட்சியிலுள்ள கட்சிக்காரர்களின் வேலையென்று சொல்கிறார்கள். ஒன்று இவர்களை கொஞ்சம் வெருட்டி வைக்க. இரண்டு இப்படி ஒரு தகவல் வந்தால் இந்த திமிராகப் பேசும் தலைவர்களின் பிரதிபலிப்பு என்ன என்று பார்க்க. மூன்று இப்படியெல்லாம் எம்மால் செய்ய முடியும் ஆனால் ஏதோ பாவம் என்று விட்டுவைத்திருக்கிறோம் என்பதை இடித்துரைக்க என்று ஏகப்பட்ட காரணங்களை அடுக்குகிறார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள்.''

''ஆஹா! அப்படியென்றால் இனி இவர்கள் எல்லாவற்றையும் பொத்திக் கொண்டிருப்பார்கள் என்கிறீர்!''

''இருக்க வேண்டும். ஆனால் என்ன செய்வார்களோ தெரியவில்லை.''

''அது சரி இவையெல்லாம் நடைபெறும் போது அம்மையாரின் பேச்சே எதுவும் காணோமே.''

''அவர் இப்போது பயங்கர பிஸி. அடுத்த சில மாதங்களில் நடைபெற திட்டமிடப்படும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா.. விடுவதா.. நடத்துவதென்றால் என்ன அபிப்பிராயம் கோரி நடத்துவது என்று தீவிரமான ஆலோசனைகளை நடத்திவருகிறார்''

''தனது ஆதரவாளர்கள் — அபிமானிகளுடன் ஆலோசனைகளை நடத்தி முடிவெடுக்கப் போகிறாரோ?''

''அது தான் இல்லை.. அவர் ஆலோசனை நடத்துவது சாஸ்திரிகள், மதத் தலைவர்கள், சோதிடக்காரர்களுடன்''

''என்ன சொல்கிறீர். அவர்களுடன் என்ன ஆலோசனை?''

''கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட ராகு மாற்றம் ஜனாதிபதிக்கு கெட்டநேரத்தை கொண்டு வந்து விட்டதாம். எனவே இந்த கெட்ட காலத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் அது தனது அரசியல் எதிர்காலத்தையே சூனியமாக்கி விடுமோ என அஞ்சுகிறார்.''

''அதற்கு என்ன விமோசனமாம்?''

''சில பூஜைகளை நடத்தி இதிலிருந்து விமோசனம் பெறலாம் என்று சொல்லியிருக்கிறார்களாம். இது வரை எதிர்வரும் ஜுன் மாதம் 17 ஆம் திகதி அல்லது 26 ஆம் திகதி எட்டு கூட்டு எண் வரும் நாளில் இந்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் வெற்றிக் கனி உங்கள் பக்கமே என்றும் அடித்துச் சொல்லி இருக்கிறார்களாம்.''

''அப்போ ஜுன் 17 அல்லது 26 இல் சர்வஜன வாக்கெடுப்பு என்பது முடிவாகி விட்டது என்கிறீரோ?''

''அப்படியேதான்.'' என்று சொன்னவர் சொல்லாமல் கொள்ளாமல் எப்படி திடுதிப்பென எமது அறைக்குள் நுழைந்தாரோ அதேபோல சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென எஸ்கேப் ஆகினார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 154

சொற்சிலம்பம் 154 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஏப்ரல் 09ஆம் திகதி ஆகும். விடைகள் ஏப்ரல் 17ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 24ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும்.சொற்சிலம்பம் போட்டி இல.152க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 154

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | | |
| | ■ | 13 | | ■ | 14 | | ■ |
| ■ | 15 | | | 16 | | ■ | 17 |
| 18 | | | ■ | | ■ | 19 | |
| ■ | | ■ | 20 | | 21 | | |
| 22 | | | | ■ | 23 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.152

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 தி | 3 க | ம் | ■ | 4 க | 5 மு | 6 கு |
| 7 தி | ரு | டி | ■ | 8 நா | ற் | ற | ம் |
| ■ | 9 ம | த | மா | ற் | ற | ம் | ■ |
| 10 ந | க | ம் | ■ | 11 ப | ல் | ■ | 12 க |
| 13 க | ள் | ■ | 14 வா | து | ■ | 15 கு | ரு |
| ர | ■ | 16 அ | லி | ■ | 17 ம | ல | ம் |
| 18 ச | ந் | தி | ■ | 19 ந | ர | ம் | பு |
| பை | ■ | 20 தி | ர | வ | ம் | ■ | கை |

## சொற்சிலம்பம் போட்டி இல.154

### இடமிருந்து வலம்

1.வாதம் செய்.
4. பயப்படாத தன்மை.
7. பண்பாடு.
9. கழித்தல் அடையாளம்.
10. பொட்டலம்.
11. அமைதிப் பேச்சு இதற்காக.
13. கூட்டல் அடையாளம்.
14. மேல் நாட்டுக் குடிவகை.
15. ஊக்கத்தை ஏற்படுத்துவது/ சந்தோஷத்தைத் தருவது/ போட்டியில் வெற்றி பெற இதைச் செய்து தூண்டுவர்.
18. ஒரு தானிய வகை.
19. மரம்.
20. வறண்ட, மணல் நிறைந்த, பெரும் வெளிப்பிரதேசம்.
22. கசையடி கொடுப்பது இதனால்
23. பூட்டான் தலைநகர்

### மேலிருந்து கீழ்

1. அழிவு.
2.மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் முக்கிய மையம்.
3. மூன்று/ எரியவும் உதவும்.
4. அன்னை.
5. உறுதிப் பத்திரம் / அரசாணைப் படிவம்.
6. மத்திய இடம்.
8. ஒரு சரக்குப் பொருள்.
12. மனைவி / இதுவும் குருவும் தலைவிதிப்படி.
13. அற்பம் / கொஞ்சம்.
15. மேன்மை.
16. சோகம்.
17. ஆசைப்படு.
19. செல்வம் / திரு.
20. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட கூழ் நிலை.
21. வாழ்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 151

1. ஏ.சுரேஷ்குமார்,
மில் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
2. திருமதி.கி.மா.நவம்,
''ஜயமஹால்'',
36, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
3. திருமதி ஜே.பத்மா,
42/2, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி கங்கேஸ்வரி வடிவேல்
11, இராமகிருஷ்ண தோட்டம்,
''கம்பன் கோட்டம்'',
கொழும்பு — 06.
2. ஜே.ஜே.ஜெனிற்றா
23, சுவாட்ஸ் லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
3. வ.தனபாலசிங்கம்
40 ரெயில்வே கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
4.திருமதி.மோ.இந்திராணி
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
5. வி.அர்ஜுன் பிரபு
9 1/5, ரன்ஸிவி லேன்
கொழும்பு – 04.
6.உ. சஜீவ்
J 3, அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு – 05.
7.நி.கார்த்திகேசு
3 1/3, 42ஆவது ஒழுங்கை
கொழும்பு — 06.
8. சி.லக்ஷன்
'மணியகம்',
வாசிகசாலைவீதி, கொம்மாதுறை,
செங்கலடி.
9. கோ.யாதவன்
16 1/6, மூர் வீதி,
வெள்ளவத்தை.
10.து.ய.ஜுலியஸ்,
ஆயுர்வேத திணைக்களம்,
கப்பல்துறை, திருகோணமலை.

# 15 ஆண்டுகால 'கோமா' நிலை முடிவு

கடந்த சில நாட்களாக உலக அரங்கிலும் மனிதாபிமான அமைப்புக்கள் மட்டத்திலும் பரபரப்பாகப் பேசப்படும் விடயம், கோமா நிலையிலிருக்கும் ஒரு பெண்ணுக்கான உணவு விநியோக செயற்கை குழாய்களை அகற்றும்படி அமெரிக்க நீதிமன்றம் இட்டுள்ள உத்தரவுதான்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த டெர்ரி ஷியாவோ என்ற 45 வயதுடைய பெண், நோய் வாய்ப்பட்டு மூளை செயல் இழந்த நிலையில் கடந்த 15 ஆண்டுகளாக படுத்த படுக்கையாக வைத்தியசாலையில் இருக்கிறார்.

இவருக்கு இதுவரை காலமும் செயற்கை முறையில் குழாய் ஊடாக நீர்த்தன்மையுள்ள உணவே வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்தக் குழாய் அகற்றப்பட்டுவிட்டது. ஷியாவோ சிறிது, சிறிதாக சாவை அணைத்துக் கொண்டிருக் கிறார்.


*1990* பெப்ரவரியில் ஷியாவோவின் மூளை செயலிழந்து ஷியாவோ சுயநினைவற்றுப் போகவே செயற்கை முறையில் குழாய் மூலம் உணவு வழங்கல் ஆரம்பிக் கப்பட்டது.

ஷியாவோவின் மூளை பழைய நிலைமைக்கு திரும்ப வாய்ப்பில்லை என மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கவே உணவு வழங்கும் குழாயை அகற்ற அனுமதி வழங்குமாறு அவரது கணவர் மைக்கேல் நீதிமன்றத்தை நாடவே பல சட்டச் சிக்கல்களுக்குப் பின் உணவுக் குழாயை அகற்றிவிடும்படி புளோரிடா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இம்மாதம் *18* ஆம் திகதியுடன் உணவுக் குழாய் அகற்றப்பட்டு விட்டது.

தனது மனைவியின் நிலையில் இனி எவ்விதமாற்றமும் ஏற்படாது என்பது நன்கு தெரிந்ததால் மனிதாபிமான அடிப்படையில் அவளை உயிரிழக்கச் செய்ய அனுமதி வழங்கும்படி கணவர் மைக்கேல் தாக்கல் செய்த மனுவிற்கு அமைவாகவே மேற்படி உத்தரவை நீதிமன்று வழங்கியது.

ஷியாவோவின் பெற்றோரான பொபி - மேரிஷிண்வர் தம்பதிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேன்முறையீடு செய்தபோது அது நிராகரிக்கப்பட்டு விட்டது. ஷியாவோ தனது வாழ்நாளின் இறுதி நாள்களை தற்போது கழித்துக் கொண்டிருக்கிறார்.

ஷியாவோவின் பெற்றோர், உறவினர்கள், ஆர்வலர்கள் இவர் உயிருடன் இருக்க வேண்டுமெனக் கோரி வருகின்றனர். இதனையடுத்து இவ்விவகாரம் அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. அடிப்படைவாத கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்த பொபி - மேரிஷிண்வர் தம்பதியினர், இறைவனால் படைக்கப்பட்ட உயிர் மனிதனால் பறிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத்தெரிவிக்கின்றனர் உலகில் உள்ள பல்வேறு மனிதாபிமான உயிர் காக்கும் அமைப்புக்கள், நீதிமன்றத் தீர்மானம் கவலை அளிப்பதாக கூறியுள்ளன.


பெற்றோருடன் இளம் வயதில்

இது இவ்வாறிருக்க ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று ஷியாவோவின் பெற்றோரான பொபி - மேரிஷிண்வர், அவரின் உறவினர்கள், நண்பர்கள் இணைந்து ஒரு பாதிரியார் மூலம் ஷியாவோவுக்கு திருவிருந்து வழங்கியதுடன் ஷியாவோவுக்காக விசேட பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டிருந்தமை பார்ப்போர் நெஞ்சை உருக்கும் வண்ணம் அமைந்திருந்தது. ஷியாவோவுக்கு திருவிருந்து வழங்குவதற்கு அவரின் கணவர் அனுமதி வழங்கி இருந்தார். பாதிரியார் ஒரு துளி வைனை ஷியாவோவின் நாக்கில் விட்டு தனது கடமையை நிறைவுவேற்றினார்.

**ஈஸ்டர் ஞாயிறன்று ஒரு துளி வைனை ஷியாவோவின் நாக்கில் விட்டு திருவிருந்து வழங்கினார் பாதிரியார்.**

சுயநினைவற்ற நிலையிலிருந்த ஷியாவோவுக்கான உணவு வழங்கல் குழாய்களை அகற்ற அனுமதிக்கக் கோரி *1998* இலேயே மைக்கேல் மனுத்தாக்கல் செய்திருந்தார்.


கோமா நிலையில் ஷியாவோ

உடன் தீர்ப்பு வழங்க முடியாது இக்கோரிக்கை இழுபட்டுச் சென்றதுடன் புளோரிடா மாநில சட்ட மன்றத்திற்கும் சென்று விவாதிக்கப்பட்டு அதனூடாக அமெரிக்கா அதிபர் புஷ்வரை சென்றது.

அமெரிக்கா அதிபர் புஷ்ஷும் இதில் கவனமெடுத்து அரசமைப்பில் சட்டத்திருத்தம் ஒன்றை கொண்டு வந்திருந்தார். அதன்படி அமெரிக்கப் பிரஜை ஒருவர் செயற்கை முறையில் உயிரிழக்க முடியாது என்றும் இயற்கையாகவே ஒருவர் மரணமெய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. புளோரிடா கவர்னர் இதில் தலையிடலாம் என்றும் தெரிவித்திருந்தது.


ஆனால் புளோரிடா நீதிமன்றத் சட்டத்திருத்தத்தை பொருட்படுத்தாது படுக்கையில் உள்ள ஷியாவோவுக்கு உணவு வழங்கும் குழாயை அகற்றும் படி உத்தரவிட்டுள்ளமைக்கு அமெரிக்க செனட் உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கருணைக் கொலை புரிவது சரியா? தவறா? என உலக அரங்கில் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையிலே அமெரிக்காவில் கருணைக் கொலையை ஏற்றுக் கொள்வது போல் நீதிமன்றம் தீர்ப்பளித்து இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

பதினைந்து வருடகாலமாக சுயநினைவு அற்ற நிலையிலுள்ள ஒருவரை மனிதாபிமான அடிப்படையில் எனக்கூறி உயிரிழக்கச் செய்வது சரியாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட நபர் சார்ந்த அனைவரும் அதை ஏற்றுக் கொள்ளும் பட்சத்திலேயே அது நியாயமான ஒன்றாகும். ஆனால் இவ்விடயத்தில் ஷியாவோவின் பெற்றோர்கள் முழுமையாக இதை ஏற்றுக்கொள்ளாமையால் நீதிமன்றத் தீர்ப்பு சர்ச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது.




## கருணைக் கொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



## அரசியல் வம்புதும்பு

இந்தியா இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை செய்து கொள்வதானது இப்போதைக்கு இடம்பெறாதென்று செய்திகள் வெளிவந்திருப்பது இலங்கை அரசாங்கத்திற்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் ஒரு நடவடிக்கை போன்றே இருக்கிறது.

கடந்த வாரம் தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், விடுதலைப்புலிகளின் ஆதரவாளருமான வை.கோபாலசாமி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின்போது பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தே ஆராயப்பட்டது. இலங்யையுடன் இவ்வாறான ஒப்பந்தம் இப்போதைக்கு இல்லவே இல்லையென புதுடில்லி அடித்துக் கூறிவிட்டது. இந்தியாவின் இந்த நிலைப்பாடு ஊடகங்களினூடாக வெளிவந்த பின்னர் அந்த விடயம் அரசாங்கத்தின் தலைமைப்பீடத்திற்கும் பூடகமாக தெரிவிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது பற்றி வினவியபோது இந்த விடயம் குறித்து தங்களுக்கு முழுமையாகத் தெரியாதென்று பதில் கூறப்பட்டதாம்.

### இடமாற்றம்

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹெரல்ட் வெகு விரைவில் வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்யப்படலாமென்று தெரிகிறது.

இலங்கையில் ஊடகமொன்றுக்கு வழங்கப்பட்ட பேட்டியில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை அவர் வெளியிட்டாரென்றும் இதற்காக அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதேபோல் உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் தமது கருத்துக்கள் குறித்து உலக வங்கியின் தலைமைப்பீடத்துக்கும் அறிவுறுத்தியிருந்தார். இப்போது இவருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. அது அவர் தெரிவித்த கருத்துக்களின் விளைவாக அல்ல. அவர் இலங்கையில் வகிக்க வேண்டிய பதவிக்காலம் வெகுவிரைவில் முடிவடையவுள்ளதாம். அதேபோல் இலங்கையில் தங்கியிருப்பது தொடர்பிலான பணிப்பாளரின் ஆர்வமும் வெகுவாகக் குறைந்துள்ளதாம்.

### பிரதமரின் அறிவிப்பு

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது உடல்நலம் தொடர்பான மருத்துவ ஆலோசனைகளை பெறுவதற்காக லண்டன் சென்றிருந்தார். லண்டனில் தங்கியிருந்த போது அவர் வட அயர்லாந்துக்கும் சென்றார். அங்கே ஐரிஷ் இயக்கத்தின் முக்கியஸ்தர்களையும் சந்தித்திருந்தார்.

அரசியல் நிகழ்வுகள், அங்கு இடம்பெற்ற அமைதி முயற்சிகள் குறித்து அவர்களின் அனுபவங்களைப் பெறுவதன் நோக்கமாகவே பிரதமரின் இந்த சந்திப்புஇடம்பெற்றதாம். அப்படியானால் இலங்கை ஊடகங்கள் ஏன் இதற்கு முக்கியத்துவமளிக்கவில்லை என்று கேட்கலாம்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களில் குறிப்பாக சிங்கள ஊடகங்களில் செய்திகளை கசிய விட வேண்டாமென்று பிரதமர் தனக்கு நெருக்கமானவர்களை கேட்டுக் கொண்டதன் விளைவுதான் அது.

### அதிருப்தி

சிலாபத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை மறுசீரமைப்பதற்கான மாநாடு குறித்தும் அங்கு மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் குறித்தும் அந்தக் கட்சிக்குள் பலர் அதிருப்தி தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர்.

சிலாபத்தில் நடைபெற்ற கட்சி மறுசீரமைப்பு மாநாட்டிற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 40 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளதாம். சிலாபம் டொல்பின் ஹோட்டலில் இதற்காக 57 அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. கட்சியின் அமைப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்திய ஹைதராபாத்திலிருந்து வந்திருந்த நிபுணர்களுக்கு கொடுப்பனவுகளுக்கு மேலாக விசேட கவனிப்பும் இடம்பெற்றுள்ளது. மறுசீரமைப்பு ஆலோசனைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் வழங்கப்பட்டதாகவும், அதனை இ.தொ.கா உபதலைவரொருவர் மொழிபெயர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இங்கு உபதலைவர்கள் நான்குபேர் நியமிக்கப்பட்டமையும் கட்சிக்குள் அதிருப்தியை உருவாகியுள்ளதாம். இ.தொ.கா விற்கும் ஹைதராபாத்திற்கும் அப்படி என்ன நெருக்கம் என்று கேட்கின்றனர் பலர்.

-அம்பி-

# பற்றரியில் இயங்கும் தலைமை வேண்டாம் துணிவும் விவேகமும் கொண்ட தலைமையே வேண்டும்

மலையகத் தலைமைகள் அரசியல் பலம் எனும் பற்றரியில் இயங்கும் பொம்மைகளாக இருக்கக் கூடாது.

மலையக அபிவிருத்தியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட மக்கள் பலத்தால் இயங்கும் உறுதியான தலைமை உருவாக வேண்டும்.

வடக்கு கிழக்கில் தேசியத் தலைவர் பிரபாகரன் தனக்கென எந்த எதிர்பார்ப்புமின்றி தமிழர் தாயகத்துக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் தியாக சிந்தனையுடன் செயற்படுகின்றார். அவரை சர்வதேசமும் மதிக்கின்றது.

அதே போன்று மலையக மக்களின் மறுக்கபட்ட உரிமைகளை மீட்க வேண்டும். அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். சமூகத்தில் சம அந்தஸ்தையும் கௌரவத்தையும் பெற்று ஏனைய சமூகங்களுக்கு கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்க வேண்டும். இது யாசகமாகவோ அல்லது சலுகையாகவோ தேவையில்லை. நியாய பூர்வமான அங்கீகாரத்துடன் கிடைக்க வேண்டும்.

அதனைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய விவேகமும், துணிச்சலும் உள்ள தலைமை உருவாக வேண்டும்.

மலையக மக்களின் நிலைமையை நன்றாகத் தெரிந்தவர்கள் எத்தனை பேர்?

ஏனைய சமூகத் தலைவர்கள் தமது மக்களின் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் போது இவர்களின் நிலைமை எப்படி இருக்கின்றது.

* மலையக சமூகத்தின் நிலை என்ன?

* வடக்கு கிழக்கு சமூகத்துக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் தீர்வொன்று கிடைக்கும் போது மலையக சமூகத்துக்குக் கிடைக்கப் போகும் தீர்வு என்ன?

* அவ்வாறு கிடைப்பதற்கு மலையக சமூகம் முன்வைத்துள்ள கோரிக்கை என்ன?

இவற்றில் எதற்குமே மலையக சமூகத்திடம் விடை இல்லை.

மலையக சமூகத்திடம் இவற்றுக்கு விடை இல்லை என்பதை தெளிவாக அறிந்து கொண்டுதான் இலங்கையை மாறி, மாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்களும் வரைமுறையின்றி மலையக மக்களைப் பந்தாடிக் கொண்டிருக்கின்றன.

மலையகத்தில் இருக்கின்ற தலைமைகளும் சமூகத்தீர்வு என்பதைப்பற்றி சிந்திக்காமல் தமது சொந்தப் பிரச்சினைகளுக்கும், தமது கட்சிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காக மக்கள் வாக்குகளை வைத்து பேரம் பேசிக்கொண்டிருக்கின்றன.

ஆட்சி அமைக்கும் அரசுகளுக்கு பின்னால் சென்று அல்லது முட்டுக்கொடுத்து பெற்றுக்கொள்ளக் கூடிய சன்மானத்துக்காகவும் சலுகைகளுக்காகவும் அரசியல் நகர்வுகளை நிகழ்த்துகின்றார்களே தவிர ஏனைய சமூகங்களுக்கு இருக்கின்ற உரிமைகளும், வாய்ப்புகளும் மலையக சமூகத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என எப்போதாவது எவராவது பேரம் பேசியுள்ளார்களா?

இவற்றுக்கெல்லாம் விடை கிடைப்பதும் இல்லை. கிடைக்கப்போவதும் இல்லை. தீர்வும் விடையும் கிடைக்க வேண்டுமானால் இவற்றை தெளிவாக சிந்திக்கக்கூடிய - மலையக மண்ணையும் மக்களையும் நேசிக்கின்ற - அரசியல் அபிலாசைகளுக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்கும் விலை போகாத - மண்ணின் மைந்தர்கள் மக்கள் அமைப்பாக மலையகத்தில் மாற வேண்டும். அத்துடன் இந்த தியாக உள்ளங்களை அரவணைத்து வழிநடத்தக்கூடிய விவேகமுள்ள, துணிவுள்ள சமூகத் தலைமையும் மலையகத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

மலையக மக்களிடத்தில் ஒரு மாயை உண்டு, தேர்தலில் போட்டியிடுகின்றவர்களும் வாக்கு வாங்குபவர்களும் சமூக வழிகாட்டிகள், அவர்கள் மலையக மக்களுக்கு நிரந்தர தீர்வொன்றுக்காக குரல் கொடுப்பவர்கள் என்று.

ஆனால் மலையக மக்கள் பாவம். தேர்தலில் போட்டியிடுவதையும், அரசியலில் ஈடுபடுவதையும் சிலர் தொழிலாகவும், சிலர் பகுதி நேரத் தொழிலாகவும் செய்கின்றார்கள் என்பதை மலையக மக்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை.

எப்போது மக்கள் உணர்ந்து கொள்ளப் போகின்றார்கள்? மக்களுக்கு யார் உணர்த்துவது?

மலையகத்தில் கல்விமான்களும், சிந்தனையாளர்களும் அதிகரித்து வருகின்ற இந்த கால கட்டத்தில் இப்படி ஒரு நிலை இருப்பது மலையக சமூகத்துக்கு ஒரு பெரும் அவமானமாகும். மலையக சமூகத்தின் உண்மை நிலையையும், சமூகத்தை ஏலம் போட்டு உல்லாச வாழ்வு நடத்தும் அரசியல்வாதிகளின் சூழ்ச்சி மிகு சிந்தனையையும் வெளிப்படுத்தும் தார்மீகப் பொறுப்பு மலையகத்திலுள்ள புத்தி ஜீவிகளினதும் இளம் சிந்தனையாளர்களினதும் கைகளிலேயே உண்டு.

எத்தனை சக்திகள், அமைப்புகள் மலையகத்தில் தோன்றினாலும் அவை அடையப்போகும் இலக்கு என்ன? மலையகத்துக்கு பெற்றுக் கொடுக்கப் போகும் தீர்வு என்ன? இதை எந்த அமைப்பும் இது வரை முன்வைத்தாகவில்லை.

தேர்தல்களில் போட்டியிடு தற்கும், மக்கள் வாக்குகளால் மந்திரிகளாகத் தெரிவு செய்யப்படுவதற்கும் கொள்கை ஒன்று தேவையில்லை என்ற நிலை ஏற்பட வேண்டும்.

மலையகத்தில் இன்றும் சிந்தனையாளர்கள் உருவாகவில்லையா? மலையகத்தை நேசிக்கும் சிந்தனையாளர்கள் உருவாக இல்லையா? மலையகத்தை நேசிக்கும் உணர்வுமிக்க இளைஞர்கள் இல்லையா? அல்லது இவர்கள் இருந்தும் உணர்வற்றவர்களாக - துணிவும் தன்நம்பிக்கையும் இல்லதவர்களாக - வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா என ஏனையோர் சிந்திப்பதில் நியாயம் இல்லாமலும் இல்லை. நடைமுறையில் உள்ள சாதாரண அரசியல் நடவடிக்கைகள் சமூகத்தில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகளில் சிலவற்றை அவ்வப்போது தீர்க்கலாம். அது சமூகத்திற்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுக்கொடுக்கப் போவதில்லை.

எனவே மலையக மக்களுக்கு நிரந்தர தீர்வை உள்ளடங்கிய சமூகக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இது கட்டாய சமூகக் கடமை ஆகும். அவ்வாறு உருவாக்கப்படாவிட்டால் மலையக சமூகம் என்ற அடையாளமே இல்லாமல் போய்விடும்.

உருவாக்கப்பட்ட கொள்கையை சர்வதேச அரங்கில் ஒலிக்கச் செய்ய வேண்டும். எவர் அரசியல் செய்தாலும் இந்த பொதுக் கொள்கையை அடியொட்டி அரசியல் நகர்வுகளை நிகழ்த்த வழியுறுத்த வேண்டும். அன்றேல் பேரினவாதிகளின் அடக்குமுறை, அடிமைத்தனம், அச்சம் மற்றும் இரண்டாம் தரக்கணிப்பீடு என்ற கோரப்பிடியில் இருந்து என்றுமே விடுபட முடியாமல் போய்விடும்.

அதுமட்டுமல்ல , உருவாக்கப்படும் சமூகக் கொள்கைய அரசியல் பலம் என்ற பற்றரியில் இயங்கும் அரசியல் தலைமைகளால் நிச்சயம் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இவர்களால் வகுக்கப்படும் கொள்கை அடிப்படையில் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு சமூகத் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க முடியாது. ஏனெனில் இவர்கள் பற்றரியின் பலம் குறைந்தவுடன் கடிகாரம் நின்று விடுவது போல அரசியல் பலம் இல்லாமல் இவர்களால் இயங்க முடியாது. மேலும் கடிகார முள்ளைப் போன்று இவர்கள் எப்போதும் ஒரே திசையில ஓடிக்கொண்டிருப்பவர்கள். காலத்தையும் நேரத்தையும் ஓட்டிக்கொண்டிருப்பவர்கள்.

**-சுவேதாரன்-**

எனவே இவர்களிடத்தில் புதிய சிந்தனை உருவாகவும் முடியாது. உருவாக்கப் படும் சிந்தனைகளின் தாற்பரியத்தை அறிந்து செயற்படுத்தவும் முடியாது.

அரசியல் பலம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மலையக மக்களை ஒரு நிரந்தர தீர்வை நோக்கி வழி நடத்தக்கூடிய சமூகபண்பையும், சமூகத் தலைமையையும் அடையாளம் கண்டு வளர்த்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உருவாக்கப்பட வேண்டியது இன்றியமையாதொன்றாகும்.

இதில் மலையகத்திலுள்ள சிந்தனையாளர்களும், கல்விமான்களும், உணர்வுமிக்க இளைஞர்களும் இணைந்து துணிந்து துரிதமாக செயற்பட வேண்டும்.

அல்லது மலையக மக்கள் தமது தனித்துவத்தை, தன்மானத்தையும் தாரைவார்த்துவிட்டு தலைகவிழும் நிலையைத் தவிர வேறொன்றும் நிகழப்போவதில்லை.

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

''கோப்பையில் நெய்வடிகிறது என்று சொன்னால் அதைக் கேட்பவர்களுக்கு மதி என்ன மழுங்கியா போச்சி?''

இப்படிக் கூறிக் கொண்டே நற்பணி மன்றக் காரியாலயத்துக்குள் நுழைந்தார் அப்பாவு தலைவர். காரியாலயத்தில் தணிகாசலம் அண்ணனும் மற்றும் சிலரும் ஏதோ ஒரு விடயமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''வணக்கம் அண்ணே! ஏதோ முக்கிய விசயமாக பேசிக்கிட்டு இருக்கீங்க போல. நான் ஆறுதலாக வீட்டுக்கு வாரன்''.... என்றார் அப்பாவு தலைவர்.

''வணக்கம் வணக்கம். வாங்க தலைவரே! அப்படி ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. எல்லாம் பொது விடயங்கள் தான். இப்படி உட்காருங்கள்'' என அருகில் கிடந்த நாற்காலியைக் காட்டினார் தணி அண்ணன்.

''ஆமாங்க தலைவரே ஏதோ நீர் கொழும்புப் பக்கம் போனதாகக் கேள்விப்பட்டோம்''

''உண்மை தாங்க அண்ணே! அதைப்பற்றிப் பேசத்தான் வந்தேன். உல்லாசப் பிரயாண ஹோட்டல், வகை வகையான சாப்பாடு, தாகசாந்தி எல்லாமே தாராளமாக கிடைத்தன''.

''என்னமோ கட்சிக் கூட்டத்துக்கு போனதா சொன்னாங்க, நீங்க என்னடா, என்றால் பெரிய கலியாணச் சாப்பாட்டுக்குப் போன மாதிரி பெருமையடிக்கிறீங்க''.

''நான் ஒன்றும் பெருமை அடிக்கலீங்க அண்ணே! நடந்ததைத் தான் சொல்றேன். சத்தியமா கட்சிக் கூட்டம் தான் நடந்தது.''

''கட்சிக் கூட்டம் என்றால் கொழும்பில் உள்ள தலைமையகத்தில் நடத்தலாம் அங்கே தான் சகல வசதிகளுடனும் கடல் போல் இடம் கிடக்கே. அமைதியான இடம். அதுவும் இல்லை என்றால் அட்டன், கொட்டகலை என்று ஏகப்பட்ட வசதிகள் இருக்கும் போது ஏன் மலையகத்துடன் சிறிதும் தொடர்பில்லாத நீர் கொழும்புப் பக்கம் போனீர்கள்?''

''அது எல்லாம் மேலிடத்து விசயம். அதைப்பற்றி மூச்சு விடக் கூடாது. அந்த கூட்டத்துக்கான வரவேற்பு உபசாரம், உணவு அது இது, தங்குமிடம் எல்லாத்துக்கும் பல லட்சம் செலவாம். அது கூட நாங்க அதாவது அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் வழங்கும் சந்தாப்பணத்தில் தான் எடுக்கப்பட்டதாக அங்கே பேசிக் கொண்டார்கள்''



## அரசாங்க அமைச்சரே டம்மியானார் இந்த பிரதிகள் எம்மாத்திரம்?

''இது ஒன்றும் புதுமை இல்லையே! வழமையாக நடப்பது தானே! அதைவிடுங்க இவ்வளவு செலவு செஞ்சி அப்படி என்ன முக்கியமான கூட்டம் நடத்தப்பட்டது?''

''என்னங்க அண்ணே! அப்படிக் கேட்டுப்புட்டீங்க. அண்மைக் காலங்களாக எங்க தலைவர்மார் நடத்திய இராஜினாமா நாடகம், மேல் கொத்மலை பல்டி, அவசரகாலச்சட்டத்துக்கு ஆதரவாக கை தூக்கியது, ஜனாதிபதியிடம் மண்டியிட்டு மீண்டும் மந்திரிப் பதவிகளை வாங்கிக் கொண்டது அப்படி இப்படி என்று நடத்திய தில்லு முல்லுகளால் மலையகத்தில் பெரிய சரிவு ஏற்பட்டுப் போச்சி, இல்லீங்களா''

''அப்படி ஒரு நிலை ஏற்பட்டதை தடுத்து நிறுத்துவதற்காக ஆலோசனைக் கூட்டம் நடத்தி இருக்காங்க போல''

''அதுவும் ஒருபக்கம் சரிதான். ஆனால் கட்சியை ஸ்திரப்படுத்துவதற்காக கட்சியில் பல அதிகாரப் பரவலாக்கங்கள் இடம் பெற்றுள்ளன. புதிதாக நான்கு பிரதித் தலைவர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள்'' என்றார் அப்பாவு தலைவர்.

''என்ன தலைவரே சின்னப்பிள்ளை மாதிரிப் பேசுறீங்க. நம்ம சங்கத்திலாவது அதிகார பரவலாக்கல் செய்வதாவது. அதிகாரம் வெளியே போய்விடக் கூடாது என்று தானே தலைமைப் பதவியையும் செயலாளர் பதவியையும் ஒரே இடத்தில் வைத்திருக்கும் விதத்தில் யாப்பையே மாற்றினார்கள். அதைமறந்திட்டீங்களா?''

''ஆமாங்க அண்ணே! அதை மறந்திட்டேன். ஏற்கனவே ஒருவர் டம்மியான பிரதி தலைவராக இருக்கின்றார். இப்போ மேலும் நாலு பேர் நியமிக்கப்பட்டு இருக்காங்க. இப்ப அவுங்கக்குள்ள யாரு சிரேஷ்ட பிரதி என்ற சண்டை ஆரம்பித்து விட்டது.''

''அப்புறம் வேற என்னங்க அண்ணே நடக்கும்? அரசாங்கத்தால நியமிக்கப்பட்ட அமைச்சரையே சுதந்திரமாக இயங்கவிடாமல் ஒரு டம்மியாகவைச்சு இருக்கு கட்சியோட தலைமை.''

''அப்படீன்னா இந்த பிரதி அமைச்சர்கள் நியமனமும் வெறும் கண்துடைப்பு. அவர்களும் வெறும் டம்மிகள் தான். எந்த அதிகாரமும் இல்லாத பிரதிகள் தான் போலும்''

''இன்னும் ஒரு சங்கதி? தெரியுங்களா? இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியாவில் இருந்து வந்த பேராசிரியர்கள் தான் ஆலேசனை சொல்லி இருக்காங்க. கட்சிக்குள் ஏதும் பிரச்சினை என்றால் கட்சிக்காரங்களை கூப்பிடனும். சங்கத்தில ஏதும் பிரச்சினை என்றால் அங்கத்தவர்களைக் கூப்பிட்டு கேட்கனும். குறை நிறைகளை அறிந்து அவற்றை நீங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை எல்லாம் உட்டுப் புட்டு வெளி நாட்டில இருந்து இறக்குமதி செய்தவர்களால் என்ன ஆலோசனை வழங்க முடியும். அவுங்க பிலேன்ல ஏறிப்பறந்து போறதோட அவர்கள் வழங்கிய ஆலோசனைகளும் காற்றோடு காற்றாகப் பறந்து போய்விடும். இந்த டம்மிகள் மட்டும் தான் மிஞ்சும். எல்லாம் நம்ம சந்தாவுக்கு வந்தவினை.'' என்று கூறிவிட்டு அப்பாவு தலைவர் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டார்.

# மிமிக்ரி சோமு!

பொன்னேரி என்ற கிராமத்தில் தேனப்பன் என்ற விவசாயி இருந்தான். அவன் மகன் சோமு ஒரு சோம்பேறி. தன் மகன் ஒரு வேலையும் செய்யாமல் ஊர் சுற்றி வருவதைக் கண்டு மிகவும் வருந்தினான் தேனப்பன்.

ஒருநாள் ''சோமு! இப்படி நீ ஒரு வேலையும் செய்யாமல் ஊர் சுற்றிக் கொண்டே இருந்தால் எப்படி உருப்படுவாய்? ஏதாவது ஒரு வேலை செய்யக் கூடாதா?''

''ஆகா! வேலை செய்யத்தயார். என்ன வேலை செய்ய வேண்டும் என்று சொல்லுங்கப்பா....''

''நம் வயலுக்குப் போ. அது இப்போது அறுவடைக்குத் தயாராக இருக்கிறது. பயிரைக் குருவி, காக்கை போன்ற பறவைகள் வந்து பயிரை நாசப்படுத்தாமல் விரட்டு''

அன்று முதல் சோமு வயலுக்குப் போய் பரண் மீது அமர்ந்து. அங்கு வரும் பறவைகளை விரட்டலானான்.

அந்த வேலை அவனுக்குச் சலிப்பைத் தரவே அங்கு வரும் பறவைகளைப் போலவும், மிருகங்களைப் போலவும் தன் குரலை மாற்றிக் கதைக்க கற்றுக் கொண்டான். நாய், குதிரை, பூனை,மாடு போலக் கத்தி அதற்கு பதில் கொடுப்பது போல அந்தந்த மிருகங்களும் கத்துவதைக் கேட்டு அவன் மகிழ்ந்து வந்தான்.

ஒரு நாள் –

பொன்னேரி கிராமத்தின் ஜமீன்தார் ஒரு அழகிய குதிரை வாங்கியிருந்தார். அது யாருக்கும் அடங்காத முரட்டுக் குதிரையாக இருந்தது. அந்தக் குதிரையில் ஏறி ஜமீன்தாரின் மகன் பயணம் செய்தான். திடீரென்று குதிரை கட்டுக் கடங்காமல் போய் முரட்டுத்தனமாக ஓடியது.

வயலில் அமர்ந்து காவல் காத்துக் கொண்டிருந்த சோமு முரட்டுக் குதிரை ஒன்று ஓடி வருவதையும் அதில் ஜமீன்தாரின் மகன் அமர்ந்தபடியே 'என்னைக் காப்பாத்துங்க' என்று கத்திக் கொண்டு வருவதையும் கண்டான்.

உடனே பெண் குதிரையைப் போல் சோமு சப்தமிட்டான். உடனே குதிரை நின்று விட்டது. பெண் குதிரையைத் தேடியது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட ஜமீன்தாரின் மகன் குதிரையில் இருந்து கீழே குதித்தான்.



இதற்குள் ஊராரும் அங்கு வந்து சேர்ந்தனர். ஜமீன்தாரின் மகன் ''நீயா குதிரை போல அந்தப் புதரின் மறைவிலிருந்து கனைத்தாய்?'' என்று கேட்டார். அவனும் ''ஆம்'' என்றான்.

அப்போது அங்கு வந்த சோமுவின் அப்பா, ''இவன் என் மகன். பூனை, நாய், குதிரை, குருவி, கிளி, காக்கை போல எல்லாம் தன் குரலை மாற்றிக் கத்துவான். இந்த உருப்படாத வேலையைத் தான் இவன் செய்து வருகிறான்.'' என்றான்.

ஜமீன்தாரோ, ''இவன் இப்படி கத்துவது ஒரு அரியகலை. இம்மாதிரி யாராலும் கற்று கத்திவிட முடியாது. இன்று இவன் குதிரை போலக் கனைத்ததால்தான் என் முரட்டுக் குதிரை நின்றது. என் மகனும் உயிர் தப்பினான். இவன் இப்படி செய்வது வெட்டி வேலை அல்ல. தன் அரிய கலைத்திறனைக் காட்டி வருகிறான். இவன் போன்றவர்களை நாமெல்லாம் பாராட்டி இவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டும். நான் இவனுக்கு இந்த ஊர் ஓரமாயுள்ள பத்து ஏக்கர் நிலத்தை இனாமாக அளிக்கிறேன்.'' என்றார்.

ஊரார் யாவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அப்போது ஜமீன்தார் சோமுவிடம், ''அடுத்த ஆண்டு நான் யானை மீது ஏறி வருவேன். நீ யானை போலப் பிளிற வேண்டும் தெரிந்ததா?'' என்றார்.

சோமுவும் அப்படியே செய்வதாகக் கூறினான். அதன் பின் தனக்குக் கிடைத்த நிலத்தில் விவசாயம் செய்தும் தான் கற்ற அரிய கலையை அபிவிருத்தி செய்தும் எல்லாரையும் மகிழ்வித்து வந்தான்.

## காட்டில் வந்த ஆழிப்பேரலை!

கதை: இந்திரசித்தன் சித்திரம்: சாமி




## பொது அறிவு

★ கண்ணாடித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
நாத்தாட்டியா

★ கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது? வாழைச்சேனை

★ மிகப் பெரிய பூந்தோட்டம்?
பேராதனை

★ மிகப் பெரிய வனவிலங்கு சரணாலயங்கள் எவை? யால, வில்பத்து

★ நோர்வேயின் தலைநகரம் எது?
ஒஸ்லோ

★ இலவசக்கல்வி ஆரம்பித்த ஆண்டு எது?
1945 ஆம் ஆண்டு

*சி.பிரகாஸ்,*
*தரம் 8, மு/கலைமகள் வித்தியால்யம்.*

## உலகில் மிக உயர்ந்தவை

1. உலகின் மிக உயர்ந்த மலை எது?
இமயமலை (இந்தியா)
2. உலகின் மிக உயர்ந்த சிகரம் எது?
எவரெஸ்ட்
3. உலகின் மிக உயர்ந்த எரிமலை எது?
குவலாத்தி (உயரம் 19, 347 மீற்)
4. உலகில் மிக உயரத்தில் உள்ள நாடு?
திபெத் (உயரம் 36.31 மீற்)
5. உலகின் மிகஉயர்ந்த கோபுரம் எது?
C.N.டவர் (கனடா)


*அ.நிரோயன்*
*மு/முல்லைத்தீவு மகா வித்.*

## வினாவிடை

1. இலங்கையில் குறைந்த காலப்பொழுதில் பிரதமர் பதவியை வகித்தவர்?
திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க
2. இலங்கை எத்தனையாம் ஆண்டு ஐ.நா ஸ்தாபனத்தில் அங்கத்துவ நாடானது?
1962 ஆம் ஆண்டு
3. இலங்கை போக்குவரத்துச் சபை எத்தனையாம் ஆண்டு நிறுவப்பட்டது?
1958 ஆம் ஆண்டு
4. புதிய கல்விமறுசீரமைப்பு எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது? 1999 ஆம் ஆண்டு


*க.ஸ்ரீகிருஷ்ணவேல், பருத்தித்துறை*

## சிறார்களின் கைவண்ணம்







ஏ.சரன்யா
தரம் 5B
கிங்ஸ்லி
சர்வதேச
பாடசாலை



ம.கௌசிகன்
தரம் 8
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



வ.மங்களேஸ்வரி
தரம் 11
கிளி/தர்மபுரம் ம.வித்.



ந.ராஜா
கிளி/ஜெயபுரம்
அ.த.க.பாடசாலை

## விந்தை உலகம்

உலகத்திலே சாக்கடை சுத்தம் பண்ணும் வேலையை கூடச் செய் யலாம். ஆனால் நெதர்லாந்து நாட்டிலே உள்ள குரோலிங் மாநிலத்தில் மேயராக மட்டும் பதவி வகிக்கக் கூடாது என்று வெறுத்துப் போயிருக் கிறாராம் அந்த ஊர்மேயர்.

ஏன் இவ்வளவு நொந்து நூலாகப் போகக் கூடிய அளவுக்கு என்ன அவருக்கு நடந்தது?

அவருக்கு பஞ்சாயத்து பண்ணும்படி வந்த ஒரு சமாச்சாரம்தான் அவரை இவ்வளவுக்கு வெறுத்துப் போக வைத்திருக்கிறது.

அப்படி என்ன பெரிய பஞ்சாயத்து, நாங்கள் பார்க்காத பஞ்சாயத்தா என்று நினைக்கிறீர்களா? சமாசாரத்தை வாசித்துப் பாருங்கள். நீங்களும் நொந்து நூடுல்ஸ் ஆகிவிடுவீர்கள். இதுதான் சமாச்சாரம்.

குரோலிங் பகுதி கொஞ்சம் குஜிலிகள் நடமாட்டம் உள்ள பகுதி. அங்கே பிரதான தொழிலே விபச்சாரம்தான்.

ஆனால், எப்போதும் பொலிஸ்காரர்கள் ரோந்து வருவது வழக்கமாம். அதனால் தங்களிடம் வாடிக்கையாளர்கள் வரத் தயங்குகிறார்கள். என்றும் அந்தப் பகுதியில் பொலிஸாரின் ரோந்தை நிறுத்த வேண்டும் என்றும் விபசாரிகள் மேயரிடம் முறையிட்டனர்.

ஆனால் பொலிஸாரோ, நெதர்லாந்தில் உள்ள தப்பு தண்டா பண்ணும் ஆசாமிகள் எல்லாம் இந்த குஜிலிகளை சந்திக்க அடிக்கடி வருகிறார்கள். எனவே நாம் அங்கே ரோந்து செல்வது அவசியம், என்று அழிச்சாட்டியம் பண்ணுகிறார்கள்.

மேயருக்கு இரு பகுதியினரும் தொடர்ந்து தொல்லை கொடுக்கிறார்கள். நெதர்லாந்தில் விபச்சாரம் சட்டரீதியான தொழில் அதனால் அவர்களின் முறையீட்டிலும் நியாயம் இருக்கிறது. இந்த பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் மண்டையை பிய்த்துக் கொண்டிருக்கிறாராம் மேயர்

## வித்தியசமான படம்



படத்திலே உள்ளது.. என்ன மரமா...? அல்லது முகமா....? பார்த்தால் மர வடிவிலான முகம் போல் தெரிகிறது. இன்னொரு பக்கத்தால் பார்த்தால் முகம் வடிவிலான மரம் போல் தெரிகிறது. எது சரி...?



## ஐடியா

உங்கள் வளர்ப்புப் பிராணியை... உலாத்துவதற்காக கூட்டிச் செல்லும் போது இப்படியான குடையுடன் கூட்டிச் சென்றால் பிராணி நனையாது என்பது மட்டுமல்ல.... இப்படியான கண்ணாடி போன்ற குடை என்றால் பிராணி கால்களிலே நசுங்கி பிரியாணி ஆகிவிடுவதும் தடுக்கப்பட்டுவிடும் அல்லவா?




இலங்கையை சுற்றிப் பார்க்க அமெரிக்க அமைச்சர் ஒருவர் வந்திருந்தார். அவரை ரயிலிலே ஏற்றி இலங்கையின் பல பாகங்களையும் சுற்றிக் காட்டினார் இலங்கை அமைச்சர். அப்போது ரயில் தண்டவாள ஓரத்தில் ஒருவர் அசுத்தம் பண்ணிக் கொண்டிருப்பதை பார்த்த அமெரிக்க அமைச்சர் அதனை இலங்கை அமைச்சரிடம் சுட்டிக் காட்டி அருவருத்துக் கொண்டார்.

சில நாட்களில் இலங்கை அமைச்சர் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே அவரை வரவேற்ற அமெரிக்க அமைச்சர் அவரை ரயிலில் ஏற்றி அமெரிக்காவை சுற்றிக் காட்டினார்.

அப்போது அங்கேயும் ரயில் தண்டவாள ஓரத்தில் ஒருவர் அசுத்தம் பண்ணிக் கொண்டிருந்ததை கண்ட இலங்கை அமைச்சர் அதனைச் சுட்டிக் காட்டி "எமது நாட்டில் இவ்வாறான ஒரு காட்சியை காட்டி அருவருத்துக் கொண்டீர்களே! இங்கே உங்கள் நாட்டிலும் இப்படி நடக்கிறதே!" என்றார்.


அமெரிக்க அமைச்சருக்கோ அவமானமாகப் போய்விட்டது. உடனே ரயிலை நிறுத்தும்படி உத்தரவிட்டார். தமக்கு பாதுகாப்பாக வந்த ஒரு படைவீரனை அனுப்பி அந்த அசுத்தம் பண்ணிக் கொண்டிருந்த நபரை பிடித்து வாரும் என்று கட்டளையிட்டார்.

படைவீரனும் சென்று அவனைப் பிடித்து வந்தான். அவனைப் பார்த்து அமெரிக்க அமைச்சர் கேட்டார்...

"பொது இடத்தில் இப்படி அசுத்தம் பண்ணுகிறாயே நீர் யாரப்பா...?"


அந்த ஆள் சொன்னான்... "ஐயா... நான் அமெரிக்காவிலே உள்ள இலங்கையர்."

## ஜோக்ஸ்



## நெட் குறும்பு

தினமும் ஒரு கோப்பை மது குடித்தால் அது மருந்து என்கிறார்கள் ஆராச்சியாளர்கள். அதற்காக இம்மாம் பெரியகோப்பையிலா குடிப்பது....



## கண்ணாமூச்சி

கீழே காணப்படுபவை எல்லாம் ஏதோ நடுச்சந்தியில் - தெருவின் மத்தியில்- நடைபெறும் நிகழ்வுகள் என்றுதானே நினைக்கிறீர்கள். SORRY... அப்படி அல்ல இவை தெருவின் நடுவில் கீறப்பட்டுள்ள ஓவியங்கள். பார்த்தால் ஏதோ... உண்மையான நிகழ்வுகள் போல் தெரிகின்றன.







## 26 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

சேலம் சிறை வாசலில் உள்ளூர் தோழர் நா.ப.இராமசாமி போன்றோர் திரண்டிருந்தனர். அறிவுடன் இருக்கும் இரும்பொறைக்கு விடுதலை கிடைத்து விட்டதால் அவரை வரவேற்க அவர்கள் வந்திருந்தனர் என்று புரிந்தது.

வண்டியில் இருந்து இவர்கள் இறங்கியதைப் பார்த்தவுடன்அனைவரும் இவர்களை நோக்கி வந்தனர்.

இராமசாமி தான் பேசினார். "ஒண்ணும் கவலைப்படாதீங்கம்மா. இத்தனை பேரை காப்பாத்தியாச்சு... அறிவையும் சீக்கிரம் வெளிய கொண்டு வந்திரலாம். உள்ள போய் தம்பியையும் தைரியமாக இருக்கச் சொல்லுங்க" என்றார்.

இரண்டு நிமிடம் அவர்களிடம் நின்று பேசிவிட்டு உள்ளே சென்றனர். மகனைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பும் அதே நேரம் அவன் முகத்தைப் பார்ப்பதற்கே ஒரு வித அச்சமும்... என கலவையான மன நிலையில் இருந்தார் அற்புதம்.

மனு எழுதிக் கொடுத்து விட்டு அவர்கள் அழைக்கும் வரை ஒரு வித பதட்டத்திலேயே இருந்தார்.

'கண்டிப்பாக அவன் முன் அழுது விடக் கூடாது. அவன் மனம் தளர்ந்து விடாமல் இருக்குமாறு தைரியம் சொல்ல வேண்டும். என்ற வகையிலும் அவன் சோர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.'

மகனைச் சந்திக்க பலவகையிலும் தன் மனதை தயார்படுத்திக் கொண்ட போதிலும் உள்ளுக்குள் கலக்கமாகவே இருந்தது.

அதற்கேற்றால் போல் அறிவு முகத்தைக் கண்டவுடன் அதுவரை இருந்த உறுதியெல்லாம் குலைந்தது. கண்ணீர் ஆறாகப் பெருகியது,

'அறிவு! அறிவு!' வாய்விட்டு அழுதார்.

அன்பு, அருள் அனைவரும் அழத் துவங்கிவிட்டனர்.

அறிவு பேசவில்லை. அவர்கள் அழுவதைப் பார்த்தபடி அமைதியாக நின்றிருந்தான். சிறிது நேரத்திலேயே சுதாகரித்துக் கொண்டார் அற்புதம். முகத்தைத் துடைத்த படி நிமிர்ந்தார்.

அருளும் கூட கட்டுப்படுத்திக் கொண்டாள். அன்பைத்தான் யாராலும் ஆறுதல் படுத்த முடியவில்லை. அவளுக்கு எப்போதுமே தம்பி மீது பாசம் அதிகம். அதோடு மிக இளகிய மனம் படைத்தவள்.

"அழாதக்கா... இதோட முடியலைக்கா... மேல மனு போடலாம். நீ இப்படி அழுதா நான் எப்படி நிம்மதியாக இருக்கிறது? தைரியமாக இருக்கா..." தமக்கைக்கு ஆறுதல் கூறினான் தம்பி. கொஞ்சம் கொஞ்சமாக அவளது அழுகையும் அடங்கியது.

அம்மாவின் பக்கம் திரும்பினான். "அம்மா சென்னைக்குப் போய் நெடுமாறனய்யாவைப் பாருங்க. முடிஞ்சா வழக்கறிஞரையும் பாருங்க. தீர்ப்பு நகல் வந்த பிறகு படிச்சுப் பார்க்கணும். தைரியமாக இருங்க, அப்பாவைப் பார்த்துக்கோங்க." ஆறுதல் கூறி அனுப்பி வைத்தான்.

இவர்கள்வெளியே வரும் வரையில் இரும் பொறையை விடுதலை செய்யவில்லை. ஆணை இன்னமும் சிறைக்கு வந்து சேரவில்லை. வாயிலில் இருந்த தோழர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சோலையார் பேட்டை திரும்பினர்.

அன்று மாலையே விடுதலை உத்தரவு பெற்றவர்கள் வெளிவந்து விடுவார்கள் என்று தெரிந்தது.

இரவு 8 மணி தொலைக்காட்சி செய்தி அறிக்கையில் சென்னை சிறையிலிருந்து விடுதலையான சுபா சுந்தரத்தையும் ரெங்கநாத்தையும் காட்டினார்கள். சிறைவாசலில் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. அவர்களின் வாழ்க முழக்கங்களும் கேட்டன. அதைப் பார்க்கும் போது அற்புதத்திற்கு மனதை என்னவோ செய்தது. 'இதைப் போலவே மகிழ்ச்சியாகஎன் மகன் எப்போது வெளியே வருவான்? ஒரு வேளை வராமலே போய்விடுவானோ? அய்யோ! இல்லை அப்படிஎல்லாம் நடக்காது. வருவான். கண்டிப்பாக ஒரு நாள் வெளியே வருவான். அப்போது இதை விட பெருங் கூட்டமாக அவனை வரவேற்கலாம்....'



இறுகிப்போய் அமர்ந்திருந்தார் குயில்தாசன்

தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

அப்போது தான் சேலத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

சேலம் சிறையில் அறிவுடன் இருந்து இன்று விடுதலையாகியுள்ள இரும்பொறை நேராக சோலையார் பேட்டை வருவதாக ஒருவர் கூறினார்.

சிறையில் இருந்த காலத்தில் அறிவு நெருக்கமாப் பழகியது சங்கரிடமும் இரும்பொறையிடமும் தான். பூந்தமல்லி தீர்ப்புக்குப் பிறகு சங்கரை வேறு சிறையில் போட்ட போதே அறிவு மிகவும் வருந்தினான். இப்போது ஒரே துணையாக இருந்த இரும்பொறையும் விடுதலையாகி வெளியில். இந்தப் பிரிவை எப்படி என் மகன் தாங்கிக் கொள்ளப்போகிறானோ? அற்புதத்தின் மனம் விம்மியது.

'அதிலும் தனக்கு மட்டும் தண்டனை உறுதி செய்யப்பட்ட நிலையில் தன் உணர்வுகளைப் பகிர்ந்துக் கொள்ளவும் துணையின்றி எப்படி அல்லலுறுகிறானோ....' - நினைக்கும் போதே நெஞ்சம் பதறியது.

உடனே ஓடிச்சென்று மகனை அணைத்து மடியில் கிடத்தி ஆறுதல் சொல்ல மனம் பரபரத்தது.

இரவு.... கிட்டத்தட்ட நள்ளிரவு நேரத்தில் இரும்பொறை வந்து சேர்ந்தார். வந்தது முதல் குனிந்த தலைநிமிராமல் குலுங்கிக் குலுங்கி அழுதவாறு இருந்த அவரைப் பார்த்து அனைவரும் கதறிவிட்டனர்.

"அம்மா... நான் உள்ளேயே இருந்து அறிவு வெளிய வந்திருந்தா பரவாயில்லையே... என் தம்பிய தனியா விட்டுட்டு வந்துட்டேனே..." கதறினார். தலையிலடித்துக் கொண்டு அழுதார்.

முதலில் சுதாகரித்தவர் அற்புதம்தான்.

"சரிப்பா விடுப்பா... மறு ஆய்வு மனு போடலாம்னு ஐயா சொல்லி இருக்காரு... வந்திருவான்.... அறிவும் சீக்கிரம் வந்திருவான். நீ வருத்தப்படாதப்பா..."-என்று ஆறுதல் கூறினார்.

மறுநாள் பொழுது முழுவதும் ஆறுதல் கூற வந்தவர்களால் போனது. வெளியூர்களிலிருந்தும் நிறைய பேர் வந்திருந்தனர். சென்னையில் இருந்து சுப.வீரபாண்டியனும், மணிமேகலையும் வந்திருந்தனர்.

'கவலைப் படாதீங்க அறிவுக்கு ஒன்றும் ஆகாது, அதே ஆறுதல் வார்த்தைகள், ஒன்பது ஆண்டுகளாக ஓயாமல் கேட்டுக் கொண்டிருப்பவை.

மறுநாள் அனைவரும் சென்னை செல்லலாமெனக் கூறினார் அற்புதம். பின் அனைவரும் வேண்டாம், இரும்பொறையும் அற்புதமும் மட்டும் செல்லலாமென முடிவெடுத்தனர்.

அதன் படி முறுநாள் சென்னை சென்று நெடுமாறனை சந்தித்தனர்.

"நாளைக்கு நம்ம வழக்கறிஞர் நடராஜன் பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறாரும்மா... அது முடிஞ்ச உடன மறு ஆய்வு மனு போடுறதுக்கான வேலைகளை ஆரம்பிக்க வேண்டியது தான். தீர்ப்போட நகல் இன்னும் நம்ம கைக்கு வந்து சேரலை. அதுக்குத்தான் காத்திருக்கோம். மத்தபடி தண்டனையை நிறுத்தி வைப்பதற்கான மனு போடுற வேலை ஏற்கனவே துவங்கியாச்சு - நீங்க ஒண்ணும் பதறாதீங்கம்மா... நம்பிக்கையோட இருங்க... நாளைக்கு அந்தப் பத்திரிகையாளர் சந்திப்புக்கு நீங்களும் வாங்களேன்.... வழக்கறிஞர் என்ன சொல்றாருன்னு நேருலேயே கேட்கலாம். அதோட வழக்கறிஞரை சந்திச்சு பேசுனா மாதிரியும் இருக்கும்" - என்றார்.

"சரிங்கைய்யா நாளைக்கு கண்டிப்பா வந்திடறேன்."

விடைபெற்றுக் கொண்டு கிளம்பினர்.

இரவு சௌரி வீட்டில் தங்கினர். அற்புதத்தின் மனநிலையைப் புரிந்தவர்களாக சௌரியும் மணிமேகலையும் அவரிடம் அதிகம் பேசவில்லை.

"என்னம்மா... எப்படி இருக்கீங்க... கவலைப்படாதீங்க... தைரியமா இருங்க"- என்ற தோடு சரி. மீண்டும் மீண்டும் பேசி அவரது வேதனையை அதிகப்படுத்த அவர்கள் விரும்பவில்லை.

அற்புதமும் இரும்பொறையும் காலையிலேயே கிளம்பி பத்திரிகையாளர் சந்திப்பு நடந்த இடத்திற்கு போய் விட்டார்கள். பத்திரிகையாளர் பெரும் திரளாக வந்திருந்தனர். அற்புதத்தைக் கண்டவுடன் அடையாளம் தெரிந்து கொண்ட சிலர் வந்து பேசவும் பேட்டி எடுக்கவும் முற்பட்டனர். மறுத்து விட்டார் அற்புதம். சாதாரணமாகவே பத்திரிகையாளர்களிடம் பேச அஞ்சுவார். அதிலும் இந்த நேரத்தில் எதுவும் பேசவே பயமாக இருந்தது. அன்று வெளிவந்த ஒரு பத்திரிகையில் வேறு சிறையில் அறிவு பேட்டி அளித்திருந்ததாக ஒரு பொய்ச் செய்தி வெளியிட்டிருந்தனர். அப்படியெல்லாம் சிறைக்குள் சென்று யாரும் பேட்டி எடுத்துவிட முடியாது. அப்படி நடந்திருந்தால் அது சிறைச் சட்டங்களை மீறிய செயலாகும். அதனால் முதலில் பாதிக்கப்படுவது அந்தச் சிறையின் கண்காணிப்பாளராகத்தான் இருக்க முடியும். ஆகையால் சிறை அதிகாரிகள் அப்படி ஏதும் நடந்து விடாமல் மிகுந்த கவனத்தோடு இருப்பார்கள். அதோடு அறிவும் இப்படி பொறுப்பில்லாமல் பேட்டிக் கொடுக்கக் கூடியவன் அல்ல.

காலையிலேயே அந்தப் பத்திரிகையின் ஆசிரியரை தொலைபேசியில் அழைத்து விவரம் கூறி அச் செய்திக்கு மறுப்பு போடும் படிமிக கண்டிப்புடன் நெடுமாறன் கூறியதாக கேள்விப்பட்ட பிறகுதான் அற்புதம் மனம் அமைதியானது. நெடுமாறனும் பத்திரிகையாளர் சந்திப்பு துவங்குவதற்கு முன், அந்த பொய்ச் செய்திக்கு ஒரு மறுப்பு எழுதிப் போடும் படி அற்புதத்திடம் கூறினார்.

எப்படித் தான் இப்படி அடிப்படையான சட்டத்திட்டங்களையே புரிந்து கொள்ளாமல் துணிந்து பொய்ச் செய்தி வெளியிடுகிறார்களோ என்று அற்புதத்திற்கு ஆச்சரியமாக இருந்தது.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# கால்க்கட்டு.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஒருத்தி கல்யாணமாகி கனடா போன ஆறாம் மாதத்தில் பன்னிரண்டாம் மாடியில் இருந்து குதித்துக் கொண்டாள். அல்லது தள்ளி விடப்ப்பட்டாளா என்பது தெரியவில்லை" என்று அவள் சொல்லி இருந்தாள். எனக்கும் எத்தனையாம் மாடி கிடைக்குமோ?

இந்த நேரத்தில் இது என்ன அபத்தமான சிந்தனை. அதிலிருந்து விடுபட நினைத்தாள். அரிசி போட ஆயிரம்பேர் கியூவில் நிற்கிறார்கள். நிறைகுடமாய்ச் சிரித்தபடி அப்பா மயில்வாகனத்தார் அங்குமிங்கும் ஓடித் திரிகிறார். பாரத்தை இறக்கி வைத்த திருப்தி அவரிடத்தில்.

தலைப்பாகைக்குள் நிறைகின்ற அரிசியை தட்டிவிட்ட ஆச்சிக்கு மட்டுமல்ல அனைவருக்கும் அதிர்ச்சி. தலைப்பாகை மட்டுமல்ல தலைமுடியும் விக்குடன் கழன்றுவிழ மொட்டைத் தலையாய் மாப்பிள்ளை அவசர அவசரமாக மீண்டும் விக்கை இழுத்து மாட்டுகிறார்.

இது என்ன அபசகுணமா?

இதை ஒரு அதிர்ச்சியாக எடுக்கும் மன நிலையில் ஜெயா இருக்கவில்லை. இனி என்ன எல்லாம் முடிந்துவிட்டது. புல்லானாலும் புருஷன் என்கின்ற மனநிலைக்கு அவள் வந்துவிட்டாள். சிதைந்துவிட்ட மனதில் மீண்டும் ஒரு கோவில் கட்டுவதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

தனது நிலைமையை சதீஸ் அறிவான். அவன் தன்னை மனதார மன்னிப்பான் என அவள் நம்பினாள். தனது அண்ணன்மாரிடம் மாட்டுப்பட்ட ஒரு பெண்ணுக்கு இத்தகைய இக்கட்டு உருவாகி இருந்தால் நிலைமை இப்படியா இருந்திருக்கும்? கடத்தல் கொலை கொடூரம் என்றெல்லாம் போய் முடிந்திருக்கும்.

"வலது காலை எடுத்து".... மாமியாரின் கட்டளை சற்று காரமான தொனிதான். "இதுகளையெல்லாம் யாழ்ப்பாணத்திலை வைச்செண்டால் ஒருமாதிரி சமாளிச்சிடலாம். தனிச்சு அமெரிக்காவிலை போய்...... அவ்வளவு லேசில்லை."

ஒருவித இனம் புரியாத பயம் மனதில் பரவாமல் இல்லை.

கரு: பாணபத்திரன் **நாட்டுக்கோர் நல்லதம்பி** உரு: சாமி



# கூட்டணிக் கட்சிகளை மிதிக்கும் கருணாநிதியின் மனோபாவம் ஜெயலலிதாவுக்கு நன்மை தரும்


தி.மு.க. தலைவர்தான் தமிழகத்தின் மிகமுதிர்ந்த அரசியல்வாதி. அவரது அரசியல் அனுபவத்தின் மூலம் ஜெயலலிதா இன்னும் கற்றுக்குட்டியே கற்றுக்குட்டிதான். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆனால், அரசியல் தப்புக்கணக்குகள் போட்டு அரிய சந்தர்ப்பங்களை நழுவவிடுவதில் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதியேதான். இதற்கு ஒன்று இரண்டல்ல எண்ணற்ற உதாரணங்கள் உண்டு.

இந்தத் தப்புக்கணக்குகளில் முதன்மையானதும் முதலாவதானதும் கருணாநிதியின் அரசியல் வாழ்வையே ஒருகட்டத்தில் கேள்விக் குறியாக்கியதுமான தப்புக் கணக்கு, எம்.ஜி.ஆர் பற்றி கருணாநிதி போட்ட தப்புக்கணக்காகும்.

தி.மு.கவை கட்டி எழுப்ப பாடுபட்ட அண்ணா, சம்பத், கண்ணதாசன், நாவலர் நெடுஞ்செழியன், எம்.ஜி.ஆர், கருணாநிதி ஆகியோரில் அண்ணா 1967 – 1969 வரை இரு ஆண்டுகள் தி.மு.கவின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் பதவி வகித்தபின் திடீரென மாரடைப்பால் காலமானார். மகுடம் இதனால் கருணாநிதியை வந்தடைந்தது. அண்ணா காலத்திலேயே கண்ணதாசனும், சம்பத்தும் அண்ணாவுடன் முரண்பட்டு வெளியேறிவிட்டதால் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் எம்.ஜி.ஆரை ஒதுக்கும் கருணாநிதியின் திட்டம் படுதோல்வி கண்டது.

1973 ஆம் ஆண்டு தனிக்கட்சியாக அ.தி.மு.க தொடங்கப்பட்டது. 4 ஆண்டுகள் சென்ற பின்புதான் முதலாவது தேர்தலை அ.தி.மு.க எதிர்கொண்டது. அதுவரை கட்சியை வளர்த்து எந்தப்பதவி கிடையாத நிலையிலும் அதைக் கட்டிக்காத்த எம்.ஜி.ஆர் 1977இல் தேர்தலில் அமோக வெற்றிகண்டார். தொடர்ந்து 1980இல் இந்திராகாந்தி – தி.மு.க. கூட்டணியில் அவரது ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டபோதும் அவர் மீண்டும் அடுத்து வந்த தேர்தலிலும் வென்றார். பின்னர் காங்கிரஸுடன் நட்புக் கொண்ட எம்.ஜி.ஆர் 1984இல் தனது சுகவீனத்தைக்காட்டி மறுபடியும் தேர்தலில் வெற்றிவாகை சூடினார். ஆக தொடர்ந்து மூன்று சட்டசபைத் தேர்தல்களை வென்றவர் அவர் எனினும், ஒவ்வொரு முறையும் முழு 5 ஆண்டுகளும் பதவியில் இருக்க எம்.ஜி.ஆருக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.



முதலில் 1977இல் அமைத்த ஆட்சி 3 ஆண்டுகளில் இந்திராவால் கலைக்கப்பட்டது. 1980இல் வென்று அமைத்த ஆட்சி 5 ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டு குறைவாக 1984இல் தேர்தலை தாமாக முன்வந்து நடத்தியதால் 4 ஆண்டுகளுடன் முடிந்தது. கடைசியாக 1984இல் அமைத்த ஆட்சி 5 ஆண்டுகளுக்கு 2 ஆண்டுகள் இருக்கும்போதே எம்.ஜி.ஆரின் மரணத்துடன் முடிந்தது. எம்.ஜி.ஆர் மட்டும் 3 தடவைகள் தொடர்ந்து வென்று முழு 15 ஆண்டுகளும் ஆண்டிருந்தால் அதற்குப் பிறகும் உயிரோடு இருந்திருந்தால் தி.மு.கவின் கதி என்னவாகியிருக்கும்?

எம்.ஜி.ஆர் 70 வயதில் காலமானார். இன்று கருணாநிதி 81 வயதைத் தொட்டுள்ளார். 81 வயதுக்கு எம்.ஜி.ஆர் வாழ்ந்திருந்தால் கருணாநிதி வேறு தொழிலுக்குப் போக வேண்டியிருந்திருக்கும். ஆக கருணாநிதி போட்ட முதல் தப்புக் கணக்கின் விளைவுகள் என்னவென்று இதிலிருந்து புலனாகும்.

12 ஆண்டுகள் பதவி இழந்திருந்த கருணாநிதி எம்.ஜி.ஆர் மரணத்தால் அ.தி.மு.க. இரண்டாக உடைய மீண்டும் 1989 தேர்தலில் வென்றார். கட்சிக்கு மீண்டும் உயிர் வந்தது. ஆனால், அந்தோ ஸ்டாலினை முன்னிறுத்தும் முயற்சியில் வைகோவை 1993இல் உதறினார். இன்னொரு எம்.ஜி.ஆராக மாற வைகோவுக்கு இயலாவிட்டாலும் தி.மு.கவின் வாக்குவங்கியை அரித்து தி.மு.கவின் வெற்றியை வைகோ பல சந்தர்ப்பங்களில் பாதிக்கவே செய்தார்.

கால ஓட்டத்தில் வைகோ ஓரிரு ஆசனங்களை வென்றார். 1996இல் தேர்தலில் படுதோல்வியுற்ற ஜெயலலிதா தன்மீதான வழக்குகளால் திக்குமுக்காடிய நேரம் 1998 லோக்சபா தேர்தல் வந்தது. இந்தத்தேர்தல் தான் தமிழக்கதில் பா.ம.க, ம.தி.மு.க, பா.ஜா.க ஆகிய மூன்று கட்சிகளும் ஒரு பரவலான அங்கீகாரத்தைப் பெற காரணமான தேர்தலாயிற்று.

தோல்வியால் திணறிய 'ஜெ' இம் மூன்று கட்சிகளையும் சேர்த்துக் கூட்டணி அமைத்தார். பெருவெற்றியும் வென்றார். வைகோ கட்சி மத்திய அமைச்சரவையில் முதல் முறையாக இடம்பெற்றது.

1999இல் பா.ஜ.க. கூட்டணியை விட்டு 'ஜெ' வெளியேற தி.மு.க. உள்ளே வந்தது. வரலாற்றில் முதன்முறையாக தி.மு.க, ம.தி.மு.க. ஓரணிக்கு தற்செயலாக வந்துசேர்ந்தன. சென்றமுறை 4 லோக்சபா ஆசனங்களை ம.தி.மு.க. வென்றிருந்ததால் அந்த 4 இடங்களை 1999தேர்தலிலும் ஒதுக்கவேண்டியதாயிற்று தி.மு.கவுக்கு.

ம.தி.மு.கவுக்காக பரிந்துபேச பி.ஜே.பி. வேறு இருந்தது. இவ்வாறு ம.தி.மு.கவின் முக்கியத்தும் அதிகரிக்கலானது. எனினும், 2001சட்டசபைத் தேர்தலில் ம.தி.மு.கவுக்கு போதிய தொகுதிகளை ஒதுக்க கருணாநிதி திடீரென மறுத்தார். வைகோ – கருணாநிதி உறவு மீண்டுமொருமுறை கசந்தது.

ம.தி.மு.க. மற்றைய அணியான அ.தி.மு.க – காங்கிரஸ் அணியிலும்

## பக்கத்து வீடு

சேராமல் தனித்துப் போட்டியிட்டது. 234 சட்டசபைத் தொகுதிகளிலும் ஒன்றில்கூட ம.தி.மு.க வெல்லமுடியவில்லை.

ஆனால், தி.மு.க தோற்ற தொகுதிகளில் 80 சதவீதமானவற்றில் ம.தி.மு.கவின் வாக்குகளை சேர்த்தால் தி.மு.க. வென்றிருக்கும் என்ற உண்மை தெளிவானது. என்ன செய்வது? கருணாநிதியின் மூத்த அரசியல் ஞானம் காரணமாக அ.தி.மு.க. எதிர்பாராதவிதமாக வென்று பதவிக்கு வந்தது.

இவ்வாறு தப்புத்தப்பாகத் திட்டம் போட்டு கூட்டணித்தலைவர்களை அறுக்கும் போக்கு கருணாநிதியிடம் அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்தால் தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி பாதிக்கப்படும். தற்போது காங்கிரஸ் கட்சிக்கு 30 எம்.எல்.ஏக்கள் சட்டசபையில் உள்ளனர். பா.ம.கவுக்கு 21 பேர் உண்டு. இந்த இரு கட்சிகளும் தி.மு.க. அணியிலுள்ளன. ம.தி.மு.க. வேறு இருக்கிறது. ம.தி.முகவுக்கு ஒரு எம்.எல்.ஏயும் இல்லை என்றாலும், அதற்கும் இடங்களை ஒதுக்கத்தானே வேண்டும். பா.ம.க. இம்முறை அதிக இடங்களைக் கோரலாம். கிடையாவிட்டால் அ.தி.மு.க. அணியில் சேருவோம் என மிரட்டும் திட்டமும் பா.ம.க. தலைவர் ராமதாசிடம் உண்டு.

**-எஸ்.சுரேந்திரஜித்-**

பா.ம.க வன்னியரின் சாதிக்கட்சி என்பதால் வன்னியரின் வாக்குகள் அ.தி.மு.க அணிக்கு தொகையாகச் சென்று சேரும். அவ்வாறு நடந்தால் தி.மு.கவின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும். இதனால் காங்கிரஸுக்கு வழங்கும் இடங்களைக் குறைக்க கருணாநிதி திட்டமிடுவதாகத் தெரிகிறது. மத்தியில் ஆள தி.மு.கவின் ஆதரவு மிக அவசியம் என்பதால் எந்த அவமதிப்பையும் காங்கிரஸ் சகித்துத் தான் ஆக வேண்டும் என்ற நிலை உண்டு. ஆனால், எதற்கும் ஒரு எல்லை உண்டே! ஆக தி.மு.க அணி சலசலக்கிறது. ஜெயலலிதாவுக்கு இது மிக உவப்பான செய்தி.

## இலக்கியப் போட்டி – 2005

**கப்டன் வானதியின் பதின்நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கப்டன் வானதி வெளியீட்டகம் நடத்தும், கவிதை, சிறுகதை, கட்டுரை, குறுநாவல் மற்றும் ஓவியப்போட்டிகள்.**

போட்டி நிபந்தனைகள்:–

* படைப்புக்கள் தமிழர் தேசிய விடுதலை, சமூக விடுதலை என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டமைதல் வேண்டும்.
* கதவிதைகளாகவோ, மரபுக் கவிதைகளாகவோ, புதுக் கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமல் அமைய வேண்டும்.
* சிறுகதைகள் 06 பக்கங்களுக்கு (தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
* குறுநாவல்கள் 60 பக்கங்களுக்கு (தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
* கட்டுரைகள் 10 பக்கங்களுக்கு (தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைவதோடு தரவுகள் உண்மையானதாக இருத்தல் வேண்டும்.
* ஓவியங்கள் தட்டச்சுத்தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.
* ஒருவர் எத்தனை படைப்புக்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* படைப்புக்கள் அனைத்தும் தட்டச்சுத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவான கையெழுத்திலோ அல்லது தட்டச்சுப் பதித்தோ அனுப்புதல் வேண்டும்.
* அனுப்பும் படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாகவோ, வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டவையாகவோ இருத்தல் கூடாது.
* அனைத்துப் படைப்புக்களும் தபால் மூலமே அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* படைப்பாளிகள் பெயர், முகவரி என்பவை தனித்தாளில் தெளிவாக எழுதி இணைக்கப்படல் வேண்டும்.
* நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவர்களும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
* நிபந்தனைகளுக்கு அமைவாக வந்துசேரும் படைப்புக்களே போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
* போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.
* நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

பரிசுகளை வெல்ல இன்றே தயாராகுங்கள்:

போட்டி முடிவு திகதி: 31.03.2005

படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:–

"இலக்கியப் போட்டி 2005"
கப்டன் வானதி வெளியீட்டகம்,
இல.61, கனகபுரம்,
கிளிநொச்சி.

குறிப்பு: முடிவு திகதி 15.04.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது

## மு.காவில் தொடரும்........

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதகமாகிப் போனது என்பதை மு.கா. உயர்பீடம் உணர்ந்து விட்டது.

"பிரதிவாதிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்காமல் அவர்கள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டதும், அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமையும் இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு முரணானது" என்றே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அதனால், சட்ட நுணுக்கங்களுக்கேற்ப றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், அமீரலி, ஹுஸைன் பைலா ஆகிய நால்வரையும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கவும், அவர்கள் வகிக்கும் எம்.பி.பதவிகளை வறிதாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேவேளை, தமது எம்.பி.பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இன்னும் சில நாட்களுள் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்வதற்கான ஆயத்தங்களில் அந்நால்வரும் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும் வழக்கில் யார் வென்றாலும், தோற்றாலும் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை அது ஒட்டுமொத்த தோல்வியாகவே அமையும். கடந்தகால வரலாறுகள் அதனையே எமக்கு உணர்த்துகின்றன. தனிநபர் வெற்றி – தோல்வி சமூகத்தையே பாதித்து வருகிறது. அதனால், ஒற்றுமை என்பதற்குப் பதிலாக முரண்பாடுகளும், சண்டைகளும், பிளவுகளுமே தொடர்கின்றன.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின்மறைவையடுத்து ஏற்பட்ட தலைமைத்துவப் போட்டி, நுஆ கட்சி விவகாரம், மு.கா. தலைவராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவை மாற்று அணியினர் பிரகடனம் செய்தமை, ஹாபீஸ் நாஸீர் அஹமட் சர்ச்சை, அதாவுல்லா அணிப் புரட்சி எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் காலத்தை வீணாகக் கழித்து வருகின்ற முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் பல வழக்குகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டிருக்கிறது.

இது நிச்சயமாக முஸ்லிம் சமூகத்திற்கு ஆரோக்கியமான தீர்வைத்தராது. மேலும் மேலும் முரண்பாடுகள் வளர்ந்து – சமூகத்தை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். நீதிமன்றில் முஸ்லிம் தலைவர்கள் கைகட்டிக் கொண்டு பரஸ்பரம் குற்றம் சுமத்தி – தமக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக சமூகத்தையே காட்டிக் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இம்முயற்சிகளை உடனடியாகக் கைவிட்டு ஒற்றுமைக்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். இதுவே முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# முக்கால் நிர்வாணத்துக்கு எதிர்ப்பு



ஜப்பான் நாட்டில் சுமோ மல்யுத்த வீரர்கள் இடுப்பில் ஒரு துணியை மட்டும் கட்டிக் கொண்டு மல்யுத்தம் செய்வார்கள். இப்படி முக்கால் நிர்வாணமாக நின்று கொண்டு சண்டை போடும் போது சிறுவர்களும், சிறுமிகளும் கூச்சப்படுகிறார்கள். அதனால், இளந் தலைமுறையினர் இந்த சுமோவை கற்றுக்கொள்ள முன்வருவது குறைந்து விட்டது.

இதனால் சுமோ அமெச்சூர் அசோசியேஷன், உள்ளாடை அணிந்து கொண்டு சுமோ சண்டை போட அனுமதித்து உள்ளது.

இதற்கு தொழில் முறை சுமோ கலைஞர்கள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்து உள்ளது. டோக்கியோவில் உள்ள தேசிய ஸ்டேடியத்தில் உள்ளாடை அணிந்து கொண்டு சுமோ வீரர்கள் மல்யுத்தம் செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று அந்தச் சங்கம் அறிவித்து உள்ளது.


இப்பொழுது இலங்கையில்

அக்யூரேட் 007
ஜாக்குவார் 009

சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்

Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
& Retailers



SOLE DISTRIBUTORS

OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel : 2336720, 2327168 Wholesale : 2384131
Fax : 2326961 E-mail : oceanick192@yahoo.com



இப்பொழுது வெள்ளவத்தையில்...



தமிழ் பேசும் மக்களின்
தன்மான பத்திரிகைகளான

உதயன்
சுடர் ஒளி
THE SUDAR OLI

கிளைப் பணிமனை

379 முதலாம் மாடி,
காலி வீதி,
கொழும்பு-06.

தொ.பே:- 011 4528699, 0714 150300
(ஹோட்டல் சப்பயருக்கு சமீபமாக)



அன்புக்கு அம்மா
வெண்மைக்கு
நிள்மா




AAEJEY CONSUMER COMPANY
95, Jayantha Weerasekara Mawatha,
Colombo - 10. Tel : 011-2458699,
Fax: 011-4605720



திருகோணமலையில்...

சுடர் ஒளி THE SUDAR OLI உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399666 – 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...






யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



குமரகுரு



புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.

குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
TEXTILE & FANCY HOUSE

Tel: 021 228 5971

Yarl Road, Kilinochchi.


இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஏப்ரல். 03 ஆம் திகதி வெளியிடப்பட்டது.